அ.கீ.சு.நூ. வெளியீடு : எண் : 451
தமிழ் நூல் வெளியீடு : எண் : 126

பழந்தமிழ்க் கதைகள்

பதிப்பு, ஆங்கில மொழிபெயர்ப்பு, எழுத்துப்பெயர்ப்பு :
முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை-600 005

© அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
2001

பழந்தமிழ்க் கதைகள்

பதிப்பு, ஆங்கில மொழிபெயர்ப்பு, எழுத்துப்பெயர்ப்பு :

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்

எம்.ஏ. (தமிழ்), எம். ஏ. (ஆங்.), பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி.,

காப்பாட்சியர்

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

சென்னை-600 005

© அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

2001

அ. கீ. சு. நூலக வெளியீடு எண் : 451

தமிழ் நூல் வெளியீடு எண் : 126

முதற் பதிப்பு 2001

பிரதிகள் 500

பழந்தமிழ்க் கதைகள்

© தமிழ்நாடு அரசு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

பதிப்பு, ஆங்கில மொழிபெயர்ப்பு :

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்

காப்பாட்சியர்

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

வெளியீடு :

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

சென்னை-600005

விலை : ரூ.

அச்சிட்டோர் :

தமிழ்நாடு அரசு

தொல்லியல் துறை

தரமணி, சென்னை-600113

ANCIENT TAMIL STORIES

Editing, English Rendering and Transliteration :

Dr. S. SOUNDARAPANDIAN

M.A. (Tamil), M.A.(Eng.), B.Ed., Dip. Sk., Ph.D.,

Curator

Government Oriental Manuscripts Library

Chennai - 600 005

©

Government Oriental Manuscripts Library

2001

First Edition 2001
No. of Copies : 500

ANCIENT TAMIL STORIES

© Government Oriental Manuscripts Library

Edited and Translated by :
Dr. S. Soundarapandian
Curator
Government Oriental Manuscripts Library

Price : Rs.

Published by :
Government Oriental Manuscripts Library
Chennai - 600 005

Printed at :
Department of Archaeology
Tharamani, Chennai - 600 113

பொருளடக்கம்

		பக்கம்
	பதிப்புரை	
	INTRODUCTION	
1.	சுவர்க்கோழியும் எறும்பும் ...	1
2.	காகமும் நரியும் ...	7
3.	எருதும் தவளையும் ...	11
4.	ஆட்டுக்குட்டியும் ஓநாயும் ...	15
5.	குடத்தியும் ஆட்டுக்குட்டியும் ...	19
6.	சிங்கமும் ரிஷபமும் ...	25
7.	சிங்கமும் கழுதையும் ...	31
8.	சிங்கமும் எலியும் ...	35
9.	சிங்கமும் பல மிருகங்களும் ...	39
10.	வெகு ஆசை வெகு நஷ்டம் ...	43
11.	புறாவும் எறும்பும் ...	49
12.	ஓநாயும் நாரையும் ...	55
13.	மண் சாலும் இரும்புச் சாலும் ...	59
14.	முப்பித்தோ தேவனும் தவளைகளும் ...	63
15.	கிழக்குருவியும் அதன் இனத்தாரும் ...	69
16.	ஓநாயும் நாயும் ...	75
17.	வெள்ளிப்பெட்டி சுமக்கிற கழுதையும் கோதுமைப் பெட்டி சுமக்கிற கழுதையும் ...	79
18.	திருடன் பேரிலுகளம ...	83
19.	ஆலமரமும் நாணலும் ...	89
20.	பஞ்செடுக்கிற கழுதையும் உப்பெடுக்கிற கழுதையும் ...	93
21.	காக்கையும், பாம்பும், நரியும் ...	97

22. நரியும் நாரையும் ... 101
23. மானும் ஆடும் ... 105
24. நரியும் முந்திரிப் பந்தலும் ... 111
25. ஆடும், அதன் குட்டியும், நரியும் ... 115
26. கழுவும் நரியும் ... 119
27. எலிராசாவும் அதன் சேனையும் ... 127
28. மாட்டு மந்தையும் குதிரை மந்தையும் ... 133
29. முயலும் வண்டும் ... 139
30. மயிலும் கவுதாரியும் ... 143
31. வேடனும் கவுதாரிக் கூட்டமும் ... 147
32. நரியும் சேவலும் ... 149

CONTENTS

			Pages
1.	WALL-COCK AND ANT	...	151
2.	CROW AND FOX	...	152
3.	BULL AND FROG	...	152
4.	LAMB AND WOLF	...	153
5.	HYENA AND LAMB	...	153
6.	BUSINESS WITH LION	...	154
7.	LION AND DONKEY	...	154
8.	LION AND MOUSE	...	155
9.	LION AND OTHER ANIMALS	...	156
10.	THE GREEDY DOG	...	157
11.	PIGEON AND ANT	...	157
12.	WOLF AND HERON	...	158
13.	EARTHEN URN AND IRON URN	...	159
14.	GOD MUPPITTO AND FROGS	...	160
15.	DECREPIT TIT AND ITS KINDRED	...	161
16.	WOLF AND DOG	...	162
17.	SILVER-BOX BEARING DONKEY AND WHEAT-BOX BEARING DONKEY	...	163
18.	JOY OVER THIEF	...	164
19.	BANIAN TREE AND BULRUSH	...	165
20.	COTTON BEARING DONKEY ANG SALT BEARING DONKEY	...	166
21.	CROW, SNAKE AND FOX	...	167
22.	FOX AND HERON	...	167

23. DEER AND GOAT ... 168
24. FOX AND GRAPE BOWER ... 169
25. GOAT ITS KID AND WOLF ... 170
26. EAGLE AND FOX ... 170
27. RAT KING AND ITS KINDREDS ... 172
28. 'OX FLOCK' AND 'HORSE FLOCK' ... 173
29. RABBIT AND BEETLE ... 174
30. PEACOCK AND PARTRIDGE ... 175
31. HUNTER AND PARIRIDGE-FLOCK ... 176
32. FOX AND HEN ... 176

அணிந்துரை

முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப.
ஆணையர், தொல்லியல் மற்றும் அருங்காட்சியகத்துறை

கதைகளுக்கு நல்லதொரு விளைநிலம் இந்தியா.

தமிழகத்தின் பங்கும், தமிழ்மொழியின் பங்கும் இதில் குறிப்பிடத்தக்கது. இவ்வுண்மையை நிலைநாட்டும் வகையில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் இந்த வெளியீட்டில் மொத்தம் 32 கதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றின் பழங் கால நடையும், இக்கதைகளை ஆய வேண்டிய முறையும் பெரிதும் ஆய்விற்குப் பயன்படுவன. இந்த நோக்கிலேயே இந்த நூல் பதிப்பித்து வெளியிடப்படுகிறது.

கதைகள், பண்பாட்டுக் கருவூலங்கள்; இக்கூற்றுக்கு ஏற்பவே பழந்தமிழ்ப் பண்பாட்டின் கூறுகளாகவே இப்பதிப்பில் காண லாகும், இக்கதைகளை நாம் ஆராயலாம்.

எங்கும் அமைதியின்மை காணப்படும் இந்நாளில் இவை போன்ற நீதிக் கதைகளை மக்களுக்கு வழங்குவது நமது பண்பாட்டை ஒழுங்குபடுத்தும். எனவே தமிழக அரசின் பண்பாட்டுத் துறையிலிருந்து இந்நூல் வெளிவருவது மிகவும் பொருத்தமானது ஆகும்.

பொதுவாகக் கதைகள் எப்பொழுது தோன்றின என்று கூறுவது கடினம். ஆதிமனிதன் காட்டில் வேட்டையாடிய தன் அனுபவங்களை மற்றவர்களுக்குச் சொன்னதிலிருந்து தோன்றியது தான் கதை என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இக்காலத்தில் வளர்ந்துள்ள நாவல், சிறுகதை ஆகியவை பழங்கதைகளிலிருந்து வளர்ச்சியடைந்தே தோன்றின என்று கூறலாம்.

பழங்கதைகள் பெரும்பாலும் மந்திரத்திற்கும் மதத்திற்கும் துணையானவையாக உள்ளன. இவற்றை மக்கள் புனிதமான வையாகக் கருதுகின்றனர். கதை தொடர்புள்ள இடங்கள் புண்ணிய பூமியாகப் போற்றப்படுகின்றன. கதைகளாலும் சடங்குகளாலும் மக்கள் அச்சத்தைத் தவிர்த்து, இன ஒற்றுமை யோடு வாழ்ந்து ஒழுக்கத்தைப் பேணுகின்றனர்.

பழங்கதைகள் நாடுகளின் இலக்கியங்களை வெளப்படுத்தியுள்ளன; மற்றைய இலக்கியங்களுக்கு அடிப்படையாகவும் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டிலே அச்சிடப்பெறாத பல வாய்மொழிக் கதைகள் உள. அம்மானை என்ற செய்யுள் வடிவக் கதைகள் இருக்கின்றன. வரலாற்று அடிப்படையில் எழுந்த வீரச்சுவை மிகுந்த கதைகள், விக்கிரமாதித்தன் கதை, அரபிக் கதைகளும், பஞ்சதந்திரம், ஹிதோபதேசம் முதலிய நீதிக் கதைகளும் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்ப் புலவர்களைப் பற்றிப் பல்சுவை மிக்க கதைகளும் உண்டு.

உலகின் பல்வேறு நாடுகளிலும் சுவைமிகுந்த கதைகள் பல உண்டு. கிரேக்க, ரோமானியக் கதைகளும் காப்பியக் கதைகளும் உலகப் புகழ் பெற்றவை. ஆங்கிலேயர் சாசரின் காண்டர்பரிக் கதைகள், ஜெர்மானியக் கிரிம் சகோதரர்களின் ஃபெரி டேல்ஸ், பிரெஞ்சுக்காரர் ஷார்ல் பெரோவின் தேவதைக் கதைகள் மற்றும் அராபியக் கதைகள், சீனக் கதைகள் முதலியன எல்லோராலும் விரும்பிப் படிக்கப்படுகின்றன.

சமஸ்கிருதத்தில் கதைகள் பல உள. இவை பெரும்பாலும் நீதியைப் போதிப்பனவாக அமைந்துள. இருக்கு வேதத்தில் தியூத சூக்தம் முதலிய சூக்தங்களில் நீதி புகட்டப்படுகின்றது. மீன்கள், மாடுகள், மரங்கள், பேசிக் கொண்டிருந்தன என்ற கதைகளும் வேதத்தில் காணப்படுகின்றன. செய்யுளும், உரை நடையும் கலந்த நூல்களில் புத்தரின் ஜாதகமாலை சிறப்புடையது.

நீதிக் கதைகள் பொதுவாக இராஜதந்திரத்தைப் போதிப்பவை, பிற நீதிகளைப் போதிப்பவை என இரண்டு வகைப்படும். பஞ்சதந்திரம், ஹிதோபதேசம் போன்றவை இராஜதந்திரத்தையும், பிருகத்கதை, வேதாள பஞ்ச விம்சதி முதலியவை பிற நீதிகளையும் போதிப்பனவாம்.

ஆகவே இத்தகு கதை வரலாற்றில் நமது இந்தப் பதிப்பும் இணைத்து ஆயப்பட வேண்டி உளது.

இப்பதிப்பிற் காணலாகும் கதைகளை ஓலைச்சுவடியிலிருந்து முயன்று பதிப்பித்ததோடு அல்லாமல் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்துள்ள அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகக் காப்பாட்சியர் முனைவர் சு. சௌந்தரபாண்டியன் அவர்களும், தொல்லியல் துறை தொழில்நுட்பப் பணிகளுக்குப் பொறுப்பான உயர்திரு மா. சந்திர மூர்த்தி அவர்களும் பெரிதும் பாராட்டத்தக்கவர்கள்.

முனைவர் ரா. கண்ணன் இ.ஆ.ப.

பழந்தமிழ்க் கதைகள்

பதிப்புரை

சென்னை அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகத்தில் செம்மையாகப் பாதுகாக்கப்பெற்று வரும் ஓலைச்சுவடியே இங்கு பதிப்புப் பெறுகிறது.

இவ்வோலைச் சுவடி ஆர். 2639 என்ற எண்ணில் நூலகத்தில் இன்றும் உள்ளது.

மேலாய்வு செய்வோர் இச்சுவடியைப் பெற்று இன்னும் ஆயலாம்.

இச்சுவடிக் கட்டின் முதல் ஓலையில், "சுவர்க்கோழி முதல் பல்வகைக்கதை" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பழந்தமிழ்க் கதைகள் என்ற தலைப்பு பதிப்பாசிரியர் இட்டது ஆகும்.

இந்த ஓலைச்சுவடி வட ஆர்க்காட்டுப் பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டது.

இத் தொகுப்பில் உள்ள 32 கதைகளில், ஓரிருகதைகள் முன்பே அறியப்பட்டிருந்தாலும், இதிலுள்ள சிற்சில வேறுபாடுகளுக்காகவும்; ஓலைச்சுவடி மொழி நடைக்காகவும் இங்கு பதிப்பிக்கப் பெற்றுள.

எடுத்துக்காட்டாக, **காகமும் நரியும்** என்ற கதையில், நாம் அறிந்த கதையில், காகம் வடையை வாயில் வைத்துக் கொண்டிருக்கும்! ஆனால் நமது இந்த ஓலைச்சுவடிக் கதையில் காகம் இறைச்சியை வைத்துக்கொண்டுள்ளது.

இங்கு பதிப்பிக்கப்பெற்றுள்ள கதைகள், தமிழ்ப் பழமொழிகள் திருக்குறள் போன்ற நீதிநூல்களுடன் ஒப்பிட்டு ஆயப்பட வேண்டும்.

இப்படி ஆய்வதால், , தமிழ்ச்சமுதாயத்தின் சிந்தனை வளர்ச்சிகளை அறியலாம்.

சைவ சித்தாந்தம் விளக்கும் சில தத்துவங்களை போகிற போக்கில் இங்கு அச்சிடப்பட்டுள்ள கதைகள் நுவலுகின்றன!

எடுத்துக்காட்டாகத் "தன்னை அறிதல்" என்பது சைவ சித்தாந்தம் வலியுறுத்தும் ஒரு பேருண்மையாகும்!

எருதும் தவளையும் என்ற கதையில் இந்தத் தத்துவமே அடங்கியுள்ளது!

பொதுவாக, கதை என்ற அமைப்பு மிகவும் சுவையானது! தேவையானது! அதிசயமானது!

உள்ளத்தை உருக்கும் செய்தி ஒன்றை ஆதிமக்கள் பிறருக்கு, ஒன்று விடாமல் எடுத்து உரைத்ததே கதை!

கிராமமக்கள் இதைச் சொன்னால் அது நாட்டுப் புறக்கதை!

நகர எழுத்தாளன் இதை எழுதினால் அது சிறுகதை அல்லது புதினம்!

இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்கள் சுலோக வடிவில் எழுதப்பட்டாலும் அவற்றுக்கு மூலம் மக்கள் கூறிவந்த கதைகளே!

இராமாயண, பாரதக் கதைகளில் மக்கள் மனங்களை உருக்கிய செயல்கள் இருந்தன! அதனால் அவை கதைகளாயின!

மன உருக்கம் இல்லாவிடில் கதை இல்லை!

சின்னஞ்சிறு பொட்டுக் கதைகளானாலும், அதிலும் ஒரு மன உருக்கம் தேவையே!

இங்கு பதிப்புப் பெறும் கதைகளே இக்கூற்றுக்குச் சான்று!

அதனால், மதங்களை நிறுவியவர்கள் அனைவரும் கதைகளைக் கூறினார்கள்! புத்த ஜாதகக் கதைகள், விவிலியக் கதைகள், என்று பல எடுத்துக் காட்டுகளை வைக்கலாம்.

கதையின் தொன்மை யாது?

கி.மு. 4000, 5000 என்று கருதக் கூடிய தொன்மையுள்ள வேதங்கள் முகிழ்ந்த காலத்திலேயே கதைகள் இருந்துள!

வேதங்கள் கூறும் சில யாகச் சடங்கில் இரவில் கதை கூற வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது!

அன்று தொடங்கிய கதை கூறும் பழக்கம், இன்றும் சுடலை மாடன் கதை கூறுவது வரை தொடர்ந்து நிலைபெற்று வருகிறது!

இன்னும் மிக முந்தைய காலத்தில், ஆதிமனிதன் தோன்றிய நாளில் அவனுக்கு நேர்ந்த ஒரு துன்பத்தை மற்றவர்க்குச் சுவைபட கைகளினால், விளக்கியிருப்பானே, அப்போதே கதை கூறும் பழக்கம் தோன்றிவிட்டது என்று மதிப்பிடலாம்!

கருத்துகளை மட்டும் ஒன்று, இரண்டு என்று அடுக்கிக் கூறுவதைவிட, அதே கருத்துகளை உள்ளடக்கி, கண். காது வைத்துக் கதையாக்கிச் சொன்னால், அக்கருத்துகள் எளிதில் மக்களிடம் பரவும்!

உலகில் காவியம்பாடுதல், தாலாட்டுப் பாடுதல் போன்ற இலக்கிய வடிவங்கள் மறைந்தாலும் மறையலாம்; ஆனால் கதை கூறும் வடிவு மட்டும் என்றும் மறையாது!

ஒருநாடு பழைமையான நாகரிகம் கொண்டதா, அண்மை நாகரிகம் கொண்டதா என்று பார்க்கக் கதைகளைப் பார்த்தாலே தெரியும்!

எந்த நாட்டில் பழங்கதைகள் மிகுதியோ அந்த நாடு பழைமை நாகரிகம் கொண்டது என்று கூறிவிடலாம்!

ஏனெனில், மக்கள் வாழ்வு நடக்க நடக்கக் கூடவே கதைகளும் உருவாகின்றன! வாழ்வு இல்லையாயின் கதை ஏது?

இங்கு பதிப்புப் பெறும் இந்தக் கதைகள் முன்பே ஆங்காங்கே அறியப்பட்டிருக்கலாம்; எனினும்; குறிப்பிட்ட இந்த ஓலைச்சுவடி யானது பதிப்புக்காண வேண்டும் என்பதற்காக இங்கு அச்சிடப் படுகின்றன.

இக்கதைத் தொகுப்பு மூலமாக ஓலைச்சுவடியிலிருந்த கதைநடை ஒன்று, இன்று தமிழுக்கு அறிமுகமாகிறது!

இங்குள்ள கதைகளும், இவற்றைப் போன்ற கதைகளும் செவி வழியாகவே வருகின்றனவா? அன்றி, சுவடி ஆதாரங்கள் உளவா?

இப்பதிப்பு, மேல் வினாக்களை விடுவிக்கும்!

சிங்கம் - நரி - முயல் கதைகளும் ஒரு காலகட்டத்தில் எழுத்து வடிவம் பெற்றன என்பதே இங்கே நாம் அறியவரும் புதுச் செய்தி!

சிற்பக்கலைக்குச் சுவடி ஆதாரம் உள்ளதைப் போலவே, மண்பாண்டங்கள் செய்யும் தொழிலுக்கும் சுவடிவடிவ நூற்கள் ஆதாரமாக இருந்துள எனஅறியப்படுகிறது. ஆனால், மட் பாண்டங்கள் வனைவதற்கான அளவுகள், முறைகள் அடங்கிய அத்தகு சுவடி ஒன்றையும் இதுவரை நான் பார்த்ததில்லை! எல்லாம் மறைந்துபோய்விட்டன போலும்!

இங்கு பதிப்பிக்கப் பெற்றுள்ள கதைகள் ஓலைச்சுவடியி லிருந்து பதிப்பிக்கப் பெற்றுள்ளதால், இக்கதைகளுக்கும் இவை போன்ற பிற கதைகளுக்கும், பிறப்பிடம் தமிழகமாக இருந்திருப் பதற்கு வாய்ப்பு உண்டு.

தமிழ் மண்ணில் பிறந்த இச்சின்னஞ்சிறு அழகுக் கதைகள், இந்தியா எங்கும் பரவியிருக்கலாம்!

புத்தர் ஜாதகக் கதைகள் என்ற புகழ் பெற்ற கதைகள் கி.மு. 5ஆம் நூற்றாண்டுச் சமுதாயத்தைக் காட்டுவன என்கிறார். ஆனந்த குமாரசாமி, அவரது புத்தமத ஆய்வில்.

ஆனால், புத்தர் ஜாதகக் கதைகள் கதை வடிவில் நிலைப் பாடு பெற்றது, கி.பி. 5-ஆம் நூற்றாண்டில்தான் என்றும் ஆனந்த குமாரசாமி ஆய்ந்துளார்.

இந்த அடிப்படையில் ஆயும்போது, நமது இந்தக் கதை களும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு அல்லது அதற்கு முன்பு எழுந் திருக்கலாம் என்ற கருத்து தோன்றுகிறது.

ஆனால் நாம் பதிப்பிக்கும் இந்தக் குறிப்பிட்ட ஓலைச்சுவடி அவ்வளவு பழைமையானது அல்ல!

நமது இவ்வோலைச்சுவடி கி. பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என மதிப்பிடலாம். வழிவழியாக எழுதப்பட்டுவந்த சுவடியின் ஒரு படியாக (copy) இச்சுவடி உள்ளது.

பொதுவாக, விலங்குகள், பறவைகள் இவைகளைச் சுற்றி எழுதப்பட்ட பழைய கதைகள் காலங்காலமாகப் போற்றப்படும்!

குறிப்பிட்ட அரசர்கள், அல்லது ஊர்களைப் பற்றிய கதை களைவிட, விலங்குகளை அடிப்படையாகக் கொண்ட கதைகள் தடையற்று எங்கும் பரவும்! எவரும் போற்றுவர்!

எடுத்துக்காட்டாக, "ஒரு சமயம் காசி ராசா. . . . என்று கதை தொடங்கினால்," ஏன்? தமிழ்நாட்டு அரசர்களைச் சொல்லக் கூடாதா?" என்று சிலர் முணுமுணுக்க வாய்ப்பு உண்டு!

ஆனால், விலங்குகளை உள்ளடக்கிக் கதை வந்தால், எவரும் மறுப்புக் கூறார்!

விலங்குகள் தொடர்பான பலகதைகள் இன்றுவரை வந்துள்ள தற்கு இதுவே காரணம்!

இங்கு இடம் பெறும் கதைகள், நீதி கூறும் நோக்கோடு எழுதிவைக்கப்பட்டவை!

அதனால்தான், கதையைச் சுருக்கமாக உரைக்கின்றன!

கதைகளின் தொடக்கம், கதை வளர்ச்சி, முடிவு என்ற அமைப்பு (structure) அவ்வளவாகப் பேணப்படவில்லை!

இங்கே பதிப்புப் பெற்றுள்ள இக்கதைகள் நாட்டுப்புற இயலில் அடங்குமா? அடங்காதா?

நாட்டுப்புற இயலில்தான் அடங்கும்!

இக்கதைகள் யாவும் எவரால் கூறப்பட்டவை என்று எவருக்கும் தெரியாது!

வழிவழியாகச் செவிவழியே பரவி வருபவையே!

ஏதோ அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலக ஓலைச் சுவடியில் உள்ளன என்பதற்காக நாட்டுப்புறக் கதைகள் என்ற இடத்தை இவை இழக்க இயலாது!

இவ்வாறு செவிவழியே பரவும் கதைகளை மூன்று வகைகளாகப் பகுக்கலாம்:-

1. விலங்குகளைக் கொண்ட கதைகள்
2. அரசர்களைக் கொண்ட கதைகள்
3. நிகழ்ச்சிகளைக் கொண்ட கதைகள்

இவற்றில், விலங்குகள், பறவைகளைக் கொண்ட கதைகள் உருவாவது இப்போது அநேகமாக நின்றுவிட்டது என்றே கூறலாம்!

ஏன்?

மனிதன் இயற்கையோடு இணைந்து, இயற்கையிலிருந்து கற்றுக் கொண்டு வாழ்ந்த காலத்தில்தான் விலங்குகள், பறவைகளைக் கொண்ட கதைகள் மிகுதியாகத் தோன்றின!

ஆனால் இன்று மனிதன் இயற்கையைப் பற்றிச் சிந்திக்க நேரமில்லாது ஓடிக்கொண்டிருக்கிறான்!

அப்படி இருக்கும்போது, நரியைப் பற்றியும் காகத்தைப் பற்றியும் அவன் ஏன் சிந்திக்கப் போகிறான்?

காடுகளை வெட்டி வெட்டி ஊர்களாக அமைக்க அமைக்க, விலங்குகளைப் பற்றிய கதைகளும் அருகிப் போயின!

அதைப்போலவே, அரசர்கள் ஆட்சிக் காலம் மாறி, மக்க ளாட்சி வளர்ந்துவிட்டதால், இப்போது, அரசன் - அரசிக் கதை களும் எழ வாய்ப்பில்லை!

இப்போது, நிகழ்ச்சிகளை ஒட்டியே கதைகள் எழுகின்றன!

நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு செவிவழிக் கதை தோன்றும்போது, அந்நிகழ்ச்சிகள் பழங்கால நிகழ்ச்சிகளாக இருக்கவேண்டும் என்பது கட்டாயமில்லை! தொலைக்காட்சி பற்றிய கதையாகவும் இருக்கலாம்! அதுவும் நாட்டுப்புறக் கதை (folk story)என்ற பெயரைப் பெறலாம்!

இங்கு பதிப்பித்துள்ள தமிழ்க் கதைகள் வையத்தில் வாழ் வாங்கு வாழ்வதற்குப் பல காரணங்கள் உள!

அவற்றில் ஒன்று, ஒவ்வொரு கதையும் குறிப்பிட்ட ஒரு நீதியை மட்டும் சிறப்பாகப் பேசவல்லது என்பதே!

குறிப்பிட்ட ஒரு நீதிக்காக ஒரு கதை என்றுள்ள வார்ப்பே மக்களைக் கவர்ந்தது! மக்கள் நெஞ்சில் நிலைக்க இது ஒரு காரணமே!

ஒரே கதையில் பல நீதிகளைத் திணித்துக் குழப்பி அடித் திருந்தால், ஒருவேளை இக்கதைகள் புறக்கணிக்கப்பட்டிருக்கும்!

பொதுவாகக் கதைகள், பல வடமொழி நூற்களில் உள்ளன.

பஞ்சதந்திரக் கதைகள், கதாசரித் சாகரம், சுகசப்ததி, இதோபதேசம் முதலிய தலைப்புகளில், வடமொழியில் கதை நூற்கள் உள்ளன. இராமாயணம், பாரதம், புராணங்கள் ஆகியவற்றிலும் பல குட்டிக் கதைகள் உள்ளன.

எடுத்துக் காட்டாக, சிங்கத்தின் நிழலைச் சிங்கத்திற்குக் காட்டி அதை நீருள் மூழ்கடித்த முயல் கதை, **பஞ்சதந்திரக் கதைகள்** என்ற தொகுப்பில்தான் உள்ளது.

இரு கொக்குகள், ஒரு கோலில் ஆமையைத் தூக்கிச் சென்றது, நடுவழியில் வாயைப் பிளந்தது என்று வரும் கதையும் பஞ்சதந்திரக் கதைகளின் தொகுப்பில்தான் உளது!

ஆனால் **வீரமாமுனிவர்** என்ற பெஸ்கி எழுதிய **பரமார்த்த குரு** கதைகள் மட்டும் எந்த வடமொழி நூலிலும் இல்லாதவை! பரமார்த்த குரு கதைகள், வீரமாமுனிவரின் சொந்த அனுபவத்தில் கண்ட கதைகளாதல் வேண்டும்!

மேலே கூறப்பட்ட, பஞ்சதந்திரக் கதைகள், **சோமசர்மா** என்ற ஆசிரியர், அரசர் ஒருவரின் பிள்ளைகளுக்குக் கூறியவை.

எனவே பஞ்சதந்திரக் கதைகள் சோமசர்மாவுக்கு முன்பே இருந்தவை என்பது தெளிவாகிறது.

முன்பே என்றால் எங்கே தோற்றம் கண்டது?

இதைப் போன்றே, இராயாயணம், மகாபாரதங்களில் வரும் குட்டிக் கதைகளும், அவற்றுக்கு முன்பே இருந்திருத்தல் வேண்டும்!

அப்படி, எங்கே இருந்தன அவை?

தமிழ் நிலத்தில் அக்கதைகள் - விலங்குகளை மட்டும் கொண்ட குட்டிக்கதைகள் தோற்றம் கொண்டிருக்கலாம்!

இந்நோக்கில் புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்!

தமிழ் நிலத்தில் தோற்றம் கொண்ட விலங்குக் கதைகள், காஞ்சிபுரம் போன்ற கல்வி மையங்களிலிருந்து, வடமொழி உருவில் இந்தியா முழுதும் சென்று பரவியிருக்க வாய்ப்பு உளது!

ஏனெனில், விலங்குகளை மட்டும் அடிப்படையாகக் கொண்ட குட்டிக் கதைகளின் பின்புலத்தை ஆய்ந்தால், அந்நிலமெல்லாம் தமிழ் நிலமாகவே காணப்படுகின்றன! அவ்விலங்குகளெல்லாம் தமிழ் மண்ணுக்கே உரியனவாகவே காணப்படுகின்றன! கங்கு போன்ற ஆஸ்திரேலிய விலங்கைப் பற்றி இத்தொகுப்பில் கதைாரு இல்லை என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

இப்படிப்பட்ட சிந்தனையைத் தூண்டிவிடத்தான் இப்பதிப்பு கொண்டுவரப்பட்டுள்ளது!

இப்பதிப்பில் இடம் பெற்றுள்ள கதைகள் யாவும் தமிழர்கள் கண்ட தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதை எவரும் மறுக்க இயலாது!

இவ்வகையில் ஆயுழி, தமிழ் மண்ணில்தான், ஒரு காலத்தில் இக்கதைகள் உருவாகியிருக்கவேண்டும் என்ற சிந்தனை வலு வடைகிறது!

இருப்பினும், ஈசாப்கதைகள் (கி. மு. 6-ஆம் நூற்றாண்டு) என்ற கிரேக்க நாட்டுக் கதைகள் இத்தமிழ்க் கதைகளுடன் ஒப்பிடத்தக்கன.

முயலும் ஆமையும் என்ற புகழ் பெற்ற கதை ஈசாப்கதை என்ப.

எனவே, நமது இப்பதிப்பில் உள்ள கதைகளில் கிரேக்க நாட்டில் முளைத்து இங்கு வந்திருக்கக்கூடிய சில கதைகளும் இருக்கலாம்.

அன்றி, தமிழ் மண்ணிலிருந்து கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டிற்கு சில கதைகள் சென்றிருக்கலாம்.

இங்கு பதிப்புக் காணும் இச்சுவடியில் உள்ள கதைகள் யாவும் பிற நாடுகளுக்குப் பரவியதாகச் சொல்ல இயலாது!

எடுத்துக் காட்டாக, வேடனும் கவுதாரியும், கவுதாரியும் மயிலும் முதலிய சில கதைகள் தற்போதுதான் அறியப்படு கின்றன.

எனவே, தமிழ்க் கதைகளில் சிறந்தனவே, பண்டு, வெளி மண்ணுக்குச் சென்று பரவின எனக்கருத இடமுளது.

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
மு.க. (தமிழ்), மு.க. (ஆங்.), இ.கல், பட்.வ.மொ., த.நி.
காப்பாட்சியர்

INTRODUCTION

Herein gets publication a palmleaf manuscript, being preserved nicely at Government Oriental manuscripts Library, Chennai - 5.

This palmleaf manuscript is under R. 2639 here even today.

Researchers who opt to do further analysis in this line may accost to this institution.

On the fly leaf of this manuscript bundle is written: "Wall - cock etc. variegated stories".

The title ANCIENT TAMIL STORIES has been assigned only by the editor.

This palmleaf had been collected from the North Arcot region of Tamilnadu.

Among the 32 stories, a few stories here may have been known by us already; but they have been published here for the reading variations and for the style of language present in leaves, and for many research purposes.

For example, in the crow and fox story, usually, the crow will have in its mouth only a 'vadā'; but in our palmleaf story, the crow keeps flesh.

Stories here may be used to compare with Tamil proverbs and other didactic verses including Thirukkuraḷ.

In this way the gradation in the thinking of the Tamil community can be discerned.

In some of our stories here, on can glance a few Saiva siddhanta philosophies; they have been articulated quite casually.

For example, "Know thyself" is a great Saiva Siddhanta philosophy!

This has been imbibed in the story, *Bull and frog.*

Generally, the genre, 'story' is very interesting, necessary and wonderful!

Story is nothing but the recount of some events by the ancient people to others!

If this delineation was done by villagers, it is folk story!

If the same has been sketched by a modern writer, then it is short story or novel!

Though the famous Ramāyan and Bharath are in sloka form, basic structure is only story!

In Ramāyan and Bharath, we have anecdotes which will touch our chord of emotion. That is why they have surpassed the onslaughts of time!

If there is no passion, then there is no story!

Even for a small bit of story, the compassion is necessary.

Stories find the light of day here stand witness to this.

That is why the sages who established religions sought shelter into stories!

Buddha Jātakā stories, biblical stories are evidences for our notion.

How old is 'story?

Stories were there even at the time of vedas said to have flourished in B.C. 4000 or 5000!

In certain rituals advocated by Vedas, it has been said that during night time, the members should tell stories.

What started in that occassion still continues as we find in the practice of recounting or singing stories like Suṭalai Māṭan story.

Even before Vedas, the people at primordeal stage, would have described their uneasy experiences and their recounting them were nothing but stories.

Mere arid matter will not spread as story does.

Literary genres like lullaby, epic may, one day, disappear! But not the story!

Archaeological excavations, are not necessary to find out whether a country is old in culture or not! Stories could tell this truth!

If that country possesses more ancient stories then, surely, it must have been descended from an old civilization.

Because, as life advances stories follow!

If there is no life, no story!

The stories that find print here might have been known before; but, only with a view to publish this particular palm leaf manuscript the present endeavour has been undertaken.

By these stories a Tamil style is being introduced to scholars.

Are the stories like the ones here, coming to us only through

oral means? or do we have any written dossiers to support the present small stories?

Present publication is the answer!

The stories with lion, fox, rabbit etc. had also found a written tradition at a particular point of time! This is the message we come to know here!

Just like the silpa treaties have got palmleaf evidences, we come to understand that works on pottery also had been bearing palmleaf supports; but alas! I have never seen any of the palmleaf manuscript on pottery so far? Perhaps they may have perished!

Since our present stories have been published from a palmleaf bundle, it may be that these stories had flourished from the Tamil soil.

Sprung from Tamil land, these stories may have spread all over India.

According to *Ananda Kumaraswamy* the Buddha Jātaka stories speak about the society of 5th century B,C.

But, Ananda Kumaraswamy, in his Buddhist study, says that the Jātaka stories were fixed to a genre only in 5th century A.D.

Researching in this line, we can surmise that our present stories may have flourished during 5th century A.D.

But, our palmleaf manuscript belongs to only a later period of 19th century A.D.

This is a copy of palmleaf manuscript written down from other leaves preserved traditionally by generations.

Generally, stories woven around animals and birds will last long!

Stories dealing with animals and birds will spread scot free than those that written with kings or towns.

For example, if a story begins, "Once a king of Benares . . . " some will knit their eyebrows thinking, "why Benares king? can't they tell about a Tamil king?"

So, if animals are the characters of stories, then nobody will frown upon.

This is the secret why many animal stories have survived till today!

Stories of our present edition, have been put forth only with a view to utter morals!

That is why, stories begin abruptly!

The start, development, finishing structure has not been contemplated in our stories.

Stories found place in this edition, do they belong to folklore or not?

Certainly *folklore*!

These stories can not be assigned authorship!

They have come to us orally!

Simply because these are available in a G. O. M. L. manuscript they do not lose their status of folk story!

Folk stories can be broadly classified into three:-

1. Animal stories
2. King stories

3. Anecdote stories

Among these, stories based on animals and birds have ceased to evolve.

Why?

When man lived intermingling with Nature and learning from Nature he created stories around animals.

But now?

Man is gallopping without having any time to ponder over Nature!

So, why should he worry about fox or crow?

When forests were felled and settlements constructed, stories involving animals started coming to an end!

Likewise when the rule by potentates embrace a close, folk stories based on them also ceased.

So, now folk stories are being woven around happenings.

Stories about events need not be built on only ancient anecdotes; they may be composed even on Television! Even then they will be called as folk!

There are various reasons for the survival of these small stories!

Each story stands for a single moral! - This is the secret!

This type of moulding attracted people one and all! This fine mould is one of the reasons to find a place in people's heart.

If, perhaps, variegated preachings had been incorporated in each story, they would have intermented!

Generally, there are many story volumes in Sanskrit.

Pañcatantrā, Kathācarit cākarā, Sukha saptati, Itopatecam etc. are a few important titles in Sanskrit that deal with stories of various kinds including animal stories.

For example, the famous cunning rabbit showing the shadow of lion and killing it is available in Pañcatantrā stories!

Similarly, the story, two cranes carrying a tortoise by a stick, and opening the mouth in the middle causing death is also available in the same Pañcatantrā.

But, *Beschi's Paramartha Guru* stories were his original ones! No, Sanskrit book is a basis for this! Perhaps paramārtha Guru may be he himself!

The Pañcatantrā stories, referred to above were told by one teacher Sharma to some students.

So, it is evident that the Pañcatantra stories had been already in the air before Somasharma.

But where they took their origin?

In the same vein, stories of Ramayanā and Mahābārath must have been in existence before they were incised.

Where were they before the Itihāsās?

Perhaps in Tamil land!

New researches should be built up in this line!

Stories woven with animals as characters may have taken their genesis on Tamil soil and through the centres like Kāncipuram (Tamil nadu), it may have travelled throughout India.

Only to enkindle such an idea the present edition has been ventured.

All the stories, found place here, have been built upon the Tamil's philosophies!; no body can deny this.

Researching in this way, a view, that all these stories had originated only on Tamil soil, gathers momentum.

However, *Aesop* stories (B.C. 6th century) of Greek soil can be compared with our present stories.

The famous Hare and Tortoise story is Aesop's story.

Aesop was a semi-legandary fabulist.

One or more of our present stories may have come from the above mentioned Greek source.

Or, the Aesop's fables themselves may have gone from Tamil soil around 6th century B.C.

All stories now find print cannot be surmised as having spread to foreign countries!

For example, the stories, *Hunter and Partridge*, *Partridge* and *Peacock* etc. have come to light only now.

So, we can contemplate that only the best among the flourished Tamil stories alone had migrated to other lands.

Dr. S. Soundarapandian
M.A.(Tamil), M.A.(Eng.), B.Ed., Dip.Skt., Ph.D.
Curator
Govt. Oriental Manuscripts Library

பழந்தமிழ்க் கதைகள்

1

சுவர்க்கோழியும் எறும்பும்

சுவர்க்கோழி, கோடைக் காலமெல்லாம் பாடிக்கொண்டுயிருந்துது.

மழைக்காலம் வந்தபோது, சாப்பாடில்லாமல், அண்டை வீட்டானாகிற எறும்பைப் பார்த்துச், "சிநேகிதா! பசியினாலே செத்துப்போகிறேன்! கொஞ்சம் தானியம் கொடு! மழைக்காலம் போனவுடனே, வட்டியும் முதலுமாய்க் கொடுத்து விடுகிறேன்!" என்று சொல்லினது.

எறும்பு, சுவர்க்கோழியைப் பார்த்துக், "கோடைக் காலத்திலே உனக்கு வேண்டிய தானியத்தைச் சாப்பிடச் சம்பாதித்துக் கொள்ளாமல், யென்ன செய்தாயெ"ன்று கேட்டது.

அதற்குச் சுவர்க்கோழி, "கோடைக் காலமெல்லாம் பாடிக் கொண்டிருந்தேன்" என்று சொல்லித்து.

எறும்பு, சுவர்க்கோழியைப் பார்த்துக் கோடைக்கால மெல்லாம் பாடிக்கொண்டு திரிந்தாயே! யிந்த மழைக்காலத்திலே ஆடிக் கொண்டு திரி!" யென்று துரத்திவிட்டுது!

அப்படிப் போலே, சிறுவயதில் படியாதவனும், காலத்திலே பயிரிடாதவனும், பசியினாலே மடிந்து போவார்களென்றவாறு.

முதற் கதை முற்றும்.

பதிப்பாசிரியர் குறிப்புகள் :

'சுவர்க்கோழி' என்றது, சுவரில் நின்று கொண்டிருந்த ஒரு கோழி.

சுவர்க்கோழி என்று ஒரு கோழி வகை இல்லை.

மேற்கதை படிக்க இன்பம் நல்குவதாக உள்ளது.

எறும்பை ஓர் அண்டை வீட்டானாகப் பாவித்து எழுதப் பட்டதே கதைக்குச் சிறப்பை நல்குகிறது!

கோழி எறும்பைப் பார்த்துக் கூறியது, அதற்கு எறும்பு பதில் கூறியது என்றால், அது கதை ஆக ஆகியிராது! ''அண்டை வீட்டில் வசிக்கும் எறும்பிடம் கூறியது'' என்று சொல்லும்போது தான், கதை என்ற ஓர் அமைப்பு (structure of a story) உருவா கிறது.

இக்கதையில் நீதியும் பெறப்படுகிறது; அது கதை ஈற்றிலேயே தரப்பட்டுள்ளது.

எனவே சிறுவர்களுக்கு அறிவுரை கூறுவதற்காக எவரும் பயன்படுத்தத் தக்க கதை இது என மதிப்பிடலாம்.

கதை நீதியாக, ''காலத்திலே படிக்காதவன் பசியால் வாடு வான்'' என வந்திருப்பது மிகமிக உண்மையாகும்!

கிராமப்புறங்களில் உள்ளவர்களில் படித்தவர்கள் எப்படியோ பிழைத்துக் கொள்கிறார்கள்; அதே மாணவனோடு சேர்ந்து பழகிய வேறொருவன் படிக்காத காரணத்தால், வயல்காடுகளில் நண்டு பிடிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது! இதை நாம் இன்றும் கண் கூடாகக் காண்கிறோம்.!

எனவே படிப்பை வலியுறுத்தும் இந்த நீதி என்றென்றைக்கும் தேவையே!

இக்கதையில் குறிப்பிடத் தகுந்த மற்றொரு கருத்து யாதெனில் கோழி பெரிய பறவை; எறும்பு பல மடங்கு சிறியது! ஆனால், எறும்பு கோழிக்கு அறிவுரை கூறியது !

இதனால் நாம் உருகிப்போய் விடுகிறோம்!

சிறந்த கதையின் இலக்கணம் இதுவே !

இந்த கதையில் ஒரு திருப்பம் (turning point) கூட உள்ளது!

வழக்கமாக, உதவி கேட்டால், அந்த உதவி வழங்கப்பட்ட தாகவே கதைகளில் வரும், "அதுபோல நாமும் பிறருக்கு உதவ வேண்டும்" என முடியும்!

ஆனால் இந்தக் கதையில், உதவி வழங்கப்படவில்லை!

பதிலாக, ஒரு நீதி வழங்கப்படுகிறது!

இதுவே அத்திருப்பம்!

இத்திருப்பம் கதைக்குச் சுவை ஊட்டுகிறது!

சுவடி எழுத்துப் பிழைபட எழுதப்பட்டுள்ளது.

கீழ்வருமாறு சுவடிப் பிழைகள் திருத்தப் பெற்றுள்ளன:

சுவடிப்பிழை	பதிப்பில் திருத்தம்
எரும்பு	எறும்பு
அப்படிபோலே	அப்படிப் போலே
அதர்க்கு	அதற்கு
தானியத்தை சாப்பிட	தானியத்தைச் சாப்பிட

Ancient Tamil Stories

1

WALL - COCK AND ANT

A wall-cock had been singing throughout the period of summer.

Rainy season came.

Having no food to take, the wall-cock asked an ant next door, "Friend! I am dying out of appetite! Give me a little corn; After rainy season, I will return back your debt with interest."

For this ant replied: "What were you doing in the summer without accumulating enough corn?"

The cock said ; "I was just singing at that time".

"So, just like you were singing in the summer, now be dancing in the rainy season!"-so retorted the ant.

The ant by telling so, scrammed away the cock !

Likewise, those who do not study during his young years and those who are not sowing in the due period will have to die!

First story ended.

Editor's observations :

Wall-cock denotes a cock standing on a wall.

There is no such separate cock as wall cock.

The above story is very sweet to read.

The ant being considered as a neighbour is conspicuous This gives sheen to story.

"Cock told that and the ant replied so"—such a sketch would not have made a story !

When we read, the ant living in the next house replied only, the delineation becomes story! Only then we get a story structure.

A moral is also inferred here which is available at the end of the story itself.

So, this small story can be utilised by all to render advice to small kids.

The moral, "that individual who does not study in his young years will suffer" is very very important.

In rural Tamilnadu, students who study well somehow or other manage to earn something for his livelihood. But those who do not study in early years, begin to grab the crabs in ponds!

So, this preaching which emphasises the importance of education is always wanted.

Another angle to be viewed is that the cock is a big bird ant is a small one. Such a small creature advises the big cock!

Because of this contrast, our heart just moves !

This is the beauty of a great story !

Even a turning point is available in this small story.

Usually, all stories will end, "Thus we also should help others".

But here, help has not been meted out !

On the contrary, the ant chased the cock away !

This is the turning point !

This turning point adds lustre to story !

This palmleaf manuscript is with mistakes.

The mistakes have been corrected as follows :-

Mistakes in palmleaf	*Mistakes corrected*
erumbu	eṛumbu
appaṭipōlē	appaṭippōlē
atarkku	ataṛku
tāṉiyattai cāppiṭa	tāṉiyattaiccāppiṭa

2

காக்கையும் நரியும்

[ஒரு] காக்கை யிறைச்சித் துண்டைக் கொத்திக் கொண்டு மரத்தின் கிளையின் பேரிலேறிக் கொண்டிருந்தது.

நரி, யிதைக் கண்டு சொன்னதாவது, ''ஓகோ! காக்கை ராசாவே! உம்முடைய கால், கரும்பவளம் போலிருக்குது! செட்டைகளிலே பச்சைக் கல் யிழைத்தாப்போலிருக்குது! கழுத்திலே முத்துப் பதித்தாப் போலிருக்குது! உமக்கு வொண்ணா லொண்ணுங் குறையில்லை! ஆனால், பட்சி சாதிகளெல்லாம் வந்து உம்மை யிராசாவாகஸ்தாபிப் பார்களென்று நினைக்குறேன்! இப்படிப் பட்டவருடைய குரலெப்படி யிருக்குமோ?'' வென்று சொல்லித்துது!

அதற்குக் காக்காய் தனக்குள்ளே பூரித்துக் கூப்பிட்டுது! வாயிலிருந்த யிறைச்சித் துண்டு தரையில் விழுந்தது! நரி அதை யெடுத்துக் கொண்டு சொன்னதாவது: ''இச்சகம் சொன்னத்துக்கு அகப்பட்ட பிரயோசனமென்று போய் விட்டுது!

அப்படிப்போலே, இச்சகங்கேழ்க்குறவனும், தோத்திரப் பிரியனுங் கைப்பொருளிழந்து போவார்களே''ன்றவாறு.

இரண்டாம் கதை முற்றும்.

பதிப்பாசிரியர் குறிப்புகள்

செட்டை - இறகு

இச்சகம் - முகமன் கூறுதல்

நரி, தந்திரத்திற்குப் பெயர் போனது! இக்கதையிலும் நரியின் தந்திரமே கூறப்பட்டுள்ளது.

அதே போழ்து, இச்சகத்தின் தீமையும் நீதியாக நுவலப் பட்டுள்ளது.

நரியின் வருணனையில் ஓர் அழகு உள்ளது!

காகமாக இருந்தாலும், அதன் இறகை உற்றுக் கவனித்தால் பச்சை வண்ணத் திட்டுகள் காணப்படும்! இது பச்சைக் கல் இழைத்தது போல இருந்ததாம்!

சூழ்ச்சிகள் செய்து சிறிய உயர்வுகளைப் பெறுவது ஓர் சமுதாய உண்மையே!

இராமாயணம் தோன்றிய நாள் முதல் எத்தனையோ சூழ்ச்சிகளை நாம் படித்திருக்கிறோம்! இன்றும் காண்கிறோம்!

அவ்வகையில் நரியும் ஒரு சூழ்ச்சி செய்தது; ஆனால் பலன் கிட்டவில்லை ! இறைச்சி மண்ணில் விழுந்து விட்டது!

சேக்சுபியர் எழுதிய நாடகங்களில் ஓர் உண்மையைக் கூறியுள்ளார்!

அஃதாவது, "சூழ்ச்சி செய்பவன், இறுதியில் அந்தச் சூழ்ச்சிக் குள்ளேயே அவனே அகப்பட்டு மடிவான்!" என்பதே.

சுவடியியல் (manuscriptology) நோக்கில் சில திருத்தங்களை வருமாறு காட்டலாம் :-

சுவடிப்பிழை	திருத்தம்
யிரைச்சி	யிறைச்சி
அதர்க்கு	அதற்கு
அப்படிபோலே	அப்படிப்போலே

2

CROW AND FOX

Once, a crow was sitting on a bough pecking some flesh.

A fox seeing this told : "Hellow! crow king! Your leg is like a black pearl! On your wings is seen polished emerald set! Around your neck is seen pearls studded! For you, nothing is wanted further! So, I surmise that all the other birds will coronate you as their king! I want to hear such a personality's voice.

For that, crow, in its jubilation, crew!

Then, the flesh from its mouth slipped down !

Picking up, the fox said, "This is the benefit for the utterance of sycophancy !"

Likewise, the flatterer, and flattered will lose their possession !"

IInd story ended.

Editor's remarks :-

ceṭṭai	-	wing
iccakam	-	sycophancy.

Fox is famous for its tricks! In this story too, the gymmick of fox has been shown.

At the same time, the evil of flattery has also been sketched here.

In the description of fox, there is a beauty!

Eventhough it is a black crow, if we closely watch, we can see some greenish sheen on its wing! This, for fox, looked like emarld work !

It is true that, artful activity sometimes fetch sundry benefits! This is also a social truth!

Generally, casting net for others is an age old phenomenon. This we see from Ramayana downwards.

In this line, fox in this story employed a trick. But it licked the dust ! The flesh tumbled on the soil !

Shakespeare in his plays had emphasised a remarkable lesson !

"Those who indulge in concoction will definitely embrace failure in life". This was his moral.

From the angle of manuscriptology, we can observe the following corrections :

Manuscript word	*Corrected word*
iraicci	iṟaicci
atarkku	ataṟku
appaṭipōlē	appatippōlē

3

எருதும் தவளையும்

குளத்தின் கரையிலே எருது மேய்ந்து கொண்டிருந்தது.

குளத்திலிருக்கப்பட்ட பச்சைத் தவளை, யெருதைக் கண்டு அதுக்குச் சரியா யுப்பவேணுமென்று எத்தனை பிரயாசைப்பட்டு உப்பினாலும் யிக்கணம் உப்பமாட்டாமல், தன்னுடைய தங்கச்சி யைப் பார்த்துச் சொன்னதாவது: ''தங்கச்சி! நானிந்த யெருதுக்குச் சரியாக வுப்புனேனோ?'' வென்றது.

அதற்கு, ''நீ மயிர்க்கண் உப்பினதில்லை!'' யென்று சொல் லித்துது!

''இதோ உப்புகிறனெ''ன்று உப்பி, வயறு வெடித்துச் செத்துது!

அப்படிப் போலே, செய்யமாட்டாத பாரமான காரியத்தைச் செய்கிறவன் திகிலெடுத்துச் சாவானெனன்பதாம்!

மூன்றாம் கதை முற்றும்.

இங்கு, தவளை, தனது தங்கையிடம் பேசியதாக உள்ளது கதைக்கு மெருகூட்டுவது ஆகும்!

நிகழ்ச்சியைக் கதையாக ஆக்க இந்த உத்தி (technique) பயன்பட்டது!

இந்தக் கதையில் வரும் எருது, தவளை இரண்டில், கடைசி வரை எருது பேசாமலேயே இருக்கிறது! தவளையும், அதன் 'தங்கைத் தவளை'யும் மட்டுமே பேசிக் கொள்கின்றன!

இதுவும் கதை கூறுவதில் ஒரு திறனே!

"உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது" என்ற பழமொழி இங்கு ஒப்பிடத் தக்கது.

"புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்டதைப் போல" என்ற பழமொழியும் இக்கதையோடு பொருத்திப் பார்க்கத் தக்கதே.

சக்திக்கு மீறிய செயல் செய்வது தீது என்பதே தமிழர் கண்ட நீதி!

இந்த நீதியே இக்கதையில் புகலப்பட்டுள்ளது.

பதிப்பு நோக்கில் கீழ்வரும் திருத்தங்களைக் குறிக்கலாம் :-

சுவடிப்பிழை	**பதிப்பில் திருத்தம்**
கறை	**கரை**
அதர்க்கு	**அதற்கு**
வயறு	**வயிறு**

3

BULL AND FROG

Near the bank of a tank was grazing a bull.

A green-frog in the pool of water, looking at the burly bull, wanted to become bulky like that animal.

So, the frog puffed up its body. But nothing happened!

The dejected frog asked its 'sister', "Sister Have I bloated like this bull?"

"No, no! Not even the hair's thickness you have bulged!" replied the 'sister' frog!

The green-frog further tried to bulge itself.

Alas! It breathed its last!

Likewise, one who indulges in a deed which is beyond his capabilities, he will have to die pathetically!

IIIrd story ended.

Editors remarks :

Here, in this story, the green-frog talks to its 'sister'. The note 'sister', gives lustre to the small story!

Only this technique helps to transform an event into a a story!

In this piece, until last, the bull remains silent! only the two frogs are talking.

This is also another technique.

"Whatever height to which a little sparrow flies, it can never become an eagle!" - This Tamil adage can be compared with this story.

"By seeing the tiger, cat scorched its body for lines!" Another proverb in Tamil.

This can also be likened with the moral of this story.

"Don't try to do anything which is beyond your ability!' This is a practical principle propounded by Tamils.

This preaching lives in our present story.

Following observations can be noted in regard to editing job:-

Mistake	*Correction*
kaṛai	karai
atarkku	ataṛku
vayaru	vayaṛu

4

ஆட்டுக்குட்டியும் ஓநாயும்

ஆட்டுக்குட்டி, ஒரு வுப்பரிகையின் பேரிலேறிக் கொண்டிருந்து

தரையிலே யிருக்கிற ஓநாயைக் கண்டு, ''அடே! ஓநாயே! சுகமா யிருக்கிறாயோ? மந்தையிலே போய், ஆடுகளைத் திருடித் தின்னக் கூடாமல் போச்சுதோ?'' வென்று கேட்டத் தற்கு, ஓநாய் ''ஆம் பிள்ளாய்! சுகமே யிருக்கிறேன்! நீயல்ல யிந்த வார்த்தை சொன்னவன்! அந்த உப்பரிகை உன்னைச் சொல்லச் சொல்லித்துது நீ யென்ன செய்யப் போறாயென்று'' போய் விட்டுது!

அப்படிப்போலே, பெரியவர்களை யண்டி யிருக்கிறவர்களுக்குப் பகையாளிகளால் பொல்லாப்பு வராததென்றவாறு.

நான்காம் கதை முற்றும்.

விளக்கம் :

உப்பரிகை - மேல் மாடம்

ஆட்டுக்குட்டி உயரமான இடத்தில் இருந்ததால், தன் எதிரியான ஓநாயைக் கேலி செய்யத் துணிவு பெற்றது!

ஓநாயும், எதுவும் செய்ய இயலாமல், ''நீ என்ன செய்வாய்? நீ இருக்கும் இடம் அப்படி!'' என்று அலுத்துக் கொண்டு தனது ஏலாமையைக் கொட்டி விட்டுச் சென்றது!

இத்துடன் கதை முடிந்துவிட்டது!

இதில் கதைக்கான வளர்ச்சி இல்லை என்று கூறலாம்.

பெரியவர்களை அண்டிப் பிழைப்பது என்ற பழந்தத்துவம் இன்றும் உண்மையாகவே இருந்து வருகிறது!

ஆனால், இன்று வேறு வழிகளில் அண்டிப் பிழைக்கிறோம்!

அரசு, தனியார் நிறுவனம், கூட்டுறவு நிறுவனம் என்ற அமைப்புகளை அண்டி இன்று பிழைக்கிறோம் என எடுத்துக் கொள்ளலாம்.

இவ்வகையில், மேற் கதையின் நீதி எக்காலத்திற்கும் ஏற்ற தாகவே உள்ளது!

''பருமரத்தை அண்டிய பல்லி சாகாது'' என்பது பழமொழி!

இப்பழமொழிக் கருத்தே இக்கதையிலும் காணப்படுகிறது!

தனிமனிதர்களை அண்டினால்தான் பிழைப்பு என்ற நிலை பழைய நிலை!

ஆனால் இதில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது; தனி மனிதனை அண்டாமலும் இன்று தலைநிமிர இயலும்!

ஆனால், வேறு ஏதோ ஒரு அமைப்பையாவது சார்ந்துதானே நிற்கவேண்டி உள்ளது?

ஓலைச்சுவடியிற் காணலாகும் சில எழுத்துப் பிழைகளை இவண் குறிப்பாம்.

பிழை	சரி
பகயாளி	பகையாளி
ஓனாய்	ஓநாய்
வாற்தை	வார்த்தை

4

LAMB AND WOLF

A lamb was there on the upper storey of a building.

Looking at a wolf on the ground, the lamb said in a loud voice : "You fellow ! Wolf ! Are you well? Has thieving and eating the goat from herd become impossible today ?

For this wolf, told : "Yes, my child ! I am fine ! You are not telling this to me ! That upper storey has spurred you to utter this ! What you will do ?"

So telling, the wolf scrammed away.

Likewise, for those who are under a protege, evil due to enemies will not befall !

IV story ended.

Notes :-

upparikai - upper storey

Since the lamb was on the upper storey, it got courage to mock at its predator !

Wolf could not do any thing !

"What you will do? your position is like that!" - so telling the wolf scurried away! The wolf has expressed its inability to do anything.

With this the 'story' has ended.

So, there is no story development in this structure.

Living under the support of some persons is truth. Even today it holds water.

But, nowadays, the 'support' pershonality has changed.

Today, in a way or other, we do live under a patronage of either a government or a body;

So, in this way, the moral put forth by the above story seems to be a perennial truth!

A Tamil proverb says "the lizard which lives in a big tree will never die!"

This message can be seen in our present story.

In olden days, people looked individuals for their livelihood

But today, this has changed.

Today, we need not expect an individual to help; But, at the same time, we have to depend on some structure! Is it not?

Some of the mistakes found in palmleaf:

Error	*Correct*
pakayāḷi	pakaiyāḷi
ōṇāi	ōnāi
vārtai	vārttai

5

குடத்தியும் ஆட்டுக்குட்டியும்

தண்ணீரோடுகிற வாய்க்கால் மேட்டுப்புறத்திலிருந்த குடத்தி, தண்ணீர் குடித்துது.

ஆட்டுக்குட்டி, தாழவிருந்து தண்ணீர் குடித்துது.

குடத்தி, ஆட்டுக்குட்டியைப் பார்த்து, "அடே! கெட்டவனே! செத்தயாகிலும் மரியாதை யில்லாமல் குடிக்கிற தண்ணியை யேண்டா கலக்கினா"யென்றுது!

அதற்கு ஆட்டுக்குட்டி, "அய்யா! நீர் மேற்படியிலிருந்து குடிக்கிறீர்! நான் தாழவிருந்து குடிக்கிறேன்! நான் தண்ணியை யெப்படிக் கலக்கலாமெ"ன்றுது!

"நீ கலக்காவிட்டால், உன் தாய் தகப்பன் கலக்கி யிருப்பார்கள்! இதுவு மல்லாமல், உன்னுடைய இடையர், நாய் களை விட்டு என்னை வருத்தப்படுத்தி யிருக்கிறார்கள்! அதுக்கு நானுன்னைப் பழிவாங்க வேண்டிய"தென்று கடித்துத் தின்னு விட்டுது!

அப்படிப்போலே, பலத்தவனுடைய ஞாயத்தின் முன்பாக, எளியவனுடைய ஞாயஞ் செல்லாதென்றவாறு.

5-ஆம் கதை முற்றிற்று.

குறிப்புகள் :

குடத்தி — கழுதைப்புலி

கழுதைப்புலி என்பது கழுதையா? புலியா?

புலிதான்! புலியில் ஒரு வகை!

இவ்வகைப் புலியின் காது முதலிய சில உறுப்புகள் கழுதைக்கு உள்ளதைப் போல இருப்பதால் இப்பெயர் வந்தது.

தாழ்வான பகுதியில் தண்ணீர் குடித்தது ஆட்டுக்குட்டி!

அதனால், ஆட்டுக்குட்டி தண்ணீரைக் கலக்க வாய்ப்பே இல்லை! அப்படி அது கலக்கினாலும், மேட்டுப் புறத்தில் உள்ள நீர் கலங்க வாய்ப்பே இல்லை!

இருப்பினும், வலியச் சண்டைக்கு இழுத்து, தான் பேசியதே நியாயம் என்று எதையோ கூறி வாதிட்டு, தண்டிப்பது போல ஆட்டுக்குட்டியைத் தின்று விட்டது கழுதைப் புலி!

வலியவர்கள் இப்படித்தான் அன்றும் இன்றும் உள்ளார்கள்!

வலியவர்கள் அவர்களுக்கு வேண்டுமென்றால், ஒரு வகையாகச் சட்டத்திற்கு விளக்கம் தருகிறார்கள்; வேண்டாமென்றால், வேறு விளக்கம் தந்து தண்டிக்கிறார்கள்!

ஒரே வழக்கிற்கு இரு நீதிமன்றங்களில் இருவகையான தீர்ப்புகள் இன்றும் வந்து கொண்டுதான் இருக்கின்றன!

இப்படிப் பார்க்கும்போது, மேலே வந்த குடத்தி கதை கூறிய நீதி சரியாகத்தானே உள்ளது?

''வல்லான் வகுத்ததே வாய்க்கால்'' என்பது ஒரு தமிழ்ப் பழமொழி!

வலியவன் வாய்க்காலைவெட்டி, ''இதில் தான் நீர் ஓடும்! வேறு யாரும் எங்கும் வெட்டக்கூடாது!'' என்று சொல்லிவிட்டால் அதுதான் நிலைக்கும்! அவன் வெட்டிய வாய்க்காலால் எத்தனை வீடுகள் அழிந்தாலும் யாரும் எதுவும் செய்ய இயலாது!

''தடி எடுத்தவன் தண்டல்காரன்'' என்பதும் ஒரு பழமொழியே!

தண்டல்காரன் = வரிவாங்குபவன்.

தடியைக் கையில் வைத்துக் கொண்டு, "இதற்கு வரி, இவ்வளவு தா!" என்று மிரட்டினால் பேசாமல் கொடுத்து விடுவார்கள்!

"Survial of the fittest" என்ற ஆங்கிலக் கருத்தும் இங்கு நினைக்கத் தக்கதே.

மனித இனத்தில் மட்டுமல்ல, விலங்கு இனத்திலும்கூட வலிய இனத்தின் கையே ஓங்கும்!

சிறிய மீனைப் பெரிய மீன் உண்பதை நாம் காண்கிறோம்!

இவ்வாறு, எளியோர் கை தாழ்வதைக் கண்டு பொறுக்காத தமிழ்ப்பெரியவர் ஒருவர்தான், மேல் கதையைப் புனைந்திருக்க வேண்டும்.

கீழ் வருமாறு சுவடிச்சொற்கள் சிலவற்றை நோக்கலாம்:-

சுவடிச்சொல்	திருத்தம்
மேபடி	மேற்படி
குடிக்கிரேன்	குடிக்கிறேன்
நாறுன்னை	நானுன்னை

5

HEYNA AND LAMB

A heyna was drinking water from a dyke at the elevated side.

A lamb was consuming water in the same rivulet, but at! the lower part.

Raging at this, the heyna roared : "Hey you! wretch! without a tinge of respect, why did you stir this water?"

For this, the lamb answered in an undertone : "Oh, sir! you drink at the upper part and I at the lower! How can I ruffle?"

"If you don't agitate, your parents may have stirred Moreover, your shepherds had injured me by instigating dogs! For that I have to take revenge!" - so shouting pounced the heyna on the small goat killed and at last ate!

Likewise, before the mighty poor's equity will not win!

V story ended.

Remarks :

kuṭatti = heyna

Heyna is a donkey or tiger?

Tiger! A kind of tiger!

In this variety of tiger, some features like ear will look like donkey's.

The little lamb drank only at the lower region!

So, there was no chance of ruffling at all!

Still, jabbering something, the heyna, as if it punishes the goatling, just pierced to pieces!

Mighty are like this, then and now!

The strong, if they like something they interpret law in a particular way; if they don't wish they distort it in some other way!

For one and the same case, the lower courts decides onething, but the apex court orders exactly the opposite!

So, if we analyse in this way, the above kuṭatti story, furnishes only an apt moral!

A Tamil adage goes: What the muscle man cut is the canal!"

If a gallent digs a canal, people will have to accept it. Because of that canal, many may have died! But that voice will be suppressed.

"Who held the stick, was the tax collector!" - is another proverb in Tamil

tax collector = taṇṭalkāraṇ

Holding the stout cudgel in hand, if one asks tax, the people would give!

The English usage, "Survival of the fittest" may be pondered over here.

Not only in mankind, but also among animals, always the might is right!

So, a prodigy who could not bear such an injustice only would have sketched this story.

Now, let us view a few erranous palmleaf words:

Error	*Correction*
mēpaṭi	mēṟpaṭi
kuṭikkirēā	kuṭikkiṟēṉ
nānuṉṉai	nāṉuṉṉai

6

சிங்கத்துடன் வர்த்தகம்

சிங்கமும் ரிஷபமும், ஆடும், நரியும், வர்த்தகஞ் செய்ய வேணுமென்று, உடம்படிக்கை செய்து கொண்டு, எல்லாக் காட்டிலே போய்க், காட்டைக் கலைத்தவிடத்தில், சிங்கம், ஒரு மானைப் பிடித்து, நாலு பங்காக்கிச் சொன்னதாவது :

"ஓகோ! பங்காளிகளே! நாம் செய்கிற வர்த்தகத்தில், அகப்பட்டதை நாலு பங்காக்கினேன்! முதலாவது, யெனக்கு வர வேண்டிய ஒரு பங்கை எடுத்துக் கொள்ளுகிறேன்! இரண்டாவது, நான் உங்களுக்கு இராசாவா யிருக்கிற படியினாலே, அதற்கு ஒரு பங்குயெடுத்துக் கொள்ளுகிறேன்! மூன்றாவது, நானுங்களைப் பார்க்கிலும் அதிகப் பிலனுள்ளவனுமாய், வல்லப முள்ளவனுமா, யிருக்கிற படியினாலே, அதற்கொரு பங்கு யெடுத்துக் கொள்ளுகிறேன்! இன்னமொரு பங்கு இருக்குது! அதைத் தொடுகிறவன் தன்னை யிழந்து போவானெ"ன்றுது!

அப்படிப் போலே, அதிகார முள்ளவனுமாய்ப் பெலத்தவனுமா யிருக்கிறவருடனே எளிய மனுஷர் யாதொரு வியாபாரம் பண்ணினால் தங்கள் கைப்பொருளை யிழந்து கெட்டுப்போவார்களென்றவாறு"

ஆறாம் கதை முற்றும்.

குறிப்புகள் :

இக்கதைக்கு ஓலைச்சுவடியில் எந்தத் தலைப்பும் தரப்படவில்லை!

சிங்கத்துடன் வர்த்தகம் என்ற தலைப்பு பதிப்பாசிரியர் இட்டதே.

ரிஷபம் = காளை

இந்தக் கதை, இதுவரை வந்த கதைகளிலிருந்து வேறுபட்டது!

தொழில் பற்றியது!

வர்த்தகம் செய்த குடிகளில், தமிழ்க்குடி பழைமையான குடியாகும்!

கடல் கடந்து வாணிகம் சென்ற பெருமை தமிழர்களுக்கு உண்டு!

வாணிகத்தில் நீதி, நேர்மை இவற்றைக் கடைப்பிடித்து வாணிகத்தைத் தூய்மையாக ஆக்கித் தந்த குடி தமிழ்க் குடி!

அதன் அடிப்படையிலேதான் இக்கதையை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்!

வாணிகம் பெருகிய தமிழகத்தில், ஓரிருவரால் ஏமாற்றங்களும் வந்திருக்கவே செய்யும்!

அவ்வாறு ஏமாறக் கூடாது என்பதற்கு எழுந்த கதையே இது!

இந்தக் கதையில் வரும் பங்கு நோக்கத்தக்கது: நாலில் ஒரு பங்கு இங்கு குறிப்பிடப்பட்டது. ஏன்?

வணிகத்திற்குச் சென்றவர்கள், நான்கு பேர்! அதனால், கிடைத்த பொருளைச் சமமாகப் பிரிப்பதற்காக. நான்கு பங்குகள்.

ஆகவே, கூட்டு வணிகத்தில், கிட்டும் இலாபமானது கூட்டுச் சேர்வோர் எத்தனை பேர்களோ அத்தனை சம பங்குகளாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற நீதியும் இதில் பொதிந்துகிடப்பதை உய்த்துணரலாம்!

இக்கதையின் மாந்தர்களைச் சிறிது எண்ணினால், இன்பம் பொங்குகிறது!

சேர்ந்துள்ள நான்கு கூட்டாளிகளைச் சிறிது உற்றுப் பாருங்கள்!

காளை, சிங்கத்திற்குப் பயப்படக் கூடியது!

ஆடு, நரியிடம் அஞ்சக் கூடியது!

நால்வரில் இருவர் அஞ்சி நடுங்குபவர்கள்!

எனவே, கூட்டே நகைப்புக்கிடமாக உள்ளது!

இவ்வாறு, கூட்டானது பொருத்தம் இல்லாமல் இருக்கக் கூடாது என்பதே இக்கதை கூறும் நீதி.

நரி, ஆட்டைவிட வலியதாயினும், அதனால் சிங்கத்திடம் வாலாட்ட இயலாது!

எப்படிப் பார்த்தாலும், நால்வரில், சிங்கம் தனிப்பெரும் சக்தி உள்ளது!

அதனால்தான், சிங்கம், ஏனைய மூவரை எளிதில் ஏமாற்றி விட்டது!

வணிகத்தில் ஈடுபடுவோருக்கு இஃது ஒரு பாடமே!

எத்தனையோபேர்கள் இந்த உண்மை தெரியாமல், கூட்டு வணிகம் செய்து ஏமாந்துபோயுள்ளனர்!

அவர்களுக்கு நமது இந்த ஓலைச் சுவடிக் கதை ஒரு பாடமாக அமையட்டும்!

வணிகத்தில் மட்டுமல்ல, திருமணத்தில்கூட, எளியோர் வலியோரிடம் சம்பந்தம் வைத்துக் கொண்டால் அதனால் எத்தனையோ அவமானங்கள் வரும்!

பெண்வீட்டாரும் கணவன்வீட்டாரும் சமமாக இருந்தால், சிக்கல்கள் ஏற்படும் வாய்ப்புகள் குறைவாகும்!

இவ்வகையில், இக்கதையானது சமுதாயத்திற்குத் தேவையானதாகவே உள்ளது.

சுவடியியல் (manuscriptology) நோக்கில் சில திருத்தங்களை இங்கு நோக்கலாம்:-

சுவடிச்சொல்	திருத்தம்
பங்காக்கிநேன்	பங்காக்கினேன்
வற்தகத்தில்	வர்த்தகத்தில்
செய்துக்கொண்டு	செய்துகொண்டு

6

BUSINESS WITH LION

A lion, bull, goat and a fox all agreed themselves to do business jointly !

All the four, ruffled the forest !

The lion caught a deer !

The lion divided the deer into four parts.

Then the lion growled : "Oh ! my partners ! I have divided the benefit of business into four! Firstly, I will take my own share ! Secondly, since I am your king, I will take the potentate's share ! Thirdly, as I am stronger than you, I take a separate for that ! Lostly remains one portion ! If anybody takes this fourth share, he will lose his life ! "

Likewise, if anyone does transact with a strudier partner, he will have to forgo his assets apart from life spoiling.

VI story ends.

Notes :-

There is no title for this story given in palmleaf.

The present title has been assigned by the editor.

bull - rishapam

This story is somewhat different from the previous ones !

Business oriented !

Tamil community is one of the most ancient community thatindulged in business.

Tamil community has the glory of handling business even abroad, travelling by sea, centuries before Christ.

Preserving justice and probity in business, the Tamll community had set a good precedence.

Against this backdrop, we have to analyse this story.

In this upsurge of business cases of cheating may have been experienced.

To sound alarm not to fall a prey to cheaters is the motive of our present story.

The 'share' in this piece may be taken note of ; "One fourth" has been contemplated here, why ?

Persons went on business were four; so the 'one fourth' for each !

So, it can be inferred here that the partners should bifurcate the profit equally among themselves. This is the lesson here.

When we think over the characters of this story, we get joy!

Bull is fear stricken at the sight of lion !

Goat will tremble in front of fox !

Among the four two are panic stricken in front of the other two.

So, one can not but burst into laughter on seeing their company !

Partnership should not be like this !

The fox, though stronger than goat, can not hold its head high in front of lion !

In all, the lion is the strongest !

That is why, the lion cheated !

Definitely, this is a lesson to all the business people !

Having not understand this notion, many have gone astray!

Let this palmleaf story be a lesson for such persons !

Not only in business, even in marriage relations, if one has alliance with a richer family, then he has to suffer later in many ways !

In this line, the present story is useful for society !

With a manuscriptological outlook, we can observe the following :

Manuscript word	*Correction*
pankākkinēṇ	pankākkiṇēṇ
vaṛttakattil	varttakattil
ceytukkoṇṭu	ceytukoṇṭu

7

சிங்கமும் கழுதையும்

சிங்கமும் கழுதையும் மெத்த சிநேகமா யிருந்தன!

சிங்கமானது, கழுதையைப் பார்த்து, "ஓகோ சிநேகிதா! நாமிருவரும் காட்டுக்குப் போய் வேட்டையாட வேணும்! நீயொரு புதரிலே யிருந்து கொண்டு வுரத்த சத்தமாய்க் கூப்பிடவேண்டிய தென்றது!

அப்படிக்கிக் கூப்பிடும்போது, சத்தங் கேட்டவுடனே, மிருகங்கள் பயந்து, வெளியே புறப்படுகையில், சிங்கம் யெல்லாத்தையும் அடித்துக் கொன்னுது !

கழுதை, சிங்கத்தைப் பார்த்து, "அய்யா ! நான் கூப்பிட்ட சத்தத்தினாலே சகல மிருகங்களும் பயப்பட்டுப் புறப்பட்டு தல்லவோ ! என் சத்தத்துக்கு நீரும் பயந்தீரோ ?"வென்றுது.

சிங்கத்துக்கு மெத்தக் கோபம் வந்துது !

கழுதையைப் பார்த்து, "அடே நீசா! உன்னையும், உன் குணத்தையும் அறியாதே போனேனாகில் பயப்படுவேனெ"ன்று அடித்துத் துரத்தி விட்டுது!

அப்படிப்போலே, பெரியவர்களை யண்டினவர்கள், மரியாதை தப்பி தாங்கள் பேசினால், கழுதையைப் போலவே துன்பப்பட்டுப் போவார்க ளென்றவாறு'[2].

7-ஆம் கதை முற்றியது.

குறிப்புகள் :-

சிறியோர் பெரியோரை அண்டிப் பிழைக்கலாம் என்ற நீதிக்கு முன்பு ஒரு கதை (எண்: 4) படித்தோம்!

இதில், அப்படிப் பிழைப்பவர்களுக்கு ஒரு நீதி வருகிறது!

அஃதாவது, பெரியோரை அண்டிப் பிழைக்கும்போது, பேச்சு வார்த்தைகளில் மரியாதை தப்பக்கூடாது என்பதே அது !

எனவே, ஒரு கதையின் வளர்ச்சியாக இன்னொரு கதை இருப்பதைக் காண்கிறோம்.

மேற் கதையில், கழுதையானது, தான் சிங்கத்தைவிடக் குறைந்த சக்தி உள்ளவன் என்பதை அறிந்தும், சிங்கத்திடம் கேலி பேசலாயிற்று! அதனால் கழுதைக்கு வந்த துன்பம், வரத்தக்கதே !

தன்னைப்பற்றி நன்கு அறிந்திருந்தும், ஏதோ ஓர் அசட்டுத் துணிவில் தனக்கு மீறிய செயலில் இறங்கக் கூடாது என்ற நீதியையும் நாம் இக்கதையின் மூலம் பெறலாம்.

இந்தக் கதையில், சிங்கமானது, பிற விலங்குகளை அடித்துத் தின்றது’

ஆனால், அதைக் கதை சிறிதும் கண்டிக்கவில்லை!

அதைக் கண்டிக்கப் புறப்பட்டிருந்தால் கதை வடிவம் (story structure) தொலைந்து போகும் !

எனவே கதையின் வடிவம் பேணப்பட்ட வகையையும் நாம் உணரல் தகும் !

7

LION AND DONKEY

Lion and donkey were friends.

Lion told to donkey, "Halo, friend ! We two should go to the forest and hunt ! You, lurking in a bush, have to bray at the top of your voice !

On hearing this loud noise, animals ran hither and thither!

The lion killed all those animals running.

The donkey said to lion, "Sir! Because of my sound only all these animals came out and took to their heels ! You also trembled to my sound ?"

Lion was incensed.

Looking angrily at donkey, the lion said, "O vile! If I don't know you and your charecter, I have to get scarred of you !"

So roaring, the lion chased the donkey away !

In the same manner, those who do live under the patronage of mighty, should hold their tongues ! Otherwise, they will have to suffer !

VII story ended.

Analysis :-

The poor can live as a protege of mighty - this was understood in a previous story (No. 4).

Here, in addition, a moral has been rendered to such persons.

That is, while living under the cover of somebody, one should not exceed his or her limit !

So, one story forms a basis for another story !

In the above story, the donkey, knowing very well that it is inferior to lion in strength, braves to mock at lion !

As a result, the donkey was humiliated and suffered, at the hands of lion !

So, it is a lesson for all that one should not think to plunge into any activity beyond his or her capability.

In this story, the lion butchered other animals !

But this has not been condemned in the story !

If the execration is taken up, then the *structure of the story* will collapse !

So, in this way, we have to view how the structure of the storyhas been preserved.

8

சிங்கமும் எலியும்

சிங்கம் குகையில் படுத்துக் கொண்டிருக்கும்போது, எலி அதன் மேலே குதிக்கிறதும், ஆடுகிறது மிப்படிச் செய்து கொண்டு யிருக்கும்!

சிங்கம் ஒரு பொல்லாப்புஞ் செய்யாமலிருந்தது!

வேடர் அந்தக் காட்டிலே வலைகளைக் கட்டினபோது, சிங்கம் வலையில் மாட்டிக்கொண்டு, வெகு சத்தமாய்க் கூப்பிடும் போது எலி, யிதைக் கண்ட உடனே, வலைகளைச் சின்னாபின்னமாய்க் கடித்துச் சிங்கத்தை விட்டு விட்டுது!

சிங்கம், தனக்குள்ளே சொல்லிக் கொண்டதாவது, "எலி நம்முடைய முதுகின்மேலே ஓடுகிறதும், குதிக்கிறதும், இப்படி யிருக்கும் போது, நாமதை யடித்துப்போட்டா, எப்போது, வேடராலே நமக்குச் சிவலயம் வருமல்லல்லோ? நாம் சற்றே பொறுத்துப் பார்த்தபடியினாலே, நம்முடைய சீவன் தப்பிப் பிழைத்தது பொறுமையாலே(யன்றி) வேறொன்றுமில்லை!" யென்றுது!

அப்படிப்போலே, மனுஷரானாலும் சில சமயத்திலே உயிரைக் காப்பாற்றிக் கொடுப்பார்களென்றவாறு!

8-ஆம் கதை முடிந்தது!

ஆய்வுகள்

இந்தக் கதை சிறாரிடையே மிகவும் புகழ் பெற்றது!

இருப்பினும், ஓலைச்சுவடியிலேயே அக்காலத்தில் எழுதி வைத்துள்ளனர் இதை என்பதை உணர்த்தவே இங்கு பதிப்பிக்கப் படுகிறது!

இக்கதையின் முடிவில் வந்துள்ள தொடர் தெளிவில்லை; ஓலையில் உள்ளது போல அப்படியே பதிப்பிக்கப்பட்டுள்ளது. இத்தொடரை பிரித்துப் படித்துக் கொள்ள வேண்டும்; "அப்படிப் போலே, மனிதர்களும் எளியோர் தவறுகளைப் பொறுத்துக் கொண்டால், அவ்வெளியோரும் நம் உயிரைக் காப்பாற்றிக் கொடுப்பார்கள்" என்று வருவித்துப் படித்துக்கொள்ளவேண்டும்.

இறப்பு என்பதற்குச் சிவலயம் என்ற ஒரு சொல் இக்கதையில் வந்துள்ளது! "சிவனடி சேர்ந்தார்" என்று எழுதுவதற்கு ஈடாக நிற்கிறது இது! சிறப்பான சொல்!

"சிறுதுரும்பும் பல்குத்த உதவும்" என்ற பழமொழி இங்கு ஒப்பிடத்தக்கதே.

உருள் பெருந்தேருக்கு அச்சாணியானது சிறியதாக இருந்தாலும், அத்தேருக்கு ஆதாரமாக அமைவது போல, எலியானது அற்ப உயிராக இருந்தாலும், சிங்கத்தையே காப்பாற்றக் கூடியதாக அமைந்துவிட்டதல்லவா?

இது வாழ்க்கையின் ஒரு தத்துவம்! பிற நூற்களில் 'சுண்டெலி என்று வர, இங்கு 'எலி' என்றே வந்துள்ளது.

சுவடியியல் நோக்கில் சில திருத்தங்களை இவண் பேசலாம்:-

சுவடியிற்கண்டவை	திருத்தம் பெற்றவை
காப்பாத்தி	காப்பாற்றி
அப்படிபோலே	அப்படிப்போலே
பாற்த்த	பார்த்த

8

LION AND MOUSE

A lion was reclining in its den.

A mouse was gamboling on it!

But, the lion did not object it! It just tolerated.

When some hunters spread net to catch the lion, the feral animal fell a pray to it! It roared.

Hearing this summon, the mouse went and cut the net with its teeth!

The lion was served.

At that time the lion told to itself; "When the mouse was playing on me I just tolerated. If I had not done that, I would have breethed' my last now!"

Likewise, even the scums may be very useful to save live!

VIII story ended.

Research :

This story is famous among the kids!

Even then, such stories had been imbibed in palmleaves even in ancient times! In order to proclaim this alone, such stories have been taken up here for publication!

The last statement of the author is clumsy. But this has been edited as it is available in palmleaf.

We have to extend the statement by adding a few words "Likewise, if persons endure the foibles of simpletons, those people will save their life"; This may be the author's intention.

A new Tamil word has been adopted in this story - 'Sivalayam' which means death.

People are wont to write "He attained the feet of Siva". The above word "sivalayam" is a similar word. A remarkable word!

The proverb, "One stitch saves nine" may be compared here.

Just like a linchpin is a basis for a car, a small mouse has saved the soul of a sturdy lion!

This is the philosophy of life!

In this story, usually, versions say as 'mouse'; but here, the Tamil text in leaf does not mark as 'cuṇṭeli' (mouse).

Through the glass of manuscriptology, we can observe the following.

Manuscript word	*Corrected word*
kāppätti	Kāpparṛi
appaṭi pōte	appaṭippōte
pāṛtta	pārtta

9

சிங்கமும் பல மிருகங்களும்

சிங்கம் காட்டிலிருந்து கொண்டு, அங்கே காலட்சயம் பண்ணிக்கொண்டிருக்கிற குதிரை, யெருது, குடத்தி இதுகளைக் கொன்னு தின்னவேணுமென்று, துரத்தத் தலைப்பட்டுது!

இதுகள், சிங்கத்துக்கு அகப்படாமல் தப்பித்துக் கொண்டு வந்துது.

சிங்கம், வியாதிப்பட்டு, எழுந்திருக்கப் பிலனத்துப்போய், படுத்த கிடையா யிருக்கிறதை மிருகங்கள் கண்டபோது. “இந்தச் சமயத்தில், சிங்கத்தைக் கொல்லாமல் விட்டுவிட்டோமானால், இனிமே லிது, நம்மைக் கொன்னு தின்னுவிடுமென்று, குடத்தி சிங்கத்தின் குரவளையைக் கடிக்கத் தலைப்பட்டுது!

யெருது, சிங்கத்தின் மாரிலே பாயத் தலைப்பட்டுது! குதிரை சிங்கத்தின் தலையிலே உதைக்கத் தலைப்பட்டுது!

இந்த விதத்திலே, சிங்கத்தைக் கொல்லத் தலைப்பட்டுது!

அப்படிப்போலே, யெவனாகிலுமொரு அதிகாரத்தி லிருக்கும் போது, எல்லார்க்கும் நல்லவனாய் நடந்துகொள்ள வேணும்; இல்லாவிட்டால், யெல்லாராலேயும் நாசப்பட்டுப் போவார் களென்றவாறு.

9-ஆம் கதை முடிந்தது.

குறிப்புகள் :

இக்கதை ஆட்சியில் அல்லது உயர் பதவிகளில் இருப்பவர் களுக்கு மட்டும் ஏற்பட்டது!

அதிகாரத்தில் இருப்பவர்கள், பிறரை அனுசரித்து, உதவி செய்து நடந்து கொள்ள வேண்டும்; அப்படி இல்லாது அதிகாரத் திமிரில் இருந்தால், வாய்ப்பு வரும்போது, மற்றவர்களால் கேடு தான் வரும் என்பதே இக் கதையின் நீதி!

இதை அலுவலகங்களிலும், அரசியலிலும் இன்று நாம் கண் கூடாகக் கண்டு வருகிறோம்!

இக்கதை தற்போதைய நிர்வாக முறைக்கு மட்டுமல்ல, மன்ன ராட்சிக் காலத்திற்கும் பொருந்தக் கூடியதே!

காலட்சயம் = காலட்சேபம்

சுவடி	திருத்தம்
நடந்துக்கொள்ள	நடந்துகொள்ள
எல்லர்க்கும்	எல்லார்க்கும்
எவனாகிலும்யொரு	எவனாகிலுமொரு
கொண்ணு	கொன்னு
திண்ணு	தின்னு

9

LION AND OTHER ANIMALS

A lion, living in a forest, started forth chasing other animals like hyena, horse, bull etc., with an avarice of eating them.

These poor animals some how or other evading the lion.

One day, the other animals looked at the lion which was peaky with illness. The lion could not even stand.

They thought, "This is the ripe time! If we don't kill the lion now, the lion will pierce us!"

Thinking in this way, the hyena pounced upon the lion to tear the trachea!

The bull started holding the chest of lion!

The horse twitched on the head!

In this way, all began to rout the lion!

So, when a man is in a status with power, he should cope up with others giving due respect; otherwise, he has to embrace the worst failure by them!

IXth story ended.

Notes:-

This story is specially intented for those in power.

Those in high place should transact it smoothly with other around; otherwise they will be vanquished!

This is the moral here!

This, we see in offices as well as in politics!

This didactic word holds good not only for today's administration but even for the rule of despots!

kālatcayam = kālakshēpam

Some corrections while editing:-

Mistake	*Correction*
naṭanthukkoḷḷa	naṭanthukoḷḷa
ellarkkum	ellārkkum
evanākilumyoru	evanākilumoru
Koṇṇu	konnu
tiṇṇu	tinnu

10

வெகு ஆசை வெகு நஷ்டம்

நாலு ஊறும் நா யிறைச்சித் துண்டைத் திருடிக் கொண்டு, "சந்தடி யில்லாத விடத்திலே போய்த் தின்க வேணுமென்"று போற போது, வழியிலே ஆறு யிருந்துது!

அதிலே நீஞ்சி நடுவே போகையி லதினுடைய நிழல் வேறொரு நாய் இறைச்சித் துண்டைக் கொண்டு போறாப் போலே காணப்பட்டுது!

அதையும் பிடுங்கிக் கொள்ள வேணுமென்று, தண்ணிக்குள்ளே முழுகி, வாய் திறக்கையில் வாயிலிருந்து இறைச்சித் துண்டு விழுந்துவிட்டுது!

நாய் கஸ்திப்பட்டுச் சொன்னதாவது, "ஐயோ! நமக்ககப் பட்டதை நாமனுபவியாமல், பிறருடைமையைப் பறித்துக் கொள்ளப் போனதினாலே, நம்முடைய கையிலிருந்த பொருளும் போக் கடித்தோ மென்றுது!

அப்படிப்போலே, அவரவர் தங்களுக்குள்ளதைக் கொண்டு காலட்சயம் பண்ண வேணுமல்லால், பிறருடைமையைப் பிறித்துக் கொள்ளப் போனால், தங்கள் கையிலிருக்கிற பொருட்களை யெல்லா மிழந்து போவார்க ளென்றவாறு

10-ஆம் கதை முடிந்தது.

ஆய்வு :

"பேராசை பெரு நஷ்டம்!" என்றே பெரும்பாலும் கூறப்படும். இங்கே இதே கருத்து, "வெகு ஆசை வெகு நஷ்டம்" என வந்துள்ளது.

எனவே, ''பேராசை பெருநஷ்டம்'' என்ற பழமொழி வடிவும் அவ்வளவாகப் பரவாத ஒரு காலக்கட்டத்தில், வெகு, ஆசை வெகு நஷ்டம்' என்ற தலைப்பு இடப்பட்டிருக்க வேண்டும்!

தண்ணீருக்குள் உள்ள நிழலை அல்லது உருவத்தைக் கொண்டு இன்னும் பல கதைகள் உண்டு!

தண்ணீருக்குள் விழுந்த பெண்ணின் கண்ணிமர் ஆனது மீன் போல இருந்தது என்று, மீனவர்கள் வலையைப் போட்டு ஏமாந் தவர்களாம்! [இலக்கியத்தில் கண் (ஸ்டார்பிரசுரம், 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5) என்ற நூலில் கண்பற்றிய இது போன்ற செய்திகள் நுவலப்பட்டுள்ளன]

''இருப்பதை விட்டுப் பறப்பதைப் பிடிப்பது போல'' என்ற பழமொழியை ஓரளவுக்கு இக்கதை நீதியோடு ஒப்பிடலாம்.

பறப்பதைப் பிடிக்க நினைப்பதில்கூடத் தவறில்லை! பிறர் பொருளை அல்லவா பிடிக்கத் துணிகிறார்கள்! அதுதான் கண்டிக்கப் பட வேண்டியது!

எந்த ஊர்க்காரர், யாருடைய பொருளைப் பறித்தார் என்ற வினாக்களுக்கு இடமளிக்காமல், விலங்கு மூலமாகப் பொதுப் படையாக நீதி கூறிய பாங்கே பாங்கு !

''ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு'' என்ற பழமொழியும் இங்கு ஒப்பிடத் தகுந்ததே.

நாய், அடுத்த நாயின்வாய் இறைச்சியைக் கவர ஆத்திரப் பட்டதே ஒழிய, வாயைத் திறந்தால் தனது இறைச்சி கீழே விழும் என்று நினைக்கவில்லை! அதுதான், புத்திமட்டு!

ஆகவே, நாய் நீரில் நீந்திப் போவதும், அதன் நிழலை அது காண்பதும், அடுத்த நாயின் வாயில் இறைச்சி இருப்பதாக அது

நினைத்துத் திடீரென்று அதன் மேல் பாய்வதும் எல்லாம் நல்ல நாடகப் பாங்கில் அமைந்து கதை சுவையாக அமைந்து விட்டது!

அதனால்தான் காலத்தை விஞ்சி இன்றுவரை நிலைத்துள்ளது!

நாலுவூறும் — நாவூறும்; நால் = நாக்கு

கஷ்திப்பட்டு = கவலைப்பட்டு

பதிப்பு நோக்கில் சில திருத்தங்கள்:-

சுவடிச்சொல்	திருத்தம்
யெல்லாம்மிழந்து	யெல்லாமிழந்து
பொருட்க்களை	பொருட்களை
உடமை	உடைமை
பரித்து	பறித்து
அப்படிபோலே	அப்படிப்போலே

10

THE GREEDY DOG

A greedy dog, with its watering mouth, stealing a piece of flesh loped to enjoy it in a safe place!

A river interjected.

The dog in order to cross the river began to swim. Suddenly it saw another dog with flesh in its mouth which was actually but its own shadow!

The greedy dog wanting to usurp the other dog's flesh, jumped over the dog at which time its own flesh slipped from its hold!

The dog, sorrowing, told, "Alas! without thinking to enjoy with what I sad, I vainly wanted lasciviously other's article!"

In the same manner, every body should ponder to lead life with their own possessions; if they exhibit avarice, they will be ruined losing their own!

Xth story ended.

Research :

Usually in Tamil, we say, "Great avarice, great detriment"; but here the title is as "More avarice, more detriment"

So, at a time when the popular title or saying was not in vogue, the present title may have been assigned.

There are many stories in Tamil linking the shadow in water.

Once a few fishermen began to spread net to catch fish taking the shadow of the eyes of a woman! Such sketches have been furnished in the Tamil book; Ilakkiyattil kaṇ" (Star publications, 72, Big street, Triplicane, Chennai, Tamilnadu, India).

"Catching the flying losing the bird on hand" is a Tamil proverb which can be somewhat compared here.

But there is nothing wrong in catching the flying; but it is definitely a crime to grab others.

In this story, there is no question about who lost, and who took! Without mentioning anybody's name, good moral has been articulated with dog!

This is great!

The Tamil proverb, "When hastiness in anger advances, reason retreats" can be swimmingly compared with our story.

The dog was pressed with a necessity; but it was not thoughtful! That is, loss of reason!

So, all the wants, the dog swimming in the river, 'snatching' the flesh from other dog, losing its own flesh, one by one, have been formed as dramatic scenes themselves!

That is why the story has survived onsloughts of time!

nāluvuṛum = nāvuṛum

nāl = tongue

Kastippaṭṭu = worried

Regarding the corrections we have made:-

Wrong	*Right*
ellāmmiḷantu	ellāmiḷantu
porutkkaḷai	porutkaḷai
uṭamai	utaimai
parittu	paṛittu
appaṭipōlē	appaṭippōlē

11

காட்டுப் புறாவும் எறும்பும்!

காட்டுப் புறா, மரத்தின் பேரிலே கூண்டுகட்டிக் கொண்டு காலட்சயம் பண்ணிக் கொண்டு வருகையி லதினுடைய வாய்க்குத் தப்பிச், சில தானியங் கீழே விழுகிறதை மரத்தின் வேரிலிருக்கிற வெறும்பு தின்னுகொண்டு காலட்சயம் பண்ணி வருகையி லது, "நமக்கு கிந்தச் சாப்பாடு கொடுக்கிற தாரெ"ன்று வண்ணாந்து பார்க்கையில் புறாவைக் கண்டு, நன்றியறிந்த தோஸ்திரஞ் சொன்னதாவது, "அய்யா! புறா விராசாவே! யெனக்குச் சாப்பாடு கொடுத்து யென்னைக் காப்பாத்தி வருகிறீர்! என் சீவனை யுமக்குக் கொடுக்க நன்றியறிந்திருக்கிறேன்!" என்றது.

புறா, "நீ யற்ப வஸ்தா யிருக்கிறாய்! நீ யென்ன சகாயம் பண்ணப் போறா யென்றுது!"

இப்படி யிருக்கையில் வேடன், காடெல்லாந் திரிந்து, வொண்ணும் அகப்படாமல் வருகிறபோது, மரத்தி லிருக்கிற புறா வைக் கண்டு, மரத்தினண்டையில் வந்து, புறாவை அம்புனா லெய்கிற சமயத்தி லெறும்பு கண்டு, "நம்முடைய விரட்சகனை வேடன் கொல்லப்போறா னென்று வனுடையதுடையிலே நன்றாய்க் கடித்துது!

வேடன் நோவு பொறுக்க மாட்டாமல், வில்லையும் அம்பையும் கீழே விட்டான்!

இந்தச் சத்தத்தைப் புறா கேட்டுப் பறந்தோடிப் போறபோது சொன்னதாவது, "யெறும்புக்கு நாம் அற்ப வுபகாரம் பண்ணின படியினாலே, யது நம்முடைய வுயிரைக் காப்பாத்தி விட்டுதே!" யென்று போய் விட்டுது!

அப்படிப்போலே, "யெளியவர்களுக்குச் செய்கிற சகாயம் வீணாய்ப் போகாம லவர்கள் யாதொரு சமயத்திலே யுயிரைக் காப்பாத்துவார்க ளெ"ன்றவாறு

11-ஆம் கதை முடிந்தது

குறிப்புகள் :-

இக்கதையும் புகழ் பெற்ற கதையே !

கதை கூறச் செய்வதில் சிற்சில வேறுபாடுகள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

இருப்பினும், தமிழ் மண்ணே இது போன்ற கதைகளுக்கு மூலம் என்ற உண்மையை நிறுவும் முயற்சியில்தான் இங்கு இது பதிப்பிக்கப்படுகிறது!

''எளியோர்க்குச் செய்யும் உதவி, நமக்குப் பயன்படும்'' என்று பொதுவான நீதியை இக் கதை கூறவில்லை!

''எளியோர்க்குச் செய்யும் உதவி, நமது உயிரைக்காப்பாற்றப் பயன்படும்'' என்று நீதி கூறப்பட்டுள்ளது!

இது ஆய்விற்குரியது!

அஃதாவது, பழங்காலத்தில், மனிதர்களுக்கு ஆபத்துகள் நிறைய வரும்! இன்று உள்ளது போன்ற பாதுகாப்பான சூழல் அன்று இல்லை!

பத்துப்பேர் வீட்டை விட்டு அடுத்த ஊர் சென்றால், ஒன்பது பேர்தான் போய்ச் சேருவார்கள்! இடையில் ஏதோ ஒன்றினால் ஒருவர் பலியாவார்!

எனவே அம்மாதிரியான சூழல்களில், அற்பமான - எறும்பு போன்ற - உயிர்கள் மனிதனின் உயிரைக் காப்பாற்றவல்லன! அதைத்தான் கதை கூறுகிறது!

எனவே, ''சமுதாயக் கண்ணாடி, கதை'' என்ற உண்மை உறுதியாகிறது!

மனித உயிர், மனிதனுக்கு இன்றியமையாதது! பிற எல்லாம் பின்பே!

எனவே, மனிதனுக்கு ஆதாரமான உயிரைப் பற்றிச் சிந்தித்துள்ளதால், இத்தகுகதைகள் மிகமிகத் தொன்மை வாய்ந்தவையாக இருத்தல் வேண்டும்!

இத்தொன்மை காரணமாகத்தான், இதுபோன்ற கதைகள் வடமொழி முதலிய பல மொழிகளுக்குச் செல்ல முடிந்தது!

"உருவு கண்டு எள்ளாமை வேண்டும்" என்ற திருக்குறளின் கருத்து இவண் ஒப்பிடத் தகுந்ததே.

"கடுகு சிறுத்தாலும் காரம் போகாது", "மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது!" ஆகிய பழமொழிகளும் இக் கதையோடு ஒப்பிட்டு ஆயத்தக்கன!

கீழே, சில பதிப்புத் திருத்தங்கள் தரப்படுகின்றன:-

ஓலை	திருத்தம்
சமையம்	சமயம்
அப்படிபோலே	அப்படிப்போலே
பண்ணபடி	பண்ணினபடி
பிறா	புறா
பொருக்க	பொறுக்க
போறாநென்று	போறானென்று

11

PIGEON AND ANT

A dove in a forest, was living in a nest on a bough.

Slipping down its beak, some corus were interspersed down the tree.

An ant consuming the pieces of food was possing its days.

One day the ant looked up and saw the pigeon.

Then the ant told, "Liege! you are saving my soul by giving food! For this I am grateful to you for life! I can even die for you!"

But the dove despised it! "You are a tiddly thing! what you are going to do?" - The pigeon jeered!

This apart, one day, a hunter rambling in a forest and not finding any catch, reached this tree where our dove was dwelling.

The hunter started to fling an arrow quite rapaciously at the pigeon!

But the thankful ant, suddenly bit the hunter! The hunter dropped the bow and arrow down!

Sensing danger, the pigeon flew away!

Escaping, the dove told, "I did a modicum help; but as a requital the little ant saved my life!"

So, the trivial help done to the destitute will save life!"

XIth story ended.

Notes:-

This little story is also a famous one!

But little variations are there in the way of uttering.

This has been, however, published here only with a view to establish that Tamil was the language from which this story had travelled elswhere.

In the above story, it has not been articuleted that if we do help to poor, it will be useful for us in future.

But it has been specifically emphasised that such a triffling help would save one's life!

This needs a little thinking further.

In those days, calamities will fall on people quite often ! The secured life as we have today, was absent in that period!

If ten people start for a sojourn, only nine will reach the target! In the midway, one would have kicked the bucket!

So, in such circumstances, even a small creature like ant would of much useful!

The story recounted only this!

For man, his life is more important; the rest are only secondary!

In this way, the notion that "story is a mirror of society" has come true!

As pointed out earlier, since this story contemplates about human life, though little this and such others, may date back to very remote period.

"We should not indulge in raillery at small things" - An adage, of Thiruvalluvar which may be conpared here.

"Though miniscule, the mustard is vigorous", "Though little in size, the renown is great" - These sayings can also be likened with this story.

Below are given a few corrections made while editing:-

Loab	*Correction*
camaiyam	camayam
appaṭipōlē	appaṭippōlē
paṇṇapaṭi	paṇṇiṇpaṭi
piṛā	puṛā
porukka	poṛukka
pōrāneṇṛu	pōrāṇeṇṛu

12

ஓநாயும் நாரையும்

ஓநாய் இறைச்சியைத் தின்னும்போது, எலும்பு குரல்வளையில் மாட்டிக் கொண்டுது!

ஓநாய், நாரையைப் பார்த்து, "அய்யா நாரை யிராசாவே! எலும்பு குரல்வளையில் மாட்டிக் கொண்டதினாலே சாகிறாப் போலே யிருக்கிறேன்! அதை உம்முடைய மூக்குனாலே பிடிங்கிப் போட்டியானாலும்முடைய பிரயாசத்துக்கு நல்ல வெகுமானம் பண்ணுகிறேனெ"ன்றுது!

நாரை தன்னுடைய மூக்கை ஓநாய்க் குரல்வளைக்குள்ளே விட்டு, யெலும்பைப் பிடிங்கிப் போட்டுது!

"வெகுமானத்தைக் கொடு"யென்று கேட்டுது!

"அடே! சண்டாளா! நன்றி கெட்டவனே! நீ உன்னுடைய மூக்கை என் வாய்க்குள்ளே விட்டு, எலும்பைப் பிடுங்கும்போது, உன் தலையைக் கடிக்காமல் விட்டுவிட்டதை நினையாமல், யென்னை வெகுமானம் கேட்கிறாயோ?" வென்றுது.

அப்படிப்போலே, துஷ்டருக்குச் செய்கிற சகாயமும், அவர்களுடையே சினேகிதமும் ஆகாதென்றவாறு!

12-ஆம் கதை முடிந்தது.

சில நோக்குகள்

இக்கதையில், நாமே அயரும்படியாக ஓநாய் வாதிட்டுள்ளது!

"உன் தலையைக் கடிக்காமல் விட்டதே நான் செய்த உதவி" என்று ஓநாய் கூறியபோது எவரும் அயர்ந்து விடுவார்கள்!

"பாம்புக்குப் பால்வார்க்காதே" என்ற பழமொழி இங்கு ஒப்பிடத்தக்கது.

"பாத்திரமறிந்து பிச்சையிடு" என்ற பழமொழியும் இங்கு நினையத்தக்கது.

தீயோனுக்கு இரங்கி உதவினால், அவனால் நமக்கும் பிறருக்கும் தீமையே வரும் என்பது தமிழர் கொள்கை.

எனவே இக்கதையும் தமிழ் மண்ணில்தான் முதன்முதலில் உதித்திருக்க வேண்டும்!

ஓர் ஊரில் கெட்டவன் ஒருவன் இருந்தால், அவனை எல்லோரும் இகழ்வர்! அவனுக்குக் கடன் கொடுக்க யாரும் முன்வர மாட்டார்கள்! இதுவே தமிழர் பழக்கம்!

அப்படி இருந்தால்தான், பிறர் அவனைப் பார்த்துத் திருந்துவர் என்பதில் நம்பிக்கை கொண்டவர்கள் பழந்தமிழ் மக்கள்!

இப்பழந்தமிழ்த் தத்துவமே, மேற் கதையில் காணக் கிடக்கிறது!

பதிப்பு நோக்கில் சில குறிப்புகள்:-

பிழை	திருத்தம்
செய்கிர	செய்கிற
நீனையாமல்	நினையாமல்
குரவளை	குரல்வளை

12

WOLF AND HERON

A wolf, munching some flesh, got stuck, inside the trachea, with a bone !

The wolf told stork : "O respected heron king ! Since a bone is stuck in my throat, I am dying ! If you kindly remove it by your beak, I will give reward for that !"

So, the cormorant, by inserting its beak into the wolf's throat, pulled out the sticking bone !

"Give me the reward !"—the heron demanded.

"O you ! Wrench ungrateful ! What would you have done, if I had masticated your head when you inserted your head into my mouth ?"

Likewise, help to the rogues, and their friendship should always be despised.

XII th story ended.

Some Views :-

In this story, much to our surprise, the wolf has put forth its argument very wily !

"I have left your head unpierced; this is a great help on my part !"—Hearing this argument, everyone will be taken back !

"Don't pour milk to snake!"—This Tamil proverb can be compared here.

"Look the bowl before you cast alm" — is another Tamil proverb which may be likened here.

"If you show pity upon the evil, then only evil will befall you !"—This is the *philosophy of ancient Tamils* !

So, analysing in this manner, we can say that this story must have *florished on Tamil soil.*

If a person dwells in a village, then the laity will not give even loan to him; everybody will execrate him. This was the practice of ancient Tamils.

This proclivity was practiced by the Tamils only with a view to safeguard order in society.

Only this philosophy of Tamils is available to be seen in the above story.

While editing, we made the following corrections :-

Mistake	*Correct*
ceikira	ceikiṛa
nīṉaiyāmal	niṉaiyāmal
kuravaḷai	kuralvaḷai

13

மண்சாலும் இரும்புச்சாலும்

ஆத்துக் கரையில் மண்சாலுமிரும்புச் சாலு மிருந்துது!

மண்சா, லிரும்புச் சாலைப் பார்த்து, "அப்பா! நீ துஷ்டன்! என்னோடே வுனக்குச் சிநேகிதந் தேவையில்லை! யென்கிட்ட வராதே! எனக்குந்தானே மோசம் வருமென்றுது!

இரும்புச் சால், மண்சாலைப் பார்த்து, "உன்னைப் போலே நானுஞ் சாலா யிருக்கிறேன்! என்னாலே உனக்கு யாதொரு மோசம் வராதெ"ன்றுது!

இப்படி யிருக்கையில், வெள்ளம் வந்து, தண்ணி யிழுப்பி னாலே, யிரும்புச்சால், மண் சாலுடனே மோதத் தலைப்பட்டுது!

அப்போ மண் சால், சொன்னதாவது: ஐயையே! எனக்கு மோசம் வந்துவிட்டுதெ''ன்று, முன்னலே நா இரும்புச் சாலைத் துஷ்டனென்று அறிந்து, அவனை விட்டு விலகாமல் போனதி னாலே யிப்போ நமக்கு வெகு மோசம் வந்து விட்டுது!'' யென்று சொல்லுகையில். மறுபடி யிரும்புச் சால் மோதப்பட்டுது!

மண்சா லிரண்டு துண்டாய் உடைந்துது!

அப்படிப்போலே, யெவனாகிலும் துஷ்டருடனே கூட்டாளியா யிருக்கிறவர்களுக்கு, மெத்த மோசம் வருமென்றவாறு.

13-ஆம் கதை முடிந்தது.

குறிப்புகள்

பன்மை வருமிடத்தில், ஒருமை முடிவே தரப்பட்டுள்ள ஒரு நடையை இந்த ஓலைச்சுவடி முழுதும் காண்கிறோம்.

“மண்சாலும் இரும்புச்சாலும் இருந்தன” என்பதற்குப் பதில் “இருந்தது” என்றே ஓலையில் உளது.

“பன்றியோடு சேர்ந்தால், கன்றும் மலம் தின்னும்!” என்பது தமிழ்ப் பழமொழி!

இதனையே இக்கதை நிறுவுகிறது!

இக் கதையில் வேறு ஒரு நுட்பமும் உள்ளது!

அஃதாவது, வாழ்வில், நீங்கள் ஒரு தவறும் செய்திருக்க மாட்டீர்கள்! ஆனால், வேறு ஏதாவது ஒரு வழியில் ஒரு வம்பு வந்து அதனால் உங்கள் வாழ்வே நாசமாகிவிடும்!

அதைப்போல, மண்சால் எந்தத் தவறும் செய்யவில்லை! ஆனால், இரும்புச் சால், மண்சால் மீது மோதி மண்சாலின் வாழ்வு முடிந்து விட்டது!

பதிப்புக்குறிப்புகள்

சுவடி	பதிப்பு
ஐஐயோ	ஐயையோ
யிருக்கிர	யிருக்கிற
மருபடி	மறுபடி

13

EARTHEN URN AND IRON URN

There were an earthen pot and an iron pot on the bank of river.

The largemouthed earthen urn told the iron pot, "O, Sir You are a wicked fellow! You need not have friendship with me! Don't come by my side! Otherwise, I will get trouble!"

The large mouthed iron pot, replied, "I am also like you, a water pot! By me, nothing will befall you!"

Suddenly, because of the overflow of the river, the iron pot began to dash against the earthen pot!

Then the earthen pot cried: "Alas! I am finished! Since I have not departed from this iron pot, I am entangled now!"

While the earthen pot was mourning like this, the iron pot hit against it!

The earthen pot broke into two pieces!

Likewise, whoever has the relationship with vile persons, only worse will embrace him!

XIII th story ended.

Observations :

Singular verbal ending has been given for plural closing in almost all the places in this palmleaf manuscript.

Instead of writing "earthen pot and iron pot *were*", the leaf writes only, "is" !

There is a *proverb* in Tamil : "If the calf holds companion with pig, then it will also eat faeces!"

Our present story only establishes this !

There is another nuance in this piece !

In your personal life you may not have done anything wrong; but all sorts of evils will betake you because of others!

In the same manner, the earthen urn, for no mistake of it, had to suffer !

Observations while editing :-

Palmleaf	*Edited work*
aiaiyō	aiyaiyō
irukkira	irukkiṛa
marupaṭi	maṛupaṭi

14

முப்பித்தோ தேவனும் தவளைகளும்

ஒரு குளத்தில், வெகு தவளைக ளிருந்துது!

அதுகள், ''தங்களுக்கு ஒரு இராசாவைக் கட்டளையிட வேணுமெ''ன்று, முப்பித்தோ தேவனைப் பார்த்து, வெகு சத்தமாய்க் கூப்பிட்டுது!

முப்பித்தோதேவன், அதுகளுக்கு இராசாவா யிருக்க வொரு மரத்தை வானத்திலிருந்து [அனுப்பினான்]; குளத்தில் கனமான மரம் விழுந்த அதர்த்தியிலே குளங்கலங்கி, ''குளத்தைக் கலக்கு கின்ற இராசா, யென்னமென்ன தெண்டினை பண்ணுவானோ?'' யென்று திகிலெடுத்துப் பயந்துபோய், மூணுநாள் மட்டுஞ்சேத்துக் குள்ளே பூந்துகொண்டு, வெளிப்புறப்படாமலிருந்துது. களதிலே ஒரு தவளை கிளம்பி, மரத்தைக் கண்டு மெள்ள மெள்ள மரத்தின் கிட்ட வந்து பார்த்து, மற்ற தவளைகளை யழைப்பித்துது!

அதுகள் வந்து மரத்தைப் பார்த்து, ''ஓகோ விந்த விராசா ஊமையுமா அசைவு மில்லாத விராசாவுமா யிருக்குறான்! பேச்சு மில்லை! மூச்சு மில்லை!'' யென்று மரத்தின் பேரிலேறிக் கொள்ளு கிறதும், இறங்கிறதும், குதிக்கிறதும், இப்படி அதுகள், ஒரு பொல்லாப்பு மில்லாம விருக்கையில்,

தவளைகள், மறுபடியும் முப்பித்தோ தேவனைப் பார்த்து, ''ஓகோ! முப்பித்தோ தேவனே! பேச்சு மூச்சில்லாத இராசாவை யனுப்பினீரே! இந்த இராசா யெங்களுக்குத் தேவையில்லை! தயவு பண்ணி பேச்சு மூச்சுள்ள இராசாவை யனுப்பி வைக்க வேணு மென்று மறுபடியும் கூப்பிட, முப்பித்தோ தேவன், ஒரு நாரையை இராசாவாக அனுப்பி வைத்தான்!

அது குளத்திலே வந்து, இராசாவாக யிருந்துகொண்டு, தவளைகளைக் குத்திக் கிழித்துத் தின்னத் தலைப்பட்டுது!

தவளைகள், முப்பித்தோ தேவனைப் பார்த்து, ஐயையோ! முப்பித்தோ தேவனே! அநியாயமாய்ச் செத்துப் போனோ மிந்த யிராசா யெங்களுக்குத் தேவையில்லை! முன்னனுப்பின இராசாவை யெங்களுக்கு அனுப்பி வைக்க வேணுமெ"ன்று வேண்டிக் கொண்டுது!

முப்பித்தோதேவன், அதுகளைப் பார்த்து, "ஓகோ! நன்றி கெட்ட தவளைகளே! உங்களுக்கு நல்ல இராசாவை அனுப்பின போது வேண்டாமென்று என்பேரிலே முறையிட்டீர்களே! கண்டிப் புள்ள இராசாவை யனுப்பினபோது, மறுபடி அதிக முறையிடு கிறீர்களிப்போது, உங்களுக் கனுப்பின இராசாவை மாற்றக் கூடாது!" யென்று சொல்லித்துது!

அப்படிப் போலே, யிருப்பானந்த விடத்தை விட்டு, வேறே யிடந் தேடுகிறவன் தவளைகளைப் போலே அலைக் கழிந்து போவா னென்றவாறு!

14-ஆம் கதை முடிந்தது.

ஆய்வு :

இக்கதை அறியவராத ஒன்று.

மிகச் சிறந்த நீதி கொண்டது!

ஆட்சிகள் பலவற்றுக்கு இக்கதை பொருந்துகிறது!

"இந்த நிர்வாகம் செயலற்ற நிர்வாகம்" என்ற கூப்பாட்டையும்" இது கொடுங்கோல்அரசு' என்ற கூச்சலையும் உலகில் கேட்டு வருகிறோம்!

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய நமது இக்கதை இவ்வாறு, எல்லாக் காலத்திற்கும் பொருந்துகிறது!

அதனால்தான் காலத்தை விஞ்சி இன்றுவரை நின்றுள்ளது!

இக் கதை குறிப்பிடும் கடவுளான முப்பித்தோதேவன் ஆய்வுக்குரியவன்!

'முப்புரமெரித்த தேவன்' என்பதன் சுருக்கமாக இருக்கலாமா?

அன்றி, 'முப்பத்து முக்கோடி தேவர்' அல்லது 'முப்பத்து முத்தேவர்' என்பதன் திரிந்த வடிவாக இருக்கலாமா?

முப்பித்தோ தேவன் என்று ஒரு கடவுள்தான் கதையில் பேசப்படுகிறான்! பல கடவுளராகக் காட்டப்படவில்லை என்பதும் நோக்கற்பாற்று.

''பித்தா பிறைசூடி'' என்ற தேவார அடியால், 'பித்து' என்ற சொல் சிவனோடு தொடர்பு கொள்வதால், சிவனை, முப்பித்தோ தேவன் என்ற சொல் குறிக்கலாமா?

முக்கண்ணன் என்ற கருத்தில் சிவனைச் சுட்டுமா?

18-ஆம் கதையில், மக்களைப் படைப்பவன் என வருவதால், முப்பித்தோ தேவன், பிரம்மா ஆகும்!

ஓலைச் சொற்கள்	பதிப்பிக்கப்பெற்றவை
அழப்பித்துது	அழைப்பித்துது
அலைக்கழிந்துப்போ	அலைக்கழிந்துபோ
மருபடி	மறுபடி

14

GOD MUPPITTO AND FROGS

In a tank, many frogs were dwelling.

Looking at sky, they asked loudly the Muppittō god to send a king to them!

In answer to their prayer, the god Muppittō sent a log!

By the log's falling, the tank was puddled!

"Now ruffling king, what will do in future?" - this was the question before the frogs!

For three days continuously, no frog raised its head! All remained immersed in mire!

At last only one frog slowly came out of mud and looked upon the log!

Understanding that it was nothing but the material wood, it called other frogs!

"O! This king is motionless! Speachless!" — Thinking in this way, the frogs began to gambole over the log!

The frogs, once again, prayed to Muppittō god, "O! Muppittō god! You have sent a dumb king! We don't want such a still and petrified king! Please send a 'breathing' king!"

Answering, the god Muppittō sent a heron as their king!

The heron becoming a king in the tank, began to peck and pierce the frogs!

Once again the frightened frogs begged the Muppittō god, "Lo! Lo! Muppittō god! Quite pathetically some of us died! We don't want this king! Please send us the previous one!"

Staring at them, the god Muppittō chided:" Oh! Ungrateful frogs! When I sent a good king, you just abhorred him! Now, when a strict king Is sent, once again you are complaining! No, no! I will not change your king now!"

In this manner, if a person seeks greener pasture from his dwelling place, he has to suffer like the poor frogs!

XIVth story ended.

Research :

This story is quite unknown.

Excellent moral, it has got!

This is applicable to many governances!

We here often people saying that a certain government is inert and some other government is tyrannous!

So, our story, arose long back, is relevent even today.

Because of this revelence; this has survived to this date.

The god Muppittōtēvaṉ mentioned in this story is conscipicuous.

Can it be the short form of Muppuramerittavaṉ ?

Can it be a corrupt form of Muppattumukkōṭi devas or Muppattumuttēvar ?

Muppittō god is shown only a solitary god and not as many.

Taking the hint, from Thēvāram, of the line "pittā pirai cūṭi" and because of the allignment of 'pittu' with Siva, can we surmise that the god Muppittō dēvan will denote Lord Siva ?

Can it point out Siva in the sense of Mukkaṇṇan ?

Since in the story 18, he is termed as creator of people, the term Muppittō dēvan denotes Brahma !

Words in leaf	*Edited manner*
al̲appittutu	al̲aippittutu
alaikkal̲intuppō	alaikkal̲intupō
marupaṭi	maṟupaṭi

15

கிழக்குருவியும் அதன் இனத்தாரும்!

கிழக்குருவியும், அதன் இனத்தாரும் மரத்தின்பேரிலே, வெகு குருவிகளாய்க் காலட்சயம் பண்ணிக் கொண்டிருக்கையில்,

குடியானவன், மரத்துக் கெதிரா யிருக்கிற நிலத்திலே, சணப்பு விரைகள் விதைத்தான்!

கிழக்குருவி, யிதைக் கண்டபோது, தன்னுடைய பிள்ளை களாகிற மற்ற குருவிகளைப் பார்த்துத், "தம்பிமாரே! கேளுங் கோள்! நமக்கெல்லாருக்கும் நாசகாலம் வந்து விட்டுது! இதோ குடியானவன் சணப்பு விரைக்குறா னது முளைத்துப் பலனானா லதிலிருக்கிற நாரை யெடுத்துக், கண்ணிவலை யுண்டாக்கி, நம்மை யெல்லாம் பிடித்துக் கொன்னு தின்னுபோடுவார்கள்! ஆனபடி யினாலே, இப்போ துடனே, நாமெல்லாரும், அந்த விரைகளைப் பொறுக்கித் தின்றுவிட்டோமானா லுயிர் தப்பலாமெ"ன்றுது

மற்ற குருவிகள், யென்னடா! கிழவர் எங்களைப் பயமுறுத்து கிறாய்! சணப்பு விரை விரைக்கிறானென்று, மதிலே நாருண்டா மென்றுங் கண்ணியும் வலையுஞ் செயிது நம்மை யெல்லாரையும் பிடித்துக் கொள்ளு வானென்றும் பயித்தியம் பிடித்துப் பிதற்று கிறா னெ"ன்று சொல்லித்துகள்!

சணப்பு விரைகள் முளை புறப்பட்டுது!

கிழக்குருவி, மற்ற குருவிகளைப் பார்த்துப், "பிள்ளைகளே! சணப்பு விரையெழும்பி விட்டுது! நான் முன் சொன்னபடி, உங்களுக்குப் பொல்லாப்பு வரும்! இரத்தக் கண்ணீர்விட் டழுவீர் களெ"ன்று சொல்லித்துது!

அதற்கு, மற்ற குருவிகள், "எண்ணடா இந்தக் கிழவன் எப்போதுந் தொணப்பிக்கொண்டிருக்கிறான்! அடே! கிழவா! இனிமேலாகிலும் பேசாம லிருடா! "வென்று சொல்லித்துதுகள்!

கிழக்குருவி கோபித்துக் கொண்டு பிற தேசத்தில் போய் விட்டுது!

சணப்பு பயிராகிப் பலன் கொடுத்துது!

குடியானவன், நாரை யெடுத்துக் கண்ணி யுண்டாக்கிக், குருவிகளையெல்லாம் பிடித்துக் கொண்டான்!

அப்போது, குருவிகள், "ஓகோ! ஐயையோ! நம்முடைய தகப்பன் சொன்ன புத்தியைக் கேளாமல் போனதினாலே இப்போது, அன்னீதமாய் மடிந்து போகுறோமெ"ன்றுது!

அப்படிப்போலே, பெரியவர்கள் சொல்லுகிற பேச்சுகளைத் தள்ளி நடக்கிறவன் குருவிகளைப் போலே நாசப்படுவா னென்ற வாறு.

15-ஆம் கதை முடிந்தது!

குறிப்புகள் :

"வருமுன் காவாதான் வாழ்வு எரிமுன் வைத்தூறுபோலக் கெடும்" என்ற திருக்குறள் இங்கு ஒப்பிட்டுக் காணத்தக்கது!

அனுபவம் வாய்ந்த குருவி சொன்னதைக் கேளாததால், பிற குருவிகள் மாண்டன!

முன்னோர் வாழ்ந்து சில அனுபவங்களைப் பெற்றிருப்பார்கள்!

அது இளையோர்க்குப் பாடம்!

'அனுபவம்' சிறந்த அறிவு தரும் வழியே!

அனுபவத் தாலே அறிவு!

வெறும் தத்துவங்களைவிட, வாழ்க்கை அறிவு பலமடங்கு உயர்வானது! பயன்பாட்டுக்குப் பயனாவது!

பழந்தமிழர்களின் பல்துறை அனுபவங்கள், இக் கதையில் வந்த இளங்குருவிகள் ஒதுக்கித் தள்ளியது போல, மக்களால் ஒதுக்கித் தள்ளப் பட்டுப் பட்டு, எவ்வளவோ மறைந்து போயின!

இருப்பதும் உலகின் கவனத்திற்கு வராமல் இருக்கின்றன!

திருத்தப்பட்ட பிழைகள்:-

பிழை	திருத்தம்
சனப்பு	சணப்பு
பிதத்து	பிதற்று
பிரப்பட்டு	புறப்பட்டு
இரத்தகண்ணீர்	இரத்தக்கண்ணீர்

15

DECREPIT TIT AND ITS KINDRED

A senile little bird along with its kin was dwelling on trees.

One day, a farmer right opposite to the trees, began to sow the seeds of jute!

The old tit seeing this, with full of morose, told the other litte ones, "Brothers! Listen to me! Ravage time has come to us all! See, the farmer here is just sowing the jute! When it comes to harvest, he will make a net to catch and eat us! So immediately, if we pick up the seeds and consume we can save our skin!"

But the other little birds scoffed at this!

Indulging in raillery they remarked, "What sir? Are you threatening us? A swain is sowing jute, he will make snares from jute, he is going to kill us, what is this all bluffing?"

The jute seeds began to sprout!

The senile little bird, looking, painfully, the other little birds warned, "Dear children! Jute started to germinate! As I foretold, calamity will befall you! You will have to weep shedding blood tears!"

For that, the other little birds shouted it down by saying "O! what a bore! This old man is always blabbering! You, old man! Remain silent atleast hereafter!"

Losing hope, the decrepit little bird, seceded from them to live on some other land'

The jute became grown up herbage and began to yield

The peasant, nicely prepared cord from the jute and snares; he caught the little birds without leaving any one!

Then the pathetic little birds, in sullen voice, mourned "Oh! Lo! we never heeded to our father's advice! Now, we are dying quite unnecessarily!"

Likewise, one who despised the elders advice will have to embrace ruin like the litte birds!

XV story ended.

Observation:

"Life without precaution will definitely be spoiled just like a straw put in fire!" - This *Thirukkural* message can be compared well here!

The little birds died pathetically because they execrated the advice of the experienced bird!

That is ā lesson to youngsters!

Experience is nothing but a way to attain knowledge!

Collection of experiences is nothing but knowledge!

Knowledge gained in life is far superior to the arid philosophies!

In fact, our ancient Tamils' knowledge, just like the young birds did, had been spurned by people and as a result we have lost many and many!

The remaing, had not come to light!

Corrected mistakes found in palmleaf:-

Mistake	*Corrected*
caṇappu	caṇappu
pitattu	pataṟṟu
pirappattu	puṟappttu
iratta kaṇṇīr	irattakkaṇṇīr

16

ஓநாயும் நாயும்

[ஒரு] நாய், ஓநாயைக் கண்டு, "ஓகோ! ஓநாயே! நீ சரீரம் இளைத்துப் போய், யெலும்புக் கூண்டாயிருக்கிறா யேனிப்படி யிளைத்துப் போனாயெ"ன்றுது!

அதுக்கு, ஓநாய், "சாப்பாடில்லாமல் இளைத்துப் போனேன்! உனக்குச் சரீரம் மகா பருமனும், மெத்த அழகும், கழுத்திலே வெள்ளிக் கரையு மெப்படி யுண்டாச்சுதுதெ"ன்று கேட்டுது!

அதற்கு நாய், "நானொரு துரை கிட்ட இருக்குறேன்! இராதோறும் அந்தத் துரை யென் கழுத்திலே கயத்தைக் கட்டி வப்பான்! திருடர் வராமல் நான் காவலா யிருக்கிறது! பொழுது விடிந்தவுடனே கயத்தை யவிழ்த்து விடுவான்! பகல் முழுதும் நானுலாத்திக் கொண்டிருக்கிறது, அந்தத் துரை யெனக்கு நல்ல சாப்பாடு கொடுத்து வருகிறான்! வேண்டுமானால் நீயென் கூட வாயென்னைப் போலே யிருக்கலா மெ"ன்று சொல்லித்துது!

அதுக்கு ஓநாய், சீசீ! மதி கெட்டவனே! நீ யடிமைப்பட்டு நன்றாய்ச் சாப்பிட்டுக் கொண்டு காலட்சயம் பண்ணுகிறதைப் பார்க்கிலும், நான் மனதின்படி திரிந்து கொண்டு, யெலும்பைக் கடித்துக் காலட்சயம் பண்ணுகிறது வெகு மகிமை!" யென்று போய்விட்டுது!

அப்படிப்போலே, யெவனாகிலும் அருமையாயிருந்து, ராட்சியத்தை யாளுகிறதைப் பார்க்கிலும், மனதின்படி யிருந்துகொண்டு யாபாரஞ்செய்து காலட்சயம் பண்ணுகிறது மகிமை யென்றவாறு!

16-ஆம் கதை முடிந்தது.

ஆய்வு

அடிமைத்தனம், இக்கதையில் சாடப்படுகிறது!

அடிமையாக இருந்து, அதனால் உனக்கு அரசு கிட்டினும், அது வேண்டாம் என்று அறைகிறது இக்கதை!

அதற்குப் பதிலாக, ஏதாவது தொழில் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்றும், கதை ஆலோசனை நுவலுகிறது.

வியாபாரம் என்று கதையில் வந்த சொல்லுக்கு வணிகம், தொழில் என்றெல்லாம் பொதுப் பொருளை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்!

துரை என்று வந்துள்ள சொல்லாட்சி நோக்கற்பாற்று

பெரும்பாலும் 300, 400 ஆண்டுகளுக்குட்பட்ட வரலாறுகளில் தான் இச்சொல் பயன்படுத்தப்படும்!

இருப்பினும், அரசன் என்ற சொல்லுக்கு ஈடாக, பிற்காலத்தே ஏடு எழுதியவர்கள் துரை என்று எழுதியிருக்கலாம்!

நாய் வேட்டைக்கு உதவுவதும், வீட்டுக்குக் காவலாக இருப்பதும் பழந்தமிழகத்திலேயே இருந்ததுதான்?

"சிங்கத்திற்கு வாலாக இருப்பதைவிட, ஈக்குத் தலையாக இருப்பது மேல்" என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு! அது ஈண்டு ஒப்பிடத் தக்கது!

பதிப்புத் திருத்தங்கள்

சுவடி	திருத்தம்
ஓனாய்	ஓநாய்
மகிமைமென்ற	மகிமையென்ற
யிருந்துக்கொண்டு	யிருந்துகொண்டு
திரிந்துக்கொண்டு	திரிந்துகொண்டு
னாய்	நாய்

16

WOLF AND DOG

A dog looking at a wolf, asked: "Oh! Wolf! You are emaciated! Your body is wasting that only a skeleton is seen!"

For that, the wolf, in a sorrowful voice uttered, "I am languished for want of vivers! For you, your body is fully and beautiful! You have shining border around your neck! How all this came to you ?"

The dog in a voice of giggle replied, "I am serving for a master! Eery night, he will tie up a string around my neck! I will watch throughout the night to prevent thieves! When morning dawns, he will release me! Day time full, I will be roaming around! That master has been giving nice repast! If you like this, you can come with me! You also can enjoy like me!"

The enraged wolf, "Tut! Tut! Lunatic! Wallowing as a slave, you are living! For this, I am, wandering at my wish hither and thither, eating bones, far better and great!

So, saying, the wolf fled away!

Likewise, living by transacting things at his own will and wish in life is better than remaining a ruler licking the boot of somebody!

XVIth story ended.

Exposition :

The mentality of slavery is flogged in this story.

Even if you get a kingship for your slavery that is to despised ! Thus warns this story !

Instead, we can well lead life by doing any business ! This is the advice of our story !

Actually in the story, the word 'business' has been employed. To this we can have the meanings, as 'trade', avocation etc.

The word 'turai' needs pondering.

Generally, in the chronicles 300 or 400 years back, the word turai has been employed !

However, the letter copyist of palmleaves may have written as 'turai' for 'king' !

The practice of dog as a night guard and a hound has been in Tamil land from time immemorial !

There is a proverb in Tamil : "It is better to remain a head of a fly than to be a tail for a lion!" This may be well compared with our present story !

Editing job :-

Leaf	*Edition*
ōṉāi	ōṉāi
makimaimeṉra	makimaieṉra
iruntukkoṇṭu	iruntukoṇṭu
tirintukkoṇṭu	tirintukoṇṭu
ṉāi	ṉāi

17

வெள்ளிப்பெட்டி சுமக்கிற கழுதையும் கோதுமைப்பெட்டி சுமக்கிற கழுதையும்

வெள்ளிப்பெட்டி சுமக்கிற கழுதை, கோதுமைப்பெட்டி சுமக்கிற கழுதையைப் பார்த்து, அடே! சின்னமனுஷா! தரித்திரம் பிடித்தவனே! கோதுமை சுமக்கிற வேலையிலே, ஏண்டா அமர்ந்து கொண்டா யென்னைப் போலே, மகிமையான வேலை யிலே அமர்ந்துகொண்டு மகராசத்தனமா யிருக்க வொண்ணாதா?" வென்று தூஷணித்து, வெள்ளிப் பெட்டியைக் குலுக்கிக் குலுக்கிக் கலீர் கலீரென்கிற சத்தங்கேட்க நடந்தது!

கோதுமை சுமக்கிற கழுதை வெள்ளிப்பெட்டி சுமக்கிற கழுதையைப் பார்த்து, "ஐயா, நான் தரித்திரன்! உன்னைப் போலே மகிமையான வேலை செய்யப் பாத்திரனல்ல"வென்று, சுமந்துகொண்டு போகையிலிரண்டு கழுதையுங் காட்டு வழியிலே போறபோது, வெள்ளிப்பெட்டி சுமக்கிற கழுதை நடக்கிறபோது பெட்டியிலிருக்கிற வெள்ளிக் காசுகள் ஒன்னோடொன்னு தட்டுப் பட்டுக் கலீர் கலீரென்கிற சத்தங் கேட்கிறதினாலே வழியில் வருகிற கள்வரறிந்த படியினாலே. கழுதையைக் குத்திக் கீழே தள்ளி, வெள்ளிக் காசுகளை யெல்லா மெடுத்துக்கொண்டு போய் விட்டார்கள்!

கோதுமை சுமக்கிற கழுதை பார்த்து, "அடே! ஆங்காரி! உனக்குப் பணமிருந்தா லம்மட்டோ நடக்க வேணும்? நீ வெறுவியா யிருந்த படியினாலே சாவைத் தேடிக் கொண்டாயெ"ன்று போய் விட்டது!

அப்படிப்போலே, எவனாகிலும் பணக்காரனா யிருப்பானாகில் தர்மவானுமாய், யடக்கமுள்ளவனுமா யிருக்க வேணுமில்லா விட்டா லந்தப் பண மவனுடைய உயிரைச் சேதப்படுத்து மென்றவாறு.

17-ஆம் கதை முடிந்தது.

சில குறிப்புகள்

செல்வச் செருக்கை அழிக்க எழுதப்பட்ட கதை இது!

ஏழையாக இருப்பதில் மக்களுக்குத் துன்பமில்லை!

ஒரு செல்வன் முன்னே ஏழையாக இருப்பதில்தான் துன்பம் வருகிறது! அதற்குத்தான் மக்கள் அஞ்சுகிறார்கள்!

எனவே, சமுதாய உண்மை (Social truth) இவ்வாறு இருப்பதால், இதை உணர்ந்து, செல்வர்கள் சற்று அடக்கமாக இருக்க வேண்டும் என்று போதிக்கிறது இக்கதை!

கற்றவர், கல்லாதவர் யாவருக்கும் பொருந்தும் நீதியைத்தான் இக் கதை பேசுகிறது!

படித்தவனாக இருப்பினும், செல்வன் முன்னே கூனிக் குறுகுகிறான்! ஒரு சிறிய வேலைக்காகச் செல்வனிடம் கெஞ்சி நிற்கிறான்!

எனவே, இவ்வாறு, செல்வன் ஏழை உறவு சமுதாயத்தில் கொதிப்பை ஏற்படுத்த வல்லதால், செல்வனே அடக்கம் காக்க வேண்டும் என்ற ஒரு வரையறையை இக்கதை நல்குகிறது!

இது ஒரு சமுதாயத் தீர்ப்பு (Social judgement) என்று மதிப்பிடலாம்!

தமிழர்கள் இவ்வாறுள்ள அடிப்படையான சமுதாய நியதிகளை வகுத்தளித்தார்கள்!

பதிப்புமுறை

ஓலை	பதிப்பு
பொட்டி	பெட்டி
உயிரைசேதப்படுத்தும்	உயிரைச்சேதப்படுத்தும்
லந்த பணம்	லந்தப்பணம்
பாற்து	பார்த்து

17

SILVER-BOX BEARING DONKEY AND WHEAT-BOX BEARING DONKEY

A priggish donkey bearing a box full of silver coins, told the other donkey bearing a wheat-box on its back: "Ay you! prig! Indigent! Why are you wailing in bearing wheat load business? Like me, why can't you take up a noble job and enjoy like a king?"

So uttering, the silverbox bearing donkey joggled the box of silver coins and went cock-a-hoop!

The dejected wheat load bearing donkey, in a pitiable voice said, "O sir! I am an indigent! I am not destined to do a great job as you!"

So telling, the wheat-box bearing donkey trudged ahead.

While the two donkeys were passing through the forest, because of the jingling sound of the silver coins inside the box, some robbers, suddenly, attacked the donkey fatally and took the silver coin box and fled away!

Now the wheat-bearing donkey, looking at the papitating donkey, observed: "You conceited! should you behave in that manner because of your money? As you were haughty you have invited your own end!"

So uttering, the wheat-bearing donkey departed!

In the same manner, if anyone is rich, he should be graceful and modest; otherwise, the same money will slough his life!

XVIIth story ended.

Explanation

This story had evolved to smash the pride due to riches!

It is not a suffering to remain a poor!

It only arises when the poor stands in front of a rich! People quiver only to this!

So, realising this social truth, the rich people should exhibit some modesty in society!

This story renders moral for all alike - educated and uneducated!

The educated persons just have to incline their shoulders in front of the rich! For a petty job, he cringes him!

In this way since the rich-poor friction creates commotion in society, only the rich should behave restraintly; This is the discipline envisaged in this story!

We can say that this a *social judgement.*

Tamils had devised such social regualations!

Editing process :-

Leaf	*Edition*
poṭti	petti
uyiraicetappaṭuttum	uyiraiccetappaṭuttum
lantapaṇam	lantappaṇam
pāṛtu	pārttu

18

திருடன் பேரிலுகமை

திருடன் கலியாணம் பண்ணுகிறதுக்கு ஆயத்தம் பண்ணினான்!

அந்தத் தெருவி லிருக்கப்பட்ட யோகஸ்திரி யென்கிறவன், செனங்களைப் பார்த்துச் சொன்னதாவது, "ஒரு குளத்திலே, அநேக மாயிரந் தவளைகள் வாழ்ந்துகொண்டிருக்கையில், சூரியன் கலியாணஞ் செய்யப் போற சேதி கேட்டு, மெத்த விசாரப்பட்டு கஸ்தி பொறுக்கமாட்டாமல், முப்பித்தோ தேவனாகிய பிரசோற்பதியைப் பார்த்து, அபய சத்தமாய்க் கூக்குர லிட்டுதுகள்!

அப்போது முப்பித்தோதேவன், தவளைகளைப் பார்த்து, என்னத்துக்கு அபய சத்தமாய்க் கூப்பிடுகிறீர்க ளென்று கேட்டுது!

அந்தத் தவளைகளி லொரு தவளை, ''ஆண்டவனே! சூரியன் கலியாணஞ் செய்யப் போற சேதி யறிந்தோ மிவன் ஒண்டியா யிருக்கையிலே யெங்களுடைய குட்டைக ளெல்லாத்தையுந் தரையாகப் பண்ணிப் போடுகிறான்! இவன் கலியாணத்தைப் பண்ணிப் பத்தெட்டுப் பிள்ளை பெத்தானாகில், யிவனோடே யிந்தப் பிள்ளைகளுங் காய்கிற போது, நாங்களெல்லாஞ் சாம்பலா யெரிந்து போக வேண்டியதல்லவோ! ஆனபடியினாலே சூரியனுடைய கலியாணத்தை நிறுத்த வேண்டியதெ"ன்று பிரத்தியுத்தாரஞ் சொல்லித்துது!

கலியாணம், மறியல் பட்டுது!

அப்படிப் போலே, இந்தத் திருடன் ஒண்டியா யிருக்கையில் பட்டணத்தில் அநேகம் பேர் உடைமை உப்பந்திகளைத் திருடிக் கொண்டிருக்கிறா னிவன் கலியாணம் பண்ணி பத்தெட்டுப் பிள்ளைகளைப் பெற்றானாகில், பட்டண மெல்லாந் திருடப் பட்டிருக்கு மெ''ன்றான்!

இதைத் திருடன் கேட்டபோது அவடம் விட்டு, பிற தேசத்துக் கோடிப் போனா னெப்படிப்போலே, ஒரு புத்தி சாலியாலே பட்டணத்துக்கு மெத்த நலங்கிடைக்கு மென்றவாறு.

18-ஆம் கதை முடிந்தது.

கருத்து

'திருடன் பேரிலுகமை' என்ற தலைப்பை வருமாறு பிரிக்கலாம்.

திருடன் பேரிலுகமை = திருடன்பேரில்+உகமை

உகமை = உவப்பு

உவப்பு = மகிழ்ச்சி

திருடன் பேரில் மகிழ்ச்சியா?

ஏன்?

திருடன், ஊரை விட்டுப் போனதற்காக மகிழ்ச்சி!

இப்படித்தான் தலைப்பை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்!

இக்கதை மிகவும் சுவையானது!

திருடன் ஒருவனை, ஊரைவிட்டே விரட்டியிருக்கிறார்கள், எவ்விதப் பூசலும் விளைவிக்காமலேயே!

பொதுக்கருத்து (public opinion) என்பதன் வெற்றி இது!

சமுதாயத்தில், மக்களிடையே ஒரு பொதுக் கருத்தை உருவாக்கிவிட்டால், அது ஒரு பெரிய வெற்றியே!

அதுவும், குறிப்பாக, மக்களாட்சித் தத்துவத்தில், பொதுக் கருத்திற்கு மிகுந்த சக்தி உள்ளது!

மக்களாட்சி நடைபெறாத காலத்தில்தான் நமது இக் கதை எழுந்தது !

அப்படிப்பட்ட மக்களாட்சி நடவாத காலத்திலேயே, மக்கள் கருத்திற்கு அவ்வளவு மதிப்பு இருந்துள்ளது!

விழிப்புணர்ச்சி (awareness) என்ற நோக்கிலும் இக் கதையை ஆயலாம்!

ஒரு கருத்தை மறைமுகமாகக் குறிப்பிடும் முறை, **பழந்தமிழர் நாகரிகம் ஆகும்!**

அதற்கு இணங்கவே, நேரடியாக அலறாமல், சூரியன் கதையை இழுத்து, திருடன் ஒருவன் துரத்தப்பட்டுள்ளான்!

பதிப்புத் திருத்தங்கள்

ஓலை	**அச்சு**
பண்ணுகிறத்துக்கு	பண்ணுகிறதுக்கு
விசாறப்பட்டு	விசாரப்பட்டு
பாற்த்து	பார்த்து

18

JOY OVER THIEF

A thief was making preparations for his marriage !

Yogastri, a resident of the same street, summoned the people and told : "In a pond, there were many frogs dwelling. Hearing the news of the proposed marriage of sun, they, feeling remorse and sullen, unable to endure, croaking, began to raise voice for succor, before Muppittō tēvan !

Then, Muppittō tēvan, wanting to help the poor frogs, asked why they were shouting seeking help !

One among the frogs explained : "O Lord! We came to know of the marriage of sun! Even when he remains single, he makes simply to dry up our ponds! If he marries, he along with his eight or ten issues will definitely burn us ! So, sun's marriage should be stopped!"

The marriage was halted !

"LIkewise, this robber, even residing alone, in this town, thieving others' possessions! If he weds and begets issues, the whole city will be robbed of !"

Hearing this, the thief quit the town and sought refuge in some other land !

Like this, by an intelligent, a whole city can be profited!

XVIIIth story ended.

View :

The title, given in leaf, "Thiruṭan pērilukamai" may be split as follows :-

thiruṭan pērilukamai = thiruṭanpēril + ukamai

ukamai = uvappu

uvappu = joy.

What ? Joy over thief ?

Why ?

Since, the thief quit the town, the joy !

Only in this way we can arrive at a meaning for the title.

This story is very interesting !

People have chased a traitor out of city without causing any turmoil !

This is a victory for *Public Opinion* !

If a public opinion has been created among people, it is, definitely, a victory !

That too, in a democratic governance, the public opinion exhibits utmost power !

Our present story had evolved at a time when there was no democratic rule !

Even at that time of non-democratic ruling, people's view so much validity had been there !

We can delve into the story from an angle of *awareness* of people also !

Expressing an idea indirectly is a landmark in Tamil civilization !

In accordance with that, here, in our story recounting a story of sun, quite indirectly, a thief has been flashed out of a town !

Editing :

Leaf	*Printed book*
paṇṇukirattukku	paṇṇukiratukku
vicāṛappaṭṭu	vicārappaṭṭu
pāṛttu	pārttu

19

ஆலமரமும் நாணலும்

குளத்திலே நாணல் பில்லு முளைத்திருந்துது!

குளக்கரை யோரத்தி லிருக்கிற ஆலமரம் நாணலைப் பார்த்து, "நீ மெத்த அற்ப வஸ்தா யிருக்கிறாய்! எங்களைப் போலப் பலவானா யிருக்கவில்லை! உன்னாலே மனுஷருக்கு அற்ப சகாய மில்லை! எங்களைப் பார்! எங்களுடைய நிழலிலே வெகுபேர் வந்து, இளைப்பாறிச் சுகப்படுகிறார்கள்! உங்களாலே மனுஷருக் குதவி, சகாய, மொன்று மில்லை!' யென்று பரிகாசம் பண்ணிக்கொண்டு வருகையில்,

ஒரு நாள், பெருங் காத்தடித்து நாணல் சேதப்படாமல், தண்ணியில் வளைந்து கொண்டிருந்துது!

ஆலமரம், காத்து உறுதியினாலே, வேரோடே பெயர்ந்து, தலைகீழாய்க் குளக்கரையில் விழுந்துபோட்டுது!

நாணல், ஆலமரத்தைப் பார்த்துச், சொன்னதாவது, "நீ என்னை அற்ப வஸ்துவென்று மெத்தச் சின்னமாய்ப் பேசினீர்! உம்மை மகா பெலத்தவனென்று வெகுசாய்ப் புகழ்ந்துகொண்டீர். இப்போது, கொஞ்சக் காற்று அடித்தவிடத்தில், தலைகீழாய் விழுந்து சாகக் கிடக்கிறீர்! உம்முடைய பெலமும், வல்லபமு மென்னமாச்சுதெ"ன்றுது!

ஆலமரம் வெட்கிப்போய் விட்டுது!

அப்படிப்போலே, எளிய மனுஷரைப், பெலத்தவர்கள், பரியாசமுஞ் சின்னமாயும் பேச போகா தென்றவாறு!

19-ஆம் கதை முடிந்தது.

குறிப்புகள்

மலையும் அணிலும் என்ற தலைப்பில் உள்ள ஒரு பாடல் இதனுடன் ஒப்பிடத் தகுந்தது.

"உருவு கண்டு எள்ளாமை வேண்டும்" என்ற திருக்குறள் கருத்தே இக் கதையும் உள்ளது!

நமது இக் கதை திருக்குறளுக்கு முன்பு எழுந்ததா, பின்பு எழுந்ததா என்பதைக் கூற இயலவில்லை.

ஆனால், தமிழர்களின் தத்துவங்களே, இக் கதையிலும் திருக்குறளிலும் வந்துளது என்பதை மட்டும் உலக அறிய வேண்டும்!

ஒருவன் இழிவானவாக இருக்கலாம்; அதில் அவனுக்குக் கோபம் வராது!

ஆனால், அவனை இழிவானவன் என நீங்கள் குறையாகச் சொன்னால், அப்போது அவனுக்குச் சினம் வருகிறது!

பல சமுதாயச் சிக்கல்களுக்கு இப்போக்கே காரணமாக அமையக் காண்கிறோம்!

எனவே, இன்றைய நடைமுறைக்குத் தேவையான கதையாகவே இஃது உளது!

சுவடியில் இருந்த பிழைகள்

சுவடி	நூல்
சின்னமாய்பேச	சின்னமாய்ப்பேச
கிடைக்கிறீர்	கிடக்கிறீர்
அப்படிபோலே	அப்படிப்போலே
பாற்	பார்

19

BANYAN TREE AND BULRUSH

In a tank, there was grown a *bulrush* !

A *banyan tree.* on the bank, looking at the need, in a sniggering tone, told, "You are a fig! You are not sturdy like us! You are not useful to people in the least! See us! Many people come and reside in our shade; they enjoy much! By you, there is no help, concession etc., for people!"

When the banyan tree has been scoffing at the bulrush in this way, one day, a vident wind blew!

The reed, without affected, just was remaining in water quite springy!

But, the banyan tree was uprooted, by the whirlpool, and thrown away, miserably, on the bank of the tank, upside down!

Then the reed told the banyan tree "You talked demeaning me! You extolled yourself as great! Now, for a little breeze, you have been uprooted and about to breath your last! What happened to your robustness and strength!

The banyan tree was abashed!

So, the mighty people, should not make raillery at the weak.

XIX th story ended.

Notes :-

A song entitled as "Mountain and squirrel" can be compared with this story.

The *Thirukkural* idea that "We should not jeer at the smallness of posture" Can be seen here.

Our present story, whether originated before Thirukkural or after Thirukkuṟaḷ, we can not say.

But, only the philosophy of the Tamils has pervaded into this story as well as into Thirukkuṟal; the world should come to know this.

A man may be a destitute; in that, he will not be infuriated!

But, if you begin to utter that he is in bad condition, then he get anger !

For many social conflicts, this tendency becomes one of the main reasons, we do see.

So, in this respect, this story is wanted for today's life!

Mistakes found in leaf :

Manuscript	*printed book*
ciṉṉamāipeca	ciṉṉamaippēca
kiṭaikkiṟīr	kiṭakkiṟīr
appaṭipōlē	appaṭṭppōlē
pāṟ	pār

20

பஞ்செடுக்கிற கழுதையும் உப்பெடுக்கிற கழுதையும்

பஞ்செடுக்கிற கழுதையும், உப்பெடுக்கிற கழுதையும் தங்கள் சுமையைச் சுமந்து கொண்டு போறபோது, பஞ்செடுக்கிற கழுதை, உப்பெடுக்கிற கழுதையைப், பார்த்துச் சொன்னதாவது, ''என்னடா! புத்தி கெட்டவனே! என்னைப் போலே லேசான சுமையை யெடுத்துக் கொண்டு வராமல், பாரமா யிருக்கிற உப்புப் பொதியைச் சுமக்கிறாயெ''ன்று பரியாசம் பண்ணித்துது!

அதற்கு, உப்புக் கழுதை சொன்னதாவது,'' ஆம் பிள்ளாய்! நான் மடையன்தான்! நீ என்னைப் பரியாசம் பண்ணவேண்டிய ஞாயந்தான்! நீ புத்தியில் மிகுந்தவன்! ஆனபடியினாலே, லேசான சுமையை எடுத்துக்கொண்டா யென்று'' சொல்லித்துது!

இரண்டும் ஆற்றிலே இறங்கி நடக்கும்போது, உப்புப்பொதி கரைந்துபோய்ப், பாரம் லேசாய்க், கழுதை துருசாய் நடந்துது!

பஞ்சுப்பொதி தண்ணீர் சேர்த்துக் கொண்டு, பாரமாய், நடக்கக் கூடாமல், வருத்தப் படுகையில், உப்புக்கழுதை, பஞ்சுக் கழுதையைப் பார்த்து, ''ஏன் பிள்ளாய்? சீக்கிரமாய் நடந்து வாருமே! லேசான சுமையை எடுத்துக்கொண்டீரே! ஏன் நடக்க மாட்டாமல் தத்தளிக்கிறீரெ"ன்று சொல்லித்துது!

பஞ்சுக் கழுதை மெத்த வெட்க மடைந்துது!

அப்படிப் போலே, எவனாகிலும் தன் கூட்டாளியை நிந்தனை யாகவும், பரியாசமாகவும், மரியாதைக் கேடாய்ப் பேசினால், பின்னுக்கு அதிகமாய் ஈனப்பட்டுப் போவார்க ளென்றவாறு.

20ஆவது கதை முற்றிற்று.

ஆய்வு

சமுதாய நோக்கில், நட்பு நோக்கில், இக் கதை இன்றியமை யாதது!

நுணுக்கமான நீதியை இக்கதை கூறுகிறது!

நண்பர்களாக இருப்பார்கள்! ஆனால் ஒருவரை ஒருவர் கேலி செய்வர்!

இது தேவையற்றது!

இவ்விதம் கேலி பேசுவதால், நேரம் வீணாவதுடன், வீண் கலகமும் உருவாகும்!

உண்மையிலேயே நம் நண்பர் தாழ்வான நிலையில் இருந் தாலும், அதைப் பரிகாசம் செய்து இழிவுபடுத்தக்கூடாது; அப்படி இன்று தாம் ஏளனம் பேசினால், கட்டாயம் வேறொரு நாள் நம்மைப் பார்த்து அவர்கள் ஏளனம் செய்யும் நிலை உருவாகும்! இது ஒரு சமுதாய உண்மை! நடைமுறையில் பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து தமிழர்குடி கண்ட நீதி இது! தமிழர்களின் இந்நீதியே இக்கதையில் வந்துள்ளது!

திருத்தங்கள்

ஓலை	பதிப்பு
னான்	நான்
அப்படிபோலே	அப்படிப்போலே
உப்புபொதி	உப்புப்பொதி
பஞ்சுபொதி	பஞ்சுப்பொதி

20

COTTON-BEARING DONKEY AND SALT-BEARING DONKEY

Once a donkey with a load of cotton and an ass with a load of salt were carrying away their sacks.

Then, the pack - donkey with cotton, in a scoffing voice told the other one, "what, you! Insane! Without taking a lighter load, like me, you have brought a heavy weight on your back!"

For that, the salt-bearing donkey replied, Yes, friend! I agree, I am a fool! It is quite correct that you mock at me! You are uncanny! That is why you have taken a lighter weight!"

After a while, when the two pack - donkeys started wading through a river, the salt load dissolved completely in water and the 'salt donkey' walked quite swimmingly.

On the contrary, the cotton load, absorbing water became heavy and the 'cotton donkey' found it difficult to walk!

Now the cocky 'salt donkey' told, "Why friend? come on quickly! You have taken only a lighter weight! why are you wriggling, unable to walk?"

The 'cotton pack-ass' was ashamed!

Likewise, whosoever, talks ill of, mocks at, disrespects his friend, then he has to embrace ruin.

Study :-

This story is valuable in angles of social and personal intimacy.

This proclaims a shrewd equity.

They may be friends! But, they will tease one another!

This is quite unwanted!

In so doing, not only time is wasted but also unnecessary to - do will result!

Eventhough our friend is in a pitiable position, we should not jeer at him; Perhaps, if we humiliate him today, a day will come when he will have, definitely, a chance to degrade us!

This is a social phenomenon!

Having lived in this world for thousands of years, the Tamil society have found out this *social equity* !

Only this Tamils' justice had found a place in this story.

Some corrections :

Leaf	*Edition*
ṇān	nāṇ
appaṭipōlē	appaṭippōlē
uppupoti	uppuppoti
pañcupoti	pañcuppoti

21

காக்கையும் பாம்பும் நரியும்

காக்கை ஆலமரத்தின் கிளையிலே கூண்டு கட்டி, முட்டையிட்டுக் கொண்டிருக்கையில், வெகுகாலமா யதைச் சர்ப்பம் சாப்பிட்டு நாசம் பண்ணி வருகையி லப்போதானே, "நீ என்னோட சொன்னா லந்தச் சர்ப்பத்தை நாசம் பண்ணிப்போட வழி சொல்வேன்! நல்ல வெகு பிள்ளைகளை மாளக் கொடுத்தாயே! இப்போது, நீ செய்யவேண்டியதாவது, இராசா பெண்சாதி இரத்தின மாலையைக் கழற்றி வைத்துச், சலக்கிரீடை பண்ணுவாள்! அப்போது, நீ அந்த இரத்தின மாலையைக் கொத்தி எடுத்துக் கொண்டு, அந்தச் சர்ப்பத்தினுடைய வளையிலே போட்டு விடு! அந்தச் சர்ப்பம் கொல்லப்படும்! உன்னுடைய குலத்தை நாசம் பண்ணின சர்ப்பத்தை இந்த விதத்திலே பழி வாங்க வேண்டியதெ"ன்று [நரி] சொல்லித்துது!

அந்தப்படி காக்கை செய்துது!

இராசாவானவன், காக்கை இரத்தின மாலையைப் பாம்பு வளையிலே போட்டுவிட்டு தென்று அறிந்து. வேலைக்காரரை அனுப்பி, வளையை வெட்டிப் பார்க்கும் போது, பாம்பு சீறிக் கொண்டு வெளிப்புறப்பட்டுக், கொல்லப் பட்டுது!

அப்படிப்போலே, புத்தி விவேகமுள்ள பெரியோர்களைச் சிநேகித்திருந்தால், சமயங்களிலே வரப்பட்ட ஆபத்துகளை நீக்கி விடுவார்க ளென்றவாறு.

21ஆவது கதை முற்றிற்று.

குறிப்பு

இக்கதை இடம்பெறாத சிறுவர் நூலே இல்லை எனலாம்! அந்த அளவுக்குப் புகழ் பெற்ற கதை இது!

மிகப்பழங்காலத்தில் அரசாட்சி ஏற்பட்ட நிலம் தமிழ்நிலம்! சங்க இலக்கியமே இதற்குச் சான்று!

சங்க இலக்கியம் தோன்றிய அதே காலகட்டத்தில், இந்தியாவின் பிற பகுதிகளில், சங்க இலக்கியம் போன்ற இலக்கியச் செழுமை இல்லாததால் இதனை நாம் கூற இயலும்!

மன்னராட்சி முறை மிகப்பழங்காலத்தே செழித்திருந்த ஒரு நிலத்தில்தான், இப்படிபட்ட ஒரு கதை தோன்றியிருக்கும்!

எனவே, இக்கதை தமிழ் நிலத்தே முகிழ்த்த கதை என்ற நோக்கில் நம் பார்வை இருத்தல் வேண்டும். இதற்காகவே, இக்கதை இங்கு பதிப்பிக்கப்படுகிறது.

பதிப்பில் திருத்தம்

சுவடி	பதிப்பு
கழட்டி	கழற்றி
யிப்போது	இப்போது
யிரத்தினமாலை	இரத்தினமாலை
சற்பத்தை	சர்ப்பத்தை

21

CROW, SNAKE AND FOX

A crow, having constructed a nest and laying eggs, was there on a bough of a tree.

A snake, shinning on that tree, was eating the eggs, quite casually.

One day, a fox, seeing this injustice, summoning the crow, advised; "If you complaint about this mischief, before me, I will advise you to smash the snake! You just lost your beloved young ones! Now, what you should do is, when the queen is sporting in the swimming pool, having kept her necklace of gems on the bank, you have to pick it up with your beak and put it into the anthill in which the venomous snake dwells! That snake will be ruined! You have to wreak vengeance on the snake which routed your clan!

The crow executed this accordingly.

The king came to know of the matter that a crow has put the necklace of the queen into a mound ordered his retinue to dig out the necklace. The soldiers dug out, and when the snake protruded its head with a hizzing sound, it was smashed!

In the same manner, if we have friendship with intelligents they will avert the calamities that might befall on us.

XXI th story ended.

Notes:-

We can not see a kid's textbook without this story! This story is famous to that extent!

Even in time immemorial, the Tamilland had witnessed the kingly rules!

Our cankam literature itself is an evidence to this!

When we compare the same period as that of cankam age, in other parts of India, we are unable to find such a flourishment as cankam literature.

Such a story would have developed only on a soil where kings had ruled!

So, our research view should be in the direction of proving that this story had arisen on the Tamil land.

corrections while editing :-

Leaf	*Edition*
Kaḷaṭṭi	kaḷaṛṛi
yippōtu	ippōtu
yirattiṇa mālai	irattiṇa mālai
Caṛpattai	carppattai

22

நரியும் நாரையும்

நரியானது, ஒரு நாரையை விருந்துக் கழைத்தனுப்பி, ஒரு பாறையின் பேரிலே கூழை வார்த்து, ''ஓகோ, நாரை இராயனே! விருந்தைச் சாப்பிடு மெ''ன்றுது! நாரையானது, தன்னாலே ஆனமட்டும் அதைச் சாப்பிடப் பார்த்தாலும், சாப்பிட மாட்டாமல் பட்டினியாய்ப் போய்விட்டுது!

நரி, கூழையெல்லாம் நாக்கினாலே நக்கித் தின்னுவிட்டுது!

மறுநாள் நாரையானது நரியை விருந்துக் கழைத்து, ஒரு வாய் குவிந்த பானையிலே, நத்தை நண்டுகளைப் போட்டு, ''ஓகோ, நரி இராசாவே! மெத்தப் பசியா இருக்குறீர்! நீர் நத்தை சாப்பிடுமையா!'' வென்று சொல்லித்துது!

நரி பானையிலே தன் தலையை நுழைக்க மாட்டாமல் சும்மா இருந்துது!

நாரை, ''சாப்பிடுமையா!'' வென்று சொல்லித், தன் மூக்கினாலே பானையிலிருந்த நத்தை நண்டுகளை யெல்லாம், திருப்தியாய்ச் சாப்பிட்டுப் போட்டுது!

நரி வெட்கமடைந்து வோடிப் போய்விட்டுது!

அப்படிப் போலே, எவனாகிலு மொருத்தனை மரியாதைக் கேடாக வருத்தினால், உடனே பதிலுக்கு மற்றவனுஞ் செய்வானென்றவாறு.

22-ஆம் கதை முடிந்தது!

குறிப்பு

இக்கதையும் புகழ் பெற்ற கதையே!

நரி என்ற விலங்கு தமிழ் மண்ணில் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே இருந்தாதல் வேண்டும்.

முதுநரி என்ற தொடரைச் சிலப்பதிகாரத்தில் (கி. பி. 2-ஆம் நூற்றாண்டு) காண்கிறோம்.

நாரையினம் சங்க இலக்கியத்தில் பரக்கப் பேசப்படுகிறது.

இக்குறிப்புகள், மேற் கதை தமிழ் மண்ணில் முகிழ்த்தது என்ற உண்மையை நமக்குத் தரலாம்!

மேலும் சிற்றரசர்கள் பலர் அடுத்தடுத்த நிலங்களை ஆண்ட மண், தமிழ் மண்!

அதனால், ஒருவரை ஒருவர் வெல்வதற்கும், இழிவு படுத்துவதற்கும் முந்தினர்!

இவ்வாறான ஒரு இழிவுபடுத்தும் தன்மையே இக்கதைக்கும் அடிப்படை என்பதை நாம் காண்டல் தகும்!

பதிப்பு நோக்கில் செய்யப்பட்ட திருத்தங்கள்

ஓலை	திருத்தம்
நாறை	நாரை
சொல்விதன்	சொல்வித்தன்
னத்தை	நத்தை
பாத்தாலும்	பார்த்தாலும்
பட்டணி	பட்டினி

22

FOX AND HERON

A fox invited a heron for a feast at its lair.

The fox set the pap on a rock and uttered, Oh, heron king! Consume this feast!"

The water-bird with thin and long feet tried its best to eat the thick gruel put on the rock; but it couldn't!

The heron departed famished!

The fox, liked up all the pap quite happily!

The next day, the heron invited the fox to feast at its dwelling.

Putting snails and crabs in a pot having a narrow mouth, the heron invited the fox, "Oh, fox king! You are very hungry! Have these snails!"

The fox, unable to insert its mouth into the pot, kept quiet!

The heron, telling, "Please eat!" and pecking with its beak ate all the snails and cross to its heart's desire!

The fox, abashed, took to its heel!

In the same manner, if anybody is humiliated, he will also retaliate in turn!

XXIIth story ended.

Note :-

This story is also a famous one!

The beast, fox must have lived on Tamil soil even in prehistoric times.

We come across a term 'mutu nari' *cilappati karam* (A.D. 2nd century).

The water-bird hero has been talked in cankam literature widely.

There hints, perhaps, hint us that this story may have flourished on Tamil soil.

Moreover, small potentates had ruled over in adjacent lands in Tamil country.

So, naturally one monarch had tried to demean another by any means.

Such a humiliating tendency forms a basis for this story

Some corrections made

Loab	*Correction*
nāṛai	nārai
collitaṇ	eollittaṇ
ṇattai	nattai
pāttālum	pārttālum
paṭṭāṇi	paṭṭiṇi

23

மானும் ஆடும்

ஒரு மான், தன் சிநேகிதனாகிற ஓநாயோடே கூடிக்கொண்டு வருகிறபோது, பில் காட்டிலே மேய்ந்து கொண்டிருக்கிற ஒரு ஆட்டைக் கண்டு, "அடே, மோசக்காரா! நீ எனக்குக் கொடுக்க வேண்டிய பத்து மரக்கால் கொள்ளை ஏண்டா கொடாமலிருக்கிறா யென்று" கேட்டுது!

ஆடு யோசனை பண்ணினதாவது, "இந்த மானை நாம் அறியமாட்டோம்! இது நமக்கு ஒரு தானியமணியாகிலுங் கொடுத்த தில்லை! இப்போ நாமதை விபரங் கோட்டோமாகில், ஓநாயினைக் கொண்டு, கொன்னு தின்னுவிடப் பண்ணிப் போடு மென்று யோசனை பண்ணி,

அதுக்குப், பிரத்தியுத்தாரஞ் சொன்னதாவது," சிநேகிதா! ஒரு கிழமை மனம் பொறு! உன் கடனைக் கொடுக்கிறேனெ"ன்று சொல்லித்துது!

ஒரு கிழமை ஆனவுடன், ஆடு மேய்ந்துகொண்டிருக்கையில், மான், ஓநாயைக் கூட்டிவராமல் தனியாய் வந்து ஆட்டைக் கேட்டுது!

ஆடு, இவனைப் பார்த்து," அடே! திருடா! இடுவந்தி போட்டுக் குடி கெடுக்கிறவனே! நீ என்னை அறிந்ததுண்டா! நான் உன் முகத்தை அறிவேனோ? இப்படி யிருக்க, நீ ஓநாய் சலுகையிலே என்கிட்டத் தெண்டம் பிடிக்கப் பார்த்தாயெ"ன்று துரத்தித் துரத்தி அடித்து, ஓட்டிவிட்டுது!

அப்படிப் போலே, எவனாகிலுமொரு பலத்தவனை அண்டிச் சோராவரி பண்ணினா லந்த வேளை வசனத்திலே தாழ்ந்து கொடுத்துப், பிறகு அவனை விவகாரத்திலிழுத்து விட்டு, அவனை வெட்கம் கொடுக்க வேண்டியதென்றவாறு.

23ஆம் கதை முடிந்தது.

குறிப்புகள்

இடுவந்தி, சோராவரி ஆகிய அருஞ்சொற்கள் இக் கதையில் வந்துள.

இடுவந்தி = குற்றமற்றவன் மீது வீண் பழி சுமத்தல்

சோராவரி = கொள்ளையிடுதல்; கவர்தல்

குடிமக்களுக்கும், அரசர்களுக்கும் கூறப்பட்ட பொது நீதிக் கதை இதுவாகும்!

அன்றாட வாழ்வில் பொதுமக்களுக்கும், ஆட்டிற்கு வந்த நிலை வருகிறது!

அரசர்களுக்கும் ஆட்டின் நிலை வரவே செய்கிறது!

அந்நேரங்களில் எப்படி நடந்து கொள்வது என்ற மிக அரிய உத்தியை நமக்குப் போதிக்கிறது இந்தக் கதை!

வாழ்க்கைக்குப் பயனானது இது!

தடுமாற்றத்திற்கு விடை கூறும் கதை!

இதனால் கதை இலக்கியம் என்பது பொழுதுபோக்கிற்கு மட்டுமே என்ற கருத்து தகர்ந்து போகிறது!

சூழ்ச்சி என்பது நம் வாழ்வில் தலைகாட்டும் ஒரு தத்துவமாகும்!

இந்தச் சூழ்ச்சியைச் சரிவரச் செய்து நிறைவேற்றி முடி மன்னர்களாகப் பலர் ஆன சரித்திரம் நம்மிடையே உண்டு!

ஆனால் எப்போதுமே வாழ்வில் சூழ்ச்சி செய்வதையே தொழிலாகக் கொள்ளக் கூடாது!

சூழ்ச்சி மிகச் சிறிதாக இருந்து அது புரைதீர்ந்த நன்மை பயக்குமானால், அப்போதுதான் அதை மேற்கொள்ள வேண்டும்!

“வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமார் சிறிதே” என்பதே தமிழர் தத்துவம்!

அத் தத்துவமே இக்கதையில் அழகுற, அப்பட்டமாக நுவலப் பட்டுள்ளது!

மிக அரிய ஒரு சூழ்ச்சியை, மிக எளிதாக, மிக வெளிப்படையாகச் சொன்ன அற்புதமான கதை இது!

சில திருத்தங்கள்

சுவடி	அச்சு
பில்	புல்
தணியாய்	தனியாய்
யிடுவந்தி	இடுவந்தி
போட்டுகுடி	போட்டுக்குடி
யோசினை	யோசனை

23

DEER AND GOAT

A deer was jaunting in a forest along with its friend wolf.

On the way, the deer looked at a goat which was grazing grass.

Suddenly, the deer began to shout the goat, "Ay you! cheat! Why are you not returning back the 10 'marakkāl' horse-gram I gave you?"

The goat pondered over: We do not know the quadruped! This never gave me even a single piece of corn! But, if we ask about this, it will smash us through the wolf!"

So, the goat replied, "Friend! Excuse me for only one day! I will repay your debt!"

After the stipulated day, the deer asked the goat its debt; but this time the deer was not accompanied with the wolf.

The goat looking fiercely upon the deer, roared, "You, thief! Spoiler of family by accusing unwarranted blame! Have you known me? Have I seen your face? When truth is like this, you, with help of wolf, tried to fleece penalty from me!"

So telling, the goat clouted the deer and chased away!

In this manner, if any body comes heavily on us with the help of puissants, we have to low down speaking soft

words and later on we can give him a retaliation at a ripe time.

XXIIIrd story ended.

Notes :-

Iṭuvanti, Sōrāvāri are the two new words found in this story.

Iṭuvanti = Accusing an ignorant person

Sōrāvari = plundering

This moral story stands for both the laity and the king.

The problem faced by the goat does come on commoners too in daily life!

Even for monarchs, the same situation arrives!

So, this stroy prescribes the method how we have to behave in such occasions!

This advice is quite useful to our life!

This story is an answer for our shilly-shally occasions!

So, the notion that stories are only for whiling away time is mangled!

Artfulness is a technique that crops up in our life!

Several had become king of kings by wielding the plots intelligently!

But, plotting should not be the practice of life!

The plot should yield immaculate good results! Then only it should be undertaken.

"Little plot is needed" is the philosophy of Tamils.

This very same philosophy had been sketched in this story very elagantly,

This story is a marvallous one in the sense that this has divulged us quite openly a rare phenomenon called finesse.

Few corrections made

Leaf	*Print*
pil	pul
taṉiyāi	taṉiyāi
yiṭuvanti	iṭuvanti
pōṭṭukuṭi	pōṭṭukkuṭi
yōciṉai	yōcaṉai

24

நரியும் முந்திரிப் பந்தலும்

ஒரு தோட்டக்காரன் உசந்த பந்தலைப் போட்டு, முந்திரிகைச் செடிகளைப் பயிரேற்றினான்.

அந்தச் செடிகளத்திகாலமானவுடனே, நன்றாய்க் காய்த்துக் குலை எல்லாம் நன்றாய்ப் பழுத்துது!

இப்படி யிருக்கையில், ஒரு நரி மகா பசியுடனே முந்திரிகைத் தோட்டத்திலே வந்து, பழத்தைத் தின்று பசியாற வேண்டுமென்று, எத்தனை பிரயாசைப்பட்டுக் குதித்து எட்டினாலும் எட்டாமல் போய்விட்டுது!

நரி, தன்னாலே ஆனமட்டுங் குதித்துக் களைத்துக் கோபித்து போய்ச் சொன்னதாவது, "சீசீ! இந்த முந்திரி கெட்டுது! நன்றாய்ப் பழுக்கவில்லை! இன்னங் காயாயிருக்குது! எனக்கு வேணுமானால் ஒரு நொடியிலே பறித்துத் தின்க மாட்டேனோ? இது கெட்டதென்று" போய்விட்டுது!

அப்படிப்போலே லோகத்திலே அநேகம்பேர் ஒரு வேலை செய்யக்கூடாதிருந்தாலு "மிதைச் செய்யவேணுமானால் ஒரு க்ஷணத்திலே செய்யமாட்டேனோ?" வென்று விருதாவளி பேசுவார்க ளென்றவாறு.

24-ஆவது கதை முடிந்தது.

ஆய்வு

முந்திரி என்றது, இங்கே திராட்சையையே; இதுவே கொடி முந்திரி என்று வழங்கப்படும்.

முந்திரிப் பருப்பை (cashew nut) நல்கும் முந்திரி வேறு; இது செடியாகும்; கொடியல்ல.

திராட்சைப் பழத்தைத் தரும் முந்திரி - கொடிமுந்திரி - கொடியாகும்; கதையில் இதுவே பேசப்படுகிறது.

அத்திகாலம் என்ற புதுச்சொல் இக்கதையில் வந்துள்ளது; **பயிர் முற்றிய காலம்** என்ற பொருளில் இது நிற்கிறது.

பொதுவாக, அறியப்பட்ட கதையில், நரியானது, "சீசீ! இந்தப் பழம் **புளிக்கும்!**" என்றுதான் கூறுவதாக வந்துள்ளது.

"அங்கூர் கட்டே ஹை" என்றே வடநாடுகளிலும் இக்கதையில் வந்துள்ளது.

ஆனால் நமது ஓலைச் சுவடியில், "இந்தப்பழம் காயாக இருக்கிறது" என்றே வந்துள்ளது.

எனவே, அச்சில் வழங்கும் கதை வடிவம் தோன்றுவதற்கு முந்தைய கதை வடிவம் இது என்பதைத் தெளியலாம்!

தமிழ் மண்ணிலிருந்து தோன்றிய கதை இது என்பதற்கு இஃது ஒரு குறிப்பாக இருக்கலாம்.

பதிப்புத் திருத்தம்

ஓலை	பதிப்பு
பறித்துதின்க	பறித்துத்தின்க
திண்ணு	தின்னு
தோட்டக்காறன்	தோட்டக்காரன்
முந்திறி	முந்திரி
நண்ணாய்	நன்றாய்

24

FOX AND GRAPE BOWER

A gardener, constructing a high bower had allowed a grape wine to creep on.

The creeper bore fruits in bunches abundantly.

While this being so, a fox, famished, came there.

The fox was very eager to quench its appetite by eating the grapes. So, it jumped and jumped to hold the bunch of grapes but in vain!

The tired and enraged fox, at last told: "Hut! This grape is worst! Not a ripe one! If I want, can't I pluck it in a jiffy?"

So uttering, the fox took to its heel!

Likewise, in this world, there are many who, though unable and unwilling to accomplish any useful work, will boast that they can do anything in a jiffy if they want".

XXIVth story ended.

Note :-

The Tamil term 'muntiri' here denotes only grape and not cashew

Cashew is not a creeper; but grape plant is a vine.

A new Tamil term 'Attikālam' has been employed here; It denotes 'the ripe' crop!

In the popular story in print, we hear fox saying, "Hut! This grape is sour!"

But in our story, the fox says, "Hut! This is not ripe!"

So,it is clear that our story had been written well before the arrival of popular and printed version.

This may be a hint to think that this story may have originated on the Tamil earth.

Corrections while editing

Leaf	*Edition*
Parittutinka	Parittuttinka
tiṉṉu	tinnu
tōṭṭakkāraṉ	tōṭṭakk āraṉ
muntiri	muntiri
naṉṉāi	naṉṟāi

25

ஆடும் அதன் குட்டியும், ஓநாயும்

ஆடு, குட்டியைப் பார்த்து, "நான் வெளியே போய் வார மட்டும் நீ கதவைச் சாத்தித் தாழ்ப்பாளைப் போட்டுக்கொண்டு பத்திரமாயிரு! ஆராகிலும் வந்து கதவைத் தட்டினால் திறக்காதே! நான் வந்து கதவைத் தட்டினால், பேரைச் சொல்லிக் கதவைத் திறக்கச் சொன்ன பிறகு, கதவைத் திறக்க! தட்டின மாத்திரத்திலே நீ கதவைத் திறந்துவிட்டால், சத்திராதியாகிய ஓநாய், கரடி, நரிகளால் கொல்லப்பட்டுப் போவாயெ"ன்று சொல்லிப் போட்டுப் போய் விட்டுது!

இப்படி இருக்கையில், ஒரு ஓநாய் வந்து, கதவை மெதுவாய்த் தட்டித்துது!

சத்தம் கேட்ட மாத்திரத்திலே ஆட்டுக்குட்டி, தன் தாயாவலின் பேரிலே கதவைத் திறந்துது!

ஓநாயதைக் கொன்னு தின்னுவிட்டுப் போய்விட்டுது!

ஆடு வந்தபோது அவடத்திலே மயிர்களைக் கண்டு, ஓநாயாலே கொலைப்பட்டுப் போச்சுதென்று கஸ்திப்பட்டுச் சொன்னதாவது, "நானெத்தனை பத்திரமாய்ச் சொல்லியிருந்தாலு மதைச் சட்டை பண்ணாமலும், நான் சொன்னபடி கேளாமல் துற்புத்தி கொண்டிருந்தபடியினாலே, உயிர்ச் சேதம் வருத்திக் கொண்டுதெ"ன்றுது !

தன் குட்டியின் பேரில் துயரப்பட்டுக் கொண்டுது!

அப்படிப் போலே, பிள்ளைகளததுகள் தாய் தகப்பன், பெரியோர்கள் சொன்ன புத்திகளைத் தள்ளிப்போட்டு, மனதின்படி திரிகிறவர்களுக்கு உயிர்ச்சேதம் வருமென்றவாறு.

25-ஆம் கதை முடிந்தது.

குறிப்பு :-

இக் கதையின் நீதி நோக்கற்பாற்று!

தாய் தகப்பன் சொற்கேளாவிடில், தீங்கு வரும் என்று பொதுவாகக் கூறவில்லை! உயிர்ச்சேதம் வரும் என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது!

இது தமிழகத்தின் பழைய வரலாற்றைக் காட்டவல்லது!

தமிழ் இன வாழ்வைக் காட்டவல்லது!

தாய் தகப்பன் சொற்கேள் என்ற நீதி எழுவதற்கான அடிப்படையைத் தெரிவிக்கவல்லது!

ஒரு காலத்தில், வனமாக இருந்த தமிழகத்தில், விலங்குகள் மற்றும் நீர் நிலைகளால் மனித உயிருக்குத் தீங்குகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன! அதனால்தான் தமிழ்ச் சோதிடர்கள் (சோதிடக் கலையை முதன் முதலில் கண்டறிந்தோர் தமிழரே!), "தண்ணீரில் கண்டம்" என்று கூறினர்!

ஆனால், பின்னர் எழுந்த நீதி நூற்கள், இவ்வாறு கூறாமல், பொதுவாகத் "தந்தை தாய் சொற்கேள்" என்று மட்டும் கூறினர்! தமிழ் நிலத்து வாழ்வு சீரடைந்த இன்னொரு நிலையை இது சுட்டுகிறது!

பதிப்புத்திருத்தம்

ஓலை	திருத்தம்
புத்திகளைதள்ளி	புத்திகளைத்தள்ளி
திண்ணு	தின்னு
விட்டுபோய்	விட்டுப்போய்
மயிற்	மயிர்
னாநெத்தனை	நானெத்தனை

25

GOAT, ITS KID AND WOLF

A goat, while moving out of its dwelling, advised to its kid, "Be locked inside! Be careful! Until I return don't open! If anybody knocks at the door, don't open! If I knock at, ask for the name of the person knocking! If you open on hearing the knock blindly, the wolf, bear, fox etc. will come and smash you!"

So advising, the goat departed.

After sometime, a wolf came. It knocked the door slowly!

The lamb, opened the door, with the eager of seeing its mother!

The wolf just thwacked the lamb and after having consumed its flesh, it just went away!

When the goat returned home, it saw the hairs of its kid strewn!

It understood that its kid had been killed and eaten by the cruel wolf! Then it remarked, "Though I told repeatedly about wolf and all, it never heeded to my words! so it embraced its ruin!"

The goat lamented much over the loss of its kid!

Likewise, children who behave according to their desires winking at the advice of parents will invite danger to their lives!

XXV story ended.

Note :-

Didactic principle involved here is to be taken note of.

Moral has not been said in general as to the children should obey their parents; but has been specifically emphasised that if advise of parents were not heeded then death will befall!

This will hint at an ancient history of Tamilnadu.

This will denote the life sketch of ancient Tamils!

This shows the very basis for the development of the maxim, "Obey your parents!"

In the early days, due to the thick forests, rivers, rivulets and beasts, there was a threat to human lives! That is why the Tamil astrologers (Tamils were the original discoverers of astrology!) told, "In water you have danger!"

But, the later moral treatises, simply told, "Listen to the words of your parents"

They never talked about the threat to life!

Because, by then we had crossed the previous stage about which this story noted!

Corrections While Editing

leaf	*Edition*
puttikaḷai taḷḷi	puttikaḷaittaḷḷi
tiṇṇu	tinṉu
vittupōi	vittuppōi
mayiṟ	mayir
nānettanai	nānettanai

26

கழுவும் நரியும்

கழு, மரத்தின் கிளையின் பேரிலே கூண்டுகட்டிக், குஞ்சு பொரித்துக் கொண்டிருந்துது!

நரி, மரத்தினடியில், பொந்திலே குட்டிபோட்டுக் கொண்டு, குட்டிகளைவிட்டு இரை தேடப் போகாம லிந்தக் கழு, தன் குஞ்சுகளுக்குத், தன் குட்டியை இரை கொடுத்துவிடுமென்று நினைத்துக் கொண்டு, பத்திரமாய்க் காத்துக் கொண்டிருக்கையில், கழு நரியைப் பார்த்துக் கபடமாய், "என்னத்துக்கு இரைதேடித் தின்னாமல் பசியினாலே வருத்தப்படுகிறாய்? நீ இரை சாப்பிட்டாலல்லவா, உன் குட்டிகளுக்குப் பசியாற்ற வேணும்? நீ பயித்தியக்காரத் தனம் பண்ணுகிறாயெ"ன்று பட்சபாதமாய்ச் சொல்லித்துது!

நரி, மெய்தானென்று யோசனை பண்ணி, இரைதேடப் போனவிடத்தில், நரி வருகிறதுக்கு முன்னே கழு, நரிக்குட்டிகளைக் கொத்திக் கிழித்துத் தன் குஞ்சுகளுக்கு இரையாகக் கொடுத்துவிட்டுது!

நரி வந்து பார்த்து, "இந்தக் கழுகு தெய்வத்துரோகி! நம்முடைய கோத்திரத்தை வர்த்தியாம லழித்துப் போட்டுதெ"ன்று, முப்பித்தோ தேவனைப் பார்த்து, அபயமிட்டுக் கொண்டு, துக்கத்தோடே இருக்கையில், முப்பித்தோ கோவில் பூசாரி, கரி நெருப்பிலே இறைச்சிகளை வைத்து, முப்பித்தோ தேவனுக்குப் பொங்க லிடுகையில், கழு சடுதியாய்ப் பறந்து வந்து, கரி நெருப்பிலிருக்கிறவொரு பெரிய இறைச்சித் துண்டு ஒன்றைத் தன் காலினா லிறாஞ்சி எடுத்துக்கொண்டு, தன் கூண்டிலே வைத்துக் கொண்டுது!

இறைச்சியில் ஒட்டிக் கொண்டிருந்த கரி நெருப்புக், கூண்டிலே விழுந்து, கனிந்து, பற்றிக் கொண்டுது!

கழுவின் குஞ்சுகளெல்லாந் தரையிலே விழுந்து விட்டுது! நரி, இதைக் கண்டு, "முற்பகை செய்தால், பிற்பகை விளையும்" என்று குஞ்சுகளைத் துண்டு துண்டாய்க் கடித்துத் தின்னுவிட்டுது!

அப்படிப் போலே, எவனாகிலும் ஒருத்தனுக்குக் கொலை பாதகஞ் செய்வானாகில், அவனுந் தன் சந்ததிகளோடே கொலைப் பட்டுப் போவார்க ளென்றவாறு.

26-ஆம் கதை முடிந்தது.

ஆய்வு :

அரிய கதை இது!

அவ்வளவாக அறியப்படாதது இது!

இதில் பல பழஞ்செய்திகள் உள!

பிரம்மாவுக்குக் கோயில் இருந்த குறிப்பு இதில் உளது!

பிரம்மாவுக்குப் பொங்கல் இட்டு மகிழ்ந்த பழந்தமிழர்கள், இறைச்சிகளைச் சேர்த்தும் படைத்து வந்த அரிய குறிப்பு இதில் உள்ளது! ஆனால், முப்பித்தோதேவன், பிரம்மாவைக் குறித்தால் மட்டுமே இது பொருந்தும்.

'பிரியாணி' என்று சொல்லப்படும் ஊன்கலந்த உணவை முதன் முதலில் உலகுக்குக் கற்றுத் தந்தவர்கள் தமிழர்களே!

ஊன் கலந்த உணவு பற்றிய குறிப்புகளைச் சங்க இலக்கியத்தில் காண்கிறோம், இரவலர்க்கு ஊன் கலந்த - சூடான உணவை அரசர்கள் தந்ததாகச் சங்கக் குறிப்பு உளது!

இதுவே வெளிநாடுகளுக்குச் சென்று, பின்பு அங்கிருந்து, இசுலாமியர் மூலமாக, 'பிரியாணி' என்று இங்கே வந்துள்ளது!

இறைச்சி கலந்து அரிசி சமைப்பது மிகப்பழைய தமிழ்ப் பழக்கம் ஆகும்!

இக்கதையில், பொங்கலிடும் நேரத்தில் இறைச்சி சமைத்த அரிய குறிப்பு உளது!

எனவே, இக்கதை தொன்மை வாய்ந்தது என்பது பெறப் படும்!

'பிரியாணி' எப்படி வெளிநாடுகளுக்குப் பரவியதோ, அதைப் போலவேதான், தமிழ்க் கதைகளும் - இந்நூலில் இடம் பெற்றவை போன்ற கதைகளும் வெளிநாடுகளுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, கி. மு. 5, 6 என்ற காலகட்டங்களில், பரவியிருக்க வேண்டும்!

இறாஞ்சி என்றொரு அருஞ்சொல்லும் இக்கதையில் உள்ளது!

கழுகானது, கீழே தாழ்ந்து, அடித்துக் கொத்தித் தூக்கு வதையே இறாஞ்சி என்ற சொல் குறிக்கிறது.

இந்த அருஞ்சொல்லே, இக்கதை பழங்கதை, பழந்தமிழ்க் கதை என்று கூற ஒரு குறிப்பை நமக்குத் தருகிறது!

வேறொரு புதிய ஆய்வுக்கும் இந்தக் கதை இடம் தந்துள்ளது!

நாம் அறிந்த பழமொழி, "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்பதே!

ஆனால், இக் கதையில், "முற்பகை செய்யின் பிற்பகை விளையும்" என்றே உள்ளது!

இக்கதை கூறும் இந்தப் பழமொழியே உண்மையான பழமொழி! நாம் இன்று கூறிவரும் முற்பகல் என்ற வடிவம், பிற்கால வடிவம் ஆகும்!

பகை மன்னர்கள் மிகுந்து இருந்த ஒரு காலகட்டத்தில், முற்பகை என்று கூற விழைந்திருக்க வேண்டும்! மன்னர் களுக்கு மட்டும் என்றும் கூற இயலாது; குடிமக்களில், ஒருவருக்கு முற்பகை விளைத்தால், அந்தப் பகை காரணமாக, பின்னே

அவனுக்கே பிற்பகை ஒன்று திரளும்! இது அன்றும் இன்றும் பொருந்தும்! இத் தமிழர் தத்துவமே மேற் கதையில் வந்துள்ளது!

கழு என்ற சொல்லாட்சியும் நோக்கற்பாலது!

கழுகு என்ற ஒரு வடிவத்தைத்தான் நாமறிவோம்!

கழுகு என்ற ஒரு சொல் வடிவம் தோன்றுவதற்கு முன்பு, அதே பறவையைக் குறித்த பழந்தமிழ்ச்சொல் கழு என்பது! இச் செய்திக்கு இக் கதையே சான்று!

'வெறும் கதை' என்று சிலரால் ஏளனப்படுத்தப்படும் கதையில் எவ்வளவு பண்பாட்டு ஆய்வு, தமிழாய்வு இருக்கின்றன பார்த்தீர்களா?

பதிப்பில் திருத்தங்கள்

சுவடி	பதிப்பு
இறை	இரை
நறி	நரி
மெய்தாநென்று	மெய்தானென்று
குஞ்சுகளை துண்டு	குஞ்சுகளைத் துண்டு

26

EAGLE AND FOX

An eagle, on a bough of a tree, was dwelling in a nest hatching issues.

A fox at the bottom of the same tree, in a hole, lived issuing young ones.

The fox, fearing that the eagle would take away its young ones and give it to the young eagles in the nest, did not move away from the hole.

The eagle quite cunningly, "Fox, why are you famished? why can't you go and search your food? If only you eat, you can fetch food for your young ones! You are doing foolish act!"

The jackal, believing the eagle's words, went out seeking food!

But, before the fox returns, the eagle pierced the young ones of jackal and gave them to its young ones as food!

The jackal wailed, praying Brahma: "This vulture effaced out my posterity!"

A priest of *Brahma temple*, while cooking rice, was roasting flesh over embers.

The vulture, seeing this, suddenly came down and in a flash took a piece of flesh and kept it in its nest!

The small cinder sticking to the flesh, fell on the nest and slowly set the whole nest on fire!

All the young ones of eagle fell down and died!

Looking at this, the fox, telling, "If enmity is shown, it will recoil back", smashed the young ones of the eagle and ate!

In the similar way, if anyone does the act of killing another, he will have to perish along with his kith and kin!

XXVIth story ended

Research :

A rare story!

Not much known one!

Many ancient informations are available here!

We have a hint that there had been *temple for Brahma*!

Ancient Tamils had the habit of setting boiled rice along with dressed flesh before Brahma in worship! This idea may be received in this story. This holds good if only the term 'Muppitto tevan' denotes Brahma.

The tasty' briyāṇi' was the *donation of Tamils* to the whole world!

In Sangam Literature, we have a plethora of references of cooking rice with meat!

Munificent kings had given wealth to the needy along with the fresh, hot, boiled rice cooked with meat!

So, obviously, Tamils' rice with meat went to foreign countries several centuries ago, perhaps during 7th century

A.D., and returned back through Muslims to our own soil in the name of 'Briyani'!

In our story, while cooking 'pongal', meat also was roasted hinting a support to our above theory.

This is also a clue to suggest that our story may be a very old one.

Just like 'Briyani', told above, many a Tamil stories must have travelled to other countries, perhaps around 5th, 6th centuries B.C.

There is a rare Tamil word, 'iṛāñci' in this present story!

The action of eagle to fly low and picking with a dash has been denoted by the word 'Iṛañci'!

This itself functions as an evidence to proclaim that our story is an ancient one!

This story gives another opportunity for a research!

As we know, the proverb goes: "If evil is done in the forenoon, calamity will befall in the evening".

But, this story furnishes: "If we make enmity "before it will recoil after".

Only this sense or form is the true one! ,'Forenoon' version must be a later development.

In the Tamil land where mutual ware were predominant, the proverb must have expressed only as 'earlier enemity'! This 'enmity' was not intended only by kings; even among common people, if hatred is shown, then it will well return

back with the same velocity at a later stage! This holds good for all time! Only this philosphy of Tamils has found a place in our story!

The word 'kaḷu' is also to be noted!

We know only the form, 'Kaluku!'

The word 'kaḷu' is anterior to the form 'Kaḷuku'; our story ifself is an evidence!

In a small story, see how many nuances, in regard to research, are there !

Corrections while editing

leaf	*edition*
iṟai	irai
naṟi	nari
meitaneṉṟu	meitaṉeṉṟu
kuñcukaḷai tuṇṭu	kuñcukaḷaittuṇṭu

27

எலிராசாவும் அதன் சேனையும்

எலிராசாவு மதின் சேனையு மிராட்சியாரம் பண்ணுகையில், எலிராசா, தன் சேனைகளைப் பார்த்து, "ஓகோ எலிகளே! சாத்துல்யோ மென்கிற பூனை, சடுதியாய் வந்து விழுந்து நாளுக்கு நாள் நம்முடைய வினத்தாரைத் கொன்னு பட்சித்துப் போட்டுது, எத்தனை யென்று சொல்லக்கூடாது!

இப்படி, நாம் சாப்பிடப்பட்டுப் போகாம லிதுக்கொரு உபாயமில்லையா? அந்தத் துஷ்டப் பூனையினாலே நமக்கொரு சேதபாதம் வராம லென்ன செய்வோமெ"ன்று யோசினை கேட்டுது!

அதுகளிலொரு எலி சொன்னதாவது: "அந்தப் பூனை வந்து நம்முட பேரிலே விழும்போது, எல்லாரு மதின்பேரிலே விழுந்து கடித்துக் கொன்னுபோடுகிறது உயித்திய மெ"ன்றுது!

வேறொரு எலி சொன்னதாவது, "அது சடுதியாய் வந்து விழுந்து கவ்விக் கொண்டு போகுது! நாமெப்படி அதைக் கொல்லுகிறது? அது கூடாத காரியமெ"ன்று சொல்லித்துது!

வேறொரு எலி சொன்னதாவது, "ஒரு சலங்கையை" அதின் கழுத்திலே கட்டிவிட்டாலது வருகிறபோது சலங்கைச் சத்தத் தினாலே நாமேலுக்கு வைப்பிட்டு ஓடித் தப்பித்துக் கொள்ள லாமெ"ன்று சொல்லித்துது,

எல்லாயெலியும் இதைக் கேட்டு "நல்ல யோசனை" என்று தீர்மானம் பண்ணி, "ஆர் சலங்கையைக் கட்டுகிறவன்?", "அவன் கட்டுகிறது", "இவன் கட்டுகிறது" என்று சொன்னதல்லாமல், ஒரு எலியாகிலும் அந்தச் சலங்கையைக் கட்டினதில்லை!

இப்படி இருக்கையில், இந்த எலிகளுக்குச் சிநேகிதனா யிருந்த ஒரு அணிப்பிள்ளை, எலிகள் நாசப்பட்டுப் போறதை அறிந்து,

"நீங்களந்தத் துஷ்டப் பூனையைச் செயிக்க உங்களாலே பிலனில்லை! கொஞ்ச நாளையிலே உங்களை அது நாசம்பண்ணிப் போடுகிறது நிச்சயம்!

ஆனபடியினாலே, இந்தத் தலத்தை விட்டுத் தூரதேசம் போறது உத்தமமெ''ன்று சொல்லக் கேட்டு, எல்லா எலியும் தூரதேசம் போய்ச் சீவனைத் தப்பித்துக் கொண்டுது!

அப்படிப்போலே, நல்ல சிநேகிதரைச் சேர்ந்தால், தனக்கு அறிவில்லாவிட்டாலுஞ் சிநேகிதர் சொல் அறிவினாலே, வருகிற இக்கட்டு, பொல்லாப்புகளைத் தப்பித்துக் கொள்ளலாமென்றவாறு.

27-ஆம் கதை முடிந்தது.

குறிப்புகள் :

இக்கதை, பலரும் அறிந்ததே!

எனினும், பெரும்பாலும், பூனை கழுத்தில் மணி (bell) கட்டுவது பற்றியே கதைகளில் உளது!

ஆனால், இக்கதையில், சலங்கை என்று வருகிறது.

மணி உருவாவதற்கு முன்பு ஏற்பட்ட பொருள் சலங்கை என்று கருத இடமுளது.

எனவே, இக்கதை, வழங்கும் கதைகளை விடத் தொன்மை வாய்ந்தது என்று கருதலாம்! ஆங்கிலத்தில், "Who is to bell the cat?" என்றே ஒரு மரபுத் தொடர் உருவாகிவிட்டது! அதற்கு, மேற்கண்ட தமிழர் கதையே அடித்தளமாக இருக்கலாம்.

மேலும், எலிகள் மணியைக் கட்டுவது பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, பூனை வந்ததாகவும், உடனே பேசிய எலிகள் ஓடிவிட்டதாகவுமே கதை, பெரும்பாலும் முடிகின்றது!

ஆனால், ஓலைச்சுவடிக்கதையில், அணில், வெளியூருக்குச் சென்று பிழைக்க அறிவுரை வழங்குவதாகவும், அதை எலிகள் ஏற்றுக் கொள்வதாகவும் வருகிறது!

தமிழ் நிலத்திலே இக்கதை தோன்றியது என்பதற்கான குறிப்பாக இது இருக்கலாம்!

தூரதேசம் போதல் என்ற பண்பாட்டுக் குறிப்பும் இங்கு நோக்கற்பாலது!

இஃது ஆழ்ந்த ஆய்வுக்கு இடம் தருவது!

பல் ஊர்களையும் சுற்றிப் பார்த்து அறிவு திரட்டுதல் என்ற முறை தமிழர் முறை!

இதுதான் தூரதேசம் போதல் என்பது!

இதுவே, நாளடைவில், தேசாந்திரம் என்ற வடசொல்லால், தமிழர்களால் சுட்டப்பட்டது!

இவ்வகையில் பார்க்கும்போது, 'தேசாந்திரம்' தொடர்பான பழைய கருத்துகள் யாவும் தமிழ் மண்ணில் முதன்முதலில் முகிழ்ந்தன என்ற முடிவு ஏற்படலாம்!

சஞ்சாரம் என்றும் இதனையே, தமிழர்கள், புராணங்களில் எழுதிவைத்தனர்!

பதிப்புக் குறிப்புகள்

ஒலை	திருத்தம்
சொல்லரிவு	சொல்லறிவு
யெலி	எலி
அரிவில்லா	அறிவில்லா
விட்டுதூர	விட்டுத்தூர

27

RAT KING AND ITS KINDREDS

When a rat king and its kindreds were in governance, the king rat observed, "O rats! A mischievous cat by name Sāttulyōm, quiet nimbly, pounces on us and thus kills many and many of us; the toll can not be enumarated! There is no way to prevent us from being eaten? What can we do to eschew the danger of the cat ?

So noting, the rat king asked the kindred's advice.

One among the rats told, "When the cat jumps over us, all of us collectively should attack it and pierce!"

Another rat answered: "That rat comes on us very quickly and takes us away catching in its mouth! How can we kill it? It is quite impossible!"

Another rat replied: "If we tie a foot-bell around the neck of the cat, sensing the arrival of it we can easily take to our heels and escape!"

All the rats accepted to this idea.

The question 'who is to bell the cat?" arose! suggestions came as "That will tie", "This will tie" etc., but, nobody came forward !

While the situation was so, a friend to the rats, a squirrel, advised: "You have no strength to win over the wicked cat! Within a few days, it will completely rout you! So, it is better for you to vacate this place and move far away!"

Accordingly, all the rats went to some other country and saved their souls!"

Likewise, if good friends are kept even if personal knowledge is nill, with the friend's wit we can escape from the oncoming difficulties and problems!

XXVIIth story ended.

Notes :-

Many know this story!

But, in all version, there is a reference of 'bell': but in our story in leaf, we see the reference 'Calankai' (foot-bell).

Before the preparation of bell proper, the foot-bells must have been made.

So, our story may be an older one than the extant ones.

For the English usage, "Who is to bell the cat?", perhaps, the above Tamil story may have formed a basis.

Moreover, in the available printed story, when the rats appear on the scene of their discussion to tie a bell, all the rats run away hither and thither and the story ends there.

But, in our palmleaf story, a squirrel advises to escape permanently.

This may be a hint to say that this story must have originated on Tamil soil!

The reference, which is culture oriented, of moving to far off country should be taken note of.

This gives room for a deep research.

Visiting many places and gathering knowledge was an ancient method of the Tamils!

This is nothing but "going to far of countries."

The same thing was written as "tēcāntiram" by Tamils in Sanskrit !

If viewed in this line, a conclusion that all the ideas connection the "tēcāntiram" must have flourished only on Tamil country may be arrived at!

Tamils referred to the very same as 'cañcāram' (moving) in puranas!

Correction

Leaf	*Print*
collarivu	collaṟivu
yeli	eli
arivillā	aṟivillā
viṭṭutūra	viṭṭuttūra

28

மாட்டு மந்தையும் குதிரை மந்தையும்

ஒரு புல் காட்டிலே, மாடு மந்தை ஒரு புறமாய் மேய்கிறது, குதிரை மந்தை ஒரு புறமாய் மேய்கிறது.

இப்படி இருக்கையில், குதிரைகளிலொரு குதிரை, மாடுகளைப் பார்த்து, ''அடே கேளுங்கோள்! நீங்க ளிழிகுலத்தார்! நாங்கள் மேன் குலத்தார்! நீங்கள் எங்களுடனே சரிகட்சியாய் மேயக் கூடாது! எங்களுடனே கலவாமல் தூரத்திலேதானே நீங்கள் மேய வேண்டியதெ''ன்று கண்டிதமாய்ச் சொல்லித்துது!

மாடுகளுக்கு மெத்த ரோசம் வந்து போய், அந்த மாடு களிலொரு மாடு குதிரைகளைப் பார்த்து, ''அடே! நீங்கள் எங்களிலுந் தாழ்ந்தவர்களா யிருக்கிறீர்களெ''ன்று ஈனமாய்ச் சொல்லித்துது!

இதன் பேரிலே, விவகாரப்பட்டு ''மத்தியஸ்திலே தீர்த்துக் கொள்ளுவோ மெ''ன்று பேசிச் சிங்கத்தின்கிட்ட தீர்த்துக் கொள்ளப்போனால் கொன்னு வாயிலே போட்டுக் கொள்ளும்! ஒரு துஷ்ட மிருகத்தின் கிட்டவும் தீர்த்துக் கொள்ளக் கூடாது! நம்மை ஆண்டு கொண்டு வருகிற மனுஷரிடத்திலே போய்த் தீர்த்துக் கொள்ளுவோமெ''ன்று யோசித்து அந்தக் காட்டுக் கடுத்த ஒரு ஊரிலே போய் வடக்கிலிருக்கப்பட்ட பெரிய மனுஷருடனே விவகாரங்களைச் சொன்னதாவது. ''ஆண்ட மார்களே! இந்த மாடுகள் எங்களுக்குச் சரியா யிருக்கப்பட்ட தல்ல! இதுகள் தங்கள் சுமையை எடுத்துக்கெண்டு ஒரு நாளைக்குப் பத்துநாழிவழி நடக்கிறது அரிதாயிருக்குது! நாங்கள் எங்களுடைய எசமானமார்களை எங்கள் முதுகின் பேரிலே ஏற்றிக்கொண்டு ஒரு நாளைக்கு அறுகாத வழி ஓடிச் சேருகிறோம்! நாங்கள் இந்த மாடுகளைப் பார்க்க, அதிகச் சங்கம் பெத்தவர்களெ''ன்று சொல்லித்துது!

மாடுகள் சொன்னதாவது : "ஆண்டவ மார்களே இந்தக் குதிரைகள் எடுக்கிற பாரம் ஒரு ஆள் பாரம் எடுத்துக் கொண்டோடுகிற தல்லாமல், அதிகமிது எடுத்துக் கொண்டோட மாட்டாது! நாங்களிரண்டு பொதிகளைச் சுமந்து கொண்டு இருகாதவழி நடந்து போறோம்! நாங்கள் எடுக்கிற இரண்டு பொதிகளையும் இந்தக் குதிரைகள் எடுத்துக் கொண்டு ஒருகாத வழி ஓடுமானால், குடலெரிந்து செத்துப்போம்! இந்தக் குதிரைகளைப் பார்க்க நாங்களதிகச் சிலாக்கியமு மதிக மகிமையுள்ளவர்களுமாயிருக்கிறோம்!" என்று சொல்லித்துது!

அந்தக் குடியானவர்கள் சொன்ன உத்தாரமாவது, "நீங்களிருவருஞ் சொன்ன காரியங்கள் பெரியக ாரியமாயிருக்குது! ஆனபடியினாலே காத்துக் கொண்டிருங்கோளெ"ன்று சொன்ன தல்லாமல், அந்நாளது வரைக்கும் இந்நாள் மட்டும் அந்தக் குதிரைகளும் மாடுகளுங் காத்துக் கொண்டிருக்கிற தென்றவாறு!

அப்படிப்போலே, எவர்களாகிலுந் தங்களை மெத்தவும் மேன்மையாய்ப் பேசாமல், எல்லாரையும் சமகட்சியாய் நினைத்து நடந்துகொள்ள வேண்டிய தெ"ன்றவாறு.

28-ஆம் கதை முடிந்தது.

ஆய்வு

இக் கதை மிகவும் சுவையானது!

நீதி (Justice) என்ற தலைப்பில் ஆயப்பட வேண்டியது!

தமிழர்கள் நீதிக்குப் புகழ் பெற்றவர்கள்!

குதிரைகளும் மாடுகளும் வழக்குத் தீர்க்கச் சென்ற போது, தமிழர்கள், "இது சிக்கலாக இருக்கிறது! அப்படியே காத்திருங்கள்!" என்று சொன்னதாக இக்கதை தெரிவிப்பது ஆழமான சிந்தனைக்குரியது!

ஒன்று, மாடுகளும் குதிரைகளும், தீர்ப்பைக் கேட்டு இன்னும் அதிகப் பகையே கொள்ளும்; ஆதலால் தீர்ப்பு வழங்காமலே இருக்கலாம் என்று கருதியிருக்க வேண்டும்!

மற்றொன்று, தீர்ப்பு வழங்க இயலாத நேரத்தில், பிழையான தீர்ப்பைச் சொல்லிவிடக்கூடாது என்று எண்ணி, அதுவரை தீர்ப்பு வழங்கக்கூடாது என்று கருதியிருக்க வேண்டும்!

இந்த இரண்டினாலும் தமிழர் மேன்மை புலனாகிறது!

முன்பே, நீதிக்கும் தமிழருக்கும் உள்ள உறவு மேலும் விளக்கப்பட்டுள்ளது! (முனைவர் சு. சௌந்தரபாண்டியன், தமிழர் கண்ட தத்துவம், தாமரை நூலகம், வடபழனி, சென்னை)

இந்தக் கதை, தமிழ் மண்ணில் முகிழ்த்தது என்று கூறலாம்.

வழக்குத் தீர்க்கக் குடியானவர்கள் கூடியது, ஆண்டவ மார்களே' என்றது போன்ற சில சான்றுகளைக் குறிக்கலாம்.

இக்கதை முற்றிலும் தமிழ் மண்ணில்தான் அரும்பியிருக்க வேண்டும் என்பதற்கு இன்னொரு காரணமும் உளது!

அதுதான் குலத்தில் உயர்வு தாழ்வு!

ஆம்! கி.பி. 10-ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலக்கட்டத்தி லிருந்து தமிழகத்தில் சாதிச் சண்டைகளும் பெருகியிருந்தன!

ஒரு சாதியை மற்ற சாதி தாழ்த்த முயன்றது! இன்றும் இது தான் நிலை!

இப்படிப்பட்ட சாதிப்பாகுபாட்டை - குலப்பாகுபாட்டை இக் கதை கொண்டுள்ளதால், இது நிச்சயம் தமிழ் மண்ணிலேதான் உருவாகியிருக்க வேண்டும்!

சுவடிப் பிழைகள்

பிழை	திருத்தம்
போரோம்	போறோம்
குடலரிந்து	குடலெரிந்து
பாற்க்க	பார்க்க
அறிதா	அரிதா

28

‘OX FLOCK’ AND ‘HORSE FLOCK’

In a forest full of grass, a herd of oxen was grazing on one side, while another flock of horses was browzing on other side.

While happening so, one among the horses observed, looking oxen, in a taunting voice, “Ay you! Listen! You are of low caste! We are of high caste! You should not graze here equally like us! Without mingling with us, you have to graze seperately!”

The steed so told with a stern voice!

The oxen were raged and one among the oxen twitted looking at the horses, “You! Actually you are inferior to us!”

Conflicting over this matter, both of them wanted to clear the dispute through a middle person. But they thought that if they went to lion, it would kill and swallow!

So, spurning wild animal, they both decided to settle the dispute before people who were ruling them!

